விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii


E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 வைகாசி 28 செவ்வாய்க்கிழமை (11.06.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 174

## ஐந்து பேர் கொண்ட குழுவால் 26 வயது இளம் குடும்பஸ்தர் சுன்னாகத்தில் அடித்துக் கொலை



(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் உடுவில் பகுதியில் ஐந்து பேர் கொண்ட குழுவால் கடுமையாக தாக்கப்பட்ட இளம் குடும்பஸ்தர் ஒருவர் எட்டு நாட்களின் பின்னர் சிகிச்சை பலனின்றி யாழ் போதனா வைத்திய சாலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

நாகம்மாள் கோவில் வீதியைச் சேர்ந்த ▷24

### புலம்பெயர் தேசத்திலிருந்து யாழ் வந்தபோது

## வீதியில் போடப்பட்டிருந்த சல்லியில் சறுக்கி விழுந்து

### குடும்பஸ்தர் உயிரிழப்பு: கோண்டாவிலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வீதியில் போடப்பட்டிருந்தது சல்லிக் கற்களில் சறுக்கி விழுந்து தலையில் படுகாயமடைந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கோண்டாவில் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

புலம்பெயர்ந்து நோர்வேயில் ▷24

## போரால் பாதிக்கப்பட்ட மக்களை

# மீண்டும் மீண்டும் துன்பப்படுத்தாதீர்கள்

### பழைய செம்மலை பிக்குவிடம் மனோ கணேசன் வலியுறுத்து



முல்லைத்தீவு மக்கள் போரால் பல துயரங்களைச் சந்தித்தவர்கள். அந்த மக்களை மீண்டும் மீண்டும் துன்பப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாம் என அமைச்சர் மனோ கணேசன், பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய சூழலில் விகாரை அமைத்து குழப்பத்தை ஏற்படுத்தும் பிக்குவிடம் கேட்டுக் கொண்டார். ▷24

## பெற்றோலின் விலை 3 ரூபாயால் அதிகரிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் 3 ரூபாயினால் பெற்றோலின் விலையினை அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

ஒவ்வொரு மாதமும் 10 ஆம் திகதி எரிபொருள் விலைச் சூத்திரத்திற்கு அமைய எரிபொருளின் விலையில் மாற்றம் கொண்டு வரப்படும்.

அந்தவகையில் நேற்று திங்கட்கிழமை நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் எரிபொருள் விலையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய 92 ஒக்டைன் பெற்றோல் 3 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் தற்போதைய விலை 138 ரூபாயாகும்.

மற்றைய எரிபொருள் வகைகளின் விலையில் எவ்வித மாற்றமுமில்லை என நிதி அமைச்சு அறிவித்துள்ளது. (ம-3)

### ஈஸ்டர் தின தாக்குதல்

## விசாரணைக்குழுவின் இறுதி அறிக்கை ஜனாதிபதி மைத்திரியிடம் கையளிப்பு



▷03

### வட்டுவில் தீ விபத்து

## கடையொன்று முற்றாகச் சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை, மாவடிச் சந்தியிலுள்ள கடையொன்று திடீரென தீப்பற்றி எரிந்து முற்றாக நாசமாகியுள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ▷24

## தொடரும் தமிழர்களது பிரச்சினை விரைவில் தீர்க்கப்பட வேண்டும்

### கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் வலியுறுத்து



(திருகோணமலை)

நீண்ட காலமாகத் தொடரும் தமிழர்களது பிரச்சினைகள் வெகுவிரைவில் தீர்க்கப்பட வேண்டும் என்றும் இதற்காக அனைவரும் ஐக்கியத்துடன் செயற்பட வேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ▷24

## மு.க.ஸ்டாலின் ஹக்கீம் சந்திப்பு!



(சென்னை)

சென்னையில் நிகழ்ச்சியொன்றில் கல ▷24

## அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி பங்குபற்றாமை

### அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தும் - பந்துல

(கொழும்பு)

பிரச்சினைகளுக்கு தீர்வு பெறும் நோக்கில் அமைக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவு குழுவின் செயற்பாடுகள் தற்போது பிரச்சினைகளை மேலும் வலுப்படுத்தியுள்ளது. அமைச்சரவை கூட்டத்தில் கலந்து கொள்ள மாட்டேன் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளமை அரசியல் நெருக் ▷24

## பாராளுமன்ற தெரிவுக்குழு

### அசாத் சாலியிடம் இன்று விசாரணை

(கொழும்பு)

ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழுவின் விசாரணைகள் இன்று ▷24

## வலயக்கல்விப் பணிப்பாளர்கள் நேற்று நியமனம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளராக எஸ்.சுந்தரசிவம் நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை மாகாணப் பிரதிக் கல்விப் பணிப்பாளராக இருந்த வை.இரவீந்திரன் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளராகவும்,

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளராக இருந்த ஜோன் குயின்றஸ் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வட. மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் அவர்களால் குறித்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளது. (ம-3.10)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## மஹஜன சம்பத

திகதி 2019/06/10
சீட்டிழுப்பு இலக்கம் 3935

K 0 9 5 3 8 3

தேசிய லொத்தர் சபை

## கொவிசெத

திகதி 2019.06.10
சீட்டிழுப்பு இலக்கம் 2144

Z 26 36 55 60

தேசிய லொத்தர் சபை

## சுபிரி வாசனா

திகதி 2019/06/10
சீட்டிழுப்பு இலக்கம் 1433

02 16 28 30 66 40 45

தேசிய லொத்தர் சபை

## மெகா பவர்

திகதி 10/06/2019
சீட்டிழுப்பு இலக்கம் 391

H 26 23 56 57 80



## வேலைக்கு ஆள் தேவை

உணவகம் ஒன்றிற்கு ரொட்டி தயாரிப்பவர் (கொத்து, றைஸ் போடத்தெரிந்தவர்) தேவை. தங்கி நின்று வேலைபுரிவோர் விரும்பத்தக்கது.

077 465 2860 (9073)



## வேலைக்கு ஆள் தேவை

முல்லைத்தீவு பகுதியில் தோட்ட வேலைக்கு ஆள் தேவை. வயதானவர்களும் ஊனமுற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

சம்பளம் மாதம் - 15000/= (C-6593)

தொ.பே:- 0771681697, 0766205322


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### வெளிவாரிப் பரீட்சைகள்
### கலைமாணி (வெளிவாரி)
### முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை - 2014

மேற்படி பரீட்சையை 09.07.2019 (செவ்வாய்க்கிழமை) தொடக்கம் 15.07.2019 (செவ்வாய்க்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.


தொடர் மதிப்பீட்டு புள்ளியினை அடிப்படையாகக் கொண்ட பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகுதியினை அறிந்து பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிப்பதற்காக 14.06.2019 (வெள்ளிக்கிழமை), 15.06.2019 (சனிக்கிழமை), 16.06.2019 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய தினங்களில் மாணவர் பதிவேட்டு புத்தகத்துடன் நேரடியாக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்திற்கு சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மேலதிக விபரங்களுக்கு 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்
10.06.2019

(C-6652)

## அகவை அறுபது கடந்தும் அரும்பணிகள் தொடர்க



### திரு. ஆறுமுகம் ஆனந்தன்

(திடீர் பரிசோதகர், வ.பி.போ.ச யாழ்ப்பாணம்)

ஆனந்தமாய் இருப்பீர்கள் என்று
ஆனந்தன் என்று பெயர் வைத்தனரா – அன்றி
ஆனந்தன் என்று பெயர் வைத்ததனால் – சதா
ஆனந்தமாகவே இருக்கிறீர்களா
பணியில் உயர்ந்தீர்கள்
பதவியிலும் உயர்ந்தீர்கள்
அரச பணியில் மட்டுமே ஓய்வு பெற்றீர்கள்
சமூகப் பணியில் ஓய்வின்றித் தொடர்க!
சகல சௌபாக்கியங்களுடன் ஆனந்தமாய்
வாழ வாழ்த்துகின்றோம்.

நவிண்டில்
சரஸ்வதி அகம்

அன்புடன் வாழ்த்தும்:
மு.சின்னராஜா புனிதவதி
குடும்பத்தினர்

(9098)

## கண்ணீர் அஞ்சலி



### அமரர் நவரத்தினம் ரகுநாதன்

எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி குணேஸ்வரி ரகுநாதனின் அன்புக் கணவர் நவரத்தினம் ரகுநாதன் அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.


கல்லூரிச் சமூகம்,
யா/ இந்து மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(9101)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் மயில்வாகனம் ஜெகநாதன்

### அமரர் ஜெகநாதன் சஞ்சீவன்



மின்னலைப்போல அதற்கிடையில் ஆண்டொன்றாகிற்றா?
எங்கள் முற்றத்திலே இன்று நீங்களில்லை
ஆனாலும் உங்கள் நினைவே நிரம்பியுள்ளது
எங்கள் வீட்டில் உங்கள் குரல் ஒலிக்கவில்லை
ஆனாலும் உங்கள் பேச்சே நித்தமும் கேட்கிறது
எங்கள் அருகில் நீங்கள் இன்றில்லை
ஆனாலும் எம்மில் நீங்களே நிரம்பியுள்ளீர்கள்
எங்கள் நாட்களில் நீங்கள் இப்போதில்லை
ஆனாலும் எம்மை நீங்களே வழிநடத்துகிறீர்கள்
எங்கள் தெய்வமே உயிரின் உயிர்களே
ஜெகம் ஆள வந்த நாதனே
எங்களின் பேறுவே நிறைகுடமே
காலமெல்லாம் சஞ்சீவியாய் ஜீவித்திருப்பாய்
என்றல்லவா எண்ணியிருந்தோம்
ஒரு மின்னற் கணத்தில் இருவருமாகப் பயணித்தீரோ
வாழ்ந்த காலமெல்லாம் எம்மையே நினைத்திருந்தீர்
வாழ்வெல்லாம் நாம் உங்களை நினைத்திருப்போம்



மலர்வு 04-02-1960
உதிர்வு 23-05-2018

மலர்வு 25-12-1986
உதிர்வு 23-05-2018

திதி: வைகாசி பூர்வபக்க நவமி – 11.06.2019

கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
- குடும்பத்தினர் -
077 533 7406

வானகம் போன் சிற்றி
64/121, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சம்பத் வங்கி முன்பாக)
[K.K.S வீதியில் உள்ளது எமது கிளையில்லை]

(9080)

# ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் கண்டறிய நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு இறுதி அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு



(கொழும்பு)

**2019 ஏப்ரல் 21ஆம் திகதி நாட்டில் சில இடங்களில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் கண்டறிவதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட மூவரடங்கிய விசேட விசாரணைக் குழுவின் இறுதி அறிக்கை நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டது.**

உயர் நீதிமன்ற நீதியரசரான விஜித் மலல்கொடவால் இந்த அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டதுடன், விசாரணைக் குழுவின் ஏனைய உறுப்பினர்களான முன்னாள் அமைச்சின் செயலாளர் பத்மசிறி ஜயமான்ன மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்ககோன் ஆகியோர் இதன்போது வருகை தந்திருந்தனர்.

பல அப்பாவி உயிர்கள் பலியாவதற்கு காரணமாகவிருந்த இந்த மோசமான தேசிய துன்பியல் சம்பவத்திற்கு அடிப்படையாக அமைந்த காரணிகள் மற்றும் அதன் பின்புலம் குறித்தும், குறித்த சம்பவங்கள் தொடர்பிலான வேறு காரணிகள் குறித்தும் கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக கடந்த ஏப்ரல் 22 ஆம் திகதி ஜனாதிபதியால் இந்த விசாரணைக்குழு நியமிக்கப்பட்டது.

இரண்டு கட்டங்களாக அமைந்த இந்த விசாரணை நடவடிக்கைகளின் இரண்டு இடைக்கால அறிக்கைகள் இதற்கு முன்னர் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பொதுஜன பெரமுனவின் சார்பிலேயே ஜனாதிபதி, பிரதமர் களமிறக்கப்படுவர்

## காமினி லொக்குகே உறுதி



(கொழும்பு)

பொதுஜன பெரமுன ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியுடன் கூட்டணி அமைத்துத்தான் தேர்தல்களில் வெற்றி பெற வேண்டிய அவசியம் கிடையாது. பொதுஜன பெரமுனவின் சார்பிலே ஜனாதிபதி, மற்றும் பிரதமர் வேட்பாளர்கள் களமிறக்கப்படுவார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

பரந்துபட்ட கூட்டணியமைத்தல் தொடர்பில் இரு தரப்பிலும் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன. பேச்சுவார்த்தைகளில் சுதந்திர கட்சியினர் இணக்கமாக செயற்பட்டு விட்டு பொது இடங்களிலும், ஊடகங்களிலும் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் கருத்துக்களையே குறிப்பிடுகின்றார்கள். கூட்டணி விவகாரத்தில் இவர்கள் முழு ஒத்துழைப்புடன் செயற்படவில்லை.

இரு தலைவர்களின் அரசியல் நோக்கங்களையும் நிறைவேற்றவே நாம் கூட்டணி அமைப்பதற்கு ஆரம்பத்தில் இணக்கம் தெரிவித்தோம். ஆனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் குறிப்பிட்டுள்ள கருத்துக்கள் அவர்களின் அரசியல் எதிர்பார்ப்புக்களை தெளிவுபடுத்தியுள்ளன.

ஒருபோதும் எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷவுடன் இணையப் போவதில்லை என்று குறிப்பிட்டுள்ளமை எந்தவிதத்திலும் பொதுஜன பெரமுனவிற்கு பாதிப்பை ஏற்படுத்தாது.

சுதந்திர கட்சியுடன் பரந்துபட்ட கூட்டணி அமைத்துத்தான் உத்தேசிக்கப்பட்ட தேர்தல்களில் வெற்றி பெற வேண்டும் என்ற தேவை பொதுஜன பெரமுனவிற்கு கிடையாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தேரர்களுக்கு காப்புறுதி



அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள மகா சங்கத்தினருக்கான சாஷன சுரக்ஷன என்ற காப்புறுதித் திட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருகிறது. முதல் கட்டமாக இரண்டாயிரம் தேரர்களுக்கு காப்புறுதி அட்டைகள் வழங்கப்படவுள்ளன. இந்த நிகழ்வு அலரி மாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இடம்பெறவுள்ளது. (இ-7)

# மண்டைதீவு கடலில் படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர்களின் 33 ஆவது நினைவு தினம்









(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு கடலில் படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர்களின் 33 ஆவது நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் இந்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இந் நிகழ்வில் யாழ்.மாநகரசபை முதல்வர் இமானுவேல் ஆனல்ட் மற்றும் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் எஸ்.சுதர்சன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

1986ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் திகதி குருநகர் இறங்கு துறையிலிருந்து கடலுக்குச் சென்ற மீனவர்கள் 31 பேரும் மண்டைதீவு கடலில் வைத்து கடற்படையினரால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-101,106)

# மரண அறிவித்தல்



## அமரர் ஞா.ஞானசேகரம்
(சிவலிங்கம்- பிரபல ஆசாரி)

மாதா கோவிலடி துன்னாலை கரவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞா. ஞானசேகரம் (சிவலிங்கம்- பிரபல ஆசாரி) 10.06.2019 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானம் -அன்னம் தம்பதியினரின் செல்வப்புதல்வனும் அமரர் முருகேசு மற்றும் அற்புதம் தம்பதியினரின் மருமகனும் அன்னபூரணம்(சித்திரா) அவர்களின் அன்புக் கணவரும் தாரணி, டிலக்சன், தர்சினி ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் பிரதீப் அவர்களின் அன்பு மாமனாரும் டினோமிஹாவின் ஆருயிர்த்தாத்தாவும் காலஞ்சென்ற திருப்பதியம்மாவின் அருமைச் சகோதரரும் செல்வநாதன், முரளிதரன், அருந்தவநாதன், சாந்தகுமாரி ஆகியோரின் மைத்துனரும் தேவதாஸ் (கிருபா) அவர்களின் மாமாவும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி இன்று (11.06.2019) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் துன்னாலை சதாசகாய அன்னை ஆலயத்தில் நடைபெற்று கீரிப்பல்லி சேமக்காலையில் உடல் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மாதா கோவிலடி,** (c-6655)
**துன்னாலை**

**தகவல்:-குடும்பத்தினர்**

# தென்னாபிரிக்கா - மேற்கிந்தியதீவுகளுக்கு இடையேயான போட்டி மழையால் கைவிடப்பட்டது


உலகக்கிண்ண கிரிக்கெட் 15-வது லீக் ஆட்டமான தென்ஆப்பிரிக்கா - வெஸ்ட் இண்டீஸ் ஆட்டம் மழையால் கைவிடப்பட்டு உள்ளது.

தென் ஆபிரிக்கா - வெஸ்ட் இண்டீஸ் இடையேயான ஆட்டம் மழையால் கைவிடப் பட்டது

தென்ஆபிரிக்கா தான் விளையாடிய மூன்று போட்டிகளிலும் தோல்வியை சந்தித்துள்ளது. இதனை அடுத்து நேற்றைய போட்டியில் கட்டாயம் வெற்றி பெற வேண்டும் என்ற கட்டாய நிலையில் வெஸ்ட் இண்டீஸை எதிர்கொண்டது.

டாஸ் வென்ற மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் பந்துவீச முடிவு செய்தது. இதனையடுத்து தென் ஆபிரிக்கா அணி முதலில் பேட்டிங் செய்தது. தென்னாபிரிக்கா அணியின் தொடக்க ஆட்டக்காரர் ஆம்லா 6 ரன்களிலும் அதனையடுத்து மார்க்கம் 5 ரன்களிலும் அவுட் ஆனதால் 7.3 ஓவர்களில் தென்னாபிரிக்கா அணி 29 ரன்களுக்குள் 2 விக்கெட்டுக்களை இழந்து தத்தளித்தது.

இந்நிலையில் மழை குறுக்கிட்டதால் போட்டி நிறுத்தப்பட்டது. இதையடுத்து நிண்ட நேரம் ஆகியும் மழை நிற்காததால் போட்டி ரத்து செய்யப்பட்டது என நடுவர்கள் அறிவித்தனர். எனவே இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்படும். போட்டி ரத்தானதால் தென் ஆபிரிக்கா தனது முதல் புள்ளியை பெற்று உள்ளது. ஏற்கனவே இதே தொடரில் இலங்கை-பாகிஸ்தான் போட்டி மழையால் ரத்து செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



# கெயிலின் விருப்பத்தை நிராகரித்த ஐ.சி.சி

வெஸ்ட் இண்டீஸ் அணியின் அதிரடி வீரர் கிறிஸ் கெய்லின் கோரிக்கையை ஐ.சி.சி ஏற்க மறுத்துள்ளது.

உலகக்கிண்ண தொடரின் தென் ஆபிரிக்க அணிக்கு எதிரான ஒருநாள் போட்டியில், இந்திய அணியின் விக்கெட் கீப்பர் டோனி, பாலிதான் முத்திரை பதித்த கையுறைகளை அணிந்திருந்தது வரவேற்பையும், விவாதங்களையும் கிளப்பியது.

அதனைத் தொடர்ந்து, டோனி தன் கையுறையில் இருக்கும் முத்திரையை நீக்க வேண்டும் என்று ஐ.சி.சி வலியுறுத்தியது. இதற்கு விளக்கம் அளித்த இந்திய கிரிக்கெட் வாரியம், டோனியிடம் அதனை நீக்குமாறு கேட்டுக் கொண்டது.

அதன்படி, நேற்று முன்தினம் நடந்த அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான போட்டியில், பாலிதான் முத்திரை இல்லாத கையுறையை டோனி பயன்படுத்தினார். இந்நிலையில், வெஸ்ட் இண்டீஸின் அதிரடி வீரர் கிறிஸ், ஐ.சி.சி-யிடம் கோரிக்கை ஒன்றை வைத்துள்ளார்.

அதாவது, 'யுனிவர்சல் பாஸ்' என்ற லோகோவை தனது பேட்டில் பயன்படுத்த கிறிஸ் கெய்ல் ஐ.சி.சி-யிடம் கோரிக்கை வைத்தார். ஆனால், ஐ.சி.சி இந்த கோரிக்கையை நிராகரித்துவிட்டது. இதுகுறித்து ஐ.சி.சி அதிகாரி ஒருவர் கூறுகையில்,

வீரர்கள் அணியும் ஜெர்ஸி, பயன்படுத்தும் பொருட்களில் அரசியல், மதம் மற்றும் இன உணர்வுகள் இருக்கக் கூடாது என்று விதி இருக்கிறது. அதை கெய்லிடம் கூறினோம் ஏற்றுக்கொண்டார்' என தெரிவித்துள்ளார்.

ஐ.சி.சி தொடர்களில் 'அன்பு' என்ற வார்த்தையைக் கூட வீரர்கள் தங்கள் உடையிலோ, பேட்டிலோ பயன்படுத்தக் கூடாது. அதே நேரம், விழிப்புணர்வுக்காக நடத்தப்படும் இருதரப்பு தொடர்களில் பயன்படுத்திக் கொள்ள விதி இருக்கிறது என தெரிவித்துள்ளார்.

# நான் உடல் தகுதியுடன் இருக்கின்றேன் - ஷாசாத்

ஆப்கானிஸ்தான் வீரர் மொகமது ஷாசாத் முழு உடல் தகுதியோடு இருப்பதாகவும் தனக்கு எதிராக சதி நடப்பதாகவும் தெரிவித் துள்ளார்.

நான் விளையாடுவதற்கு போதுமான உடல் தகுதியுடன் இருக்கிறேன், என்னை ஏன் தகுதியற்றவர் என அறிவித்தனர் என்று எனக்குத் தெரியவில்லை. ஆப்கானிஸ்தான் நிர்வாகம் எனக்கு எதிராக சதி செய்கின்றது என ஷாசாத் தெரிவித்து உள்ளார்.

அணியின் மேலாளர், மருத்துவர் மற்றும் கேப்டன் ஆகியோர்க்கு மட்டுமே எனக்கு பதிலாக மாற்று வீரர் அறிவிக்கப போவதாக அறிந்திருந்தனர். பயிற்சியாளருக்கு கூட பிறகு தான் தெரிவிக்கப்பட்டு உள்ளது. என "32 வயதான ஷாசாத், காபூலில் இருந்து கூறினார்.

நியூசிலாந்தின் விளையாட்டுக்காக "எனது பயிற்சியை நான் முடித்துவிட்டு எனது தொலைபேசியை நான் பார்த்த பிறகு தான் முழங்கால் காயம் காரணமாக உலகக் கிண்ணத்திலிருந்து வெளியேற்றப்பட்டேன் என்பது எனக்கு தெரியும் என அவர் தெரிவித்து உள்ளார்.

இது குறித்து ஆப்கானிஸ்தான் அணியின் தலைமை நிர்வாக அதிகாரி அசாதுல்லா கான் கூறியதாவது,


ஷாசாத் உண்மையில் உடல் தகுதியற்றவர் எனவே தான் அவருக்கு வாய்ப்பு வழங்க முடியவில்லை. இது குறித்த முழு விவர அறிக்கையை ஐசிசியிடம் சமர்ப்பிக்கப்பட்டு உள்ளது என அவர் தெரிவித்தார்.

# யுவராஜ் சிங் ஓய்வு ரசிகர்கள் கவலை

இந்திய அணியின் அதிரடி கிரிக்கெட் வீரர்களில் ஒருவரான யுவராஜ் சிங் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து நேற்று திங்கட்கிழமை (ஜூன் 10, 2019) ஓய்வு பெற்றார்.

பஞ்சாபைச் சேர்ந்த இடது கை துடுப்பாட்ட வீரரான யுவராஜ் சிங், 2011-உலகக் கிண்ணத் தொடரில் இந்தியா கிண்ணம் வெல்ல முக்கிய பங்காற்றினார். ஒருநாள், டி20 ஆட்டங்களில் அபாரமாக ஆடிய நிலையில், புற்றுநோய் பாதிப்பால், கிரிக்கெட் ஆட்டத்தில் இருந்து சிறிது சிறிதாக விலகினார்.

இந்நிலையில் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக மும்பையில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் யுவராஜ் சிங் (வயது-37) அறிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் தெரிவித்ததாவது:



கடந்த 17 ஆண்டுகளாக சர்வதேசப் போட்டிகளில் விளையாடி வருகிறேன். இந்த 22 யார்டுகளில் சுமார் 25 வருடங்களை கழித்துவிட்டேன். வாழ்க்கைப் போராட்டத்தையும் எனக்கு கிரிக்கெட் தான் கற்றுக் கொடுத்தது. கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதற்கு இதுவே சரியான தருணம். எனது கிரிக்கெட் வாழ்க்கை பல ஏற்ற, இறக்கங்களை சந்தித்துள்ளது. அது தற்போது நிறைவடைந்துள்ளது என்றார்.

# டோனி அடித்த சிக்ஸால் கோலி மெர்சல்

12-வது உலக கிண்ண கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் லண்டன் ஓவலில் நேற்று முன்தினம் நடந்த 14-வது லீக் ஆட்டத்தில் முன்னாள் சாம்பியன் இந்திய அணி, நடப்பு சம்பியன்ஆஸ்திரேலியாவுடன் களம் இறங்கியது.

இந்த ஆட்டத்தில் சில சுவாரஸ்யமான சம்பவங்கள் அரங்கேறியது. இதில் ஸ்மித்தை கிண்டல் செய்த ரசிகர்களிடம் அவரை உற்சாகப்படுத்துமாறு இந்திய கேப்டன் விராட் கோலி தெரிவித்தார்.

மேலும் ஆஸ்திரேலியா அணியின் கேப்டன் பிஞ்ச்ரன் அவுட் என்ற முறையில் வெளியேறினார்.

அப்போது வீரர்கள் அறைக்கு சென்று பேட்டால் அறையின் கதவை கோபத்துடன் அடித்துள்ளார். இது தொடர்பான புகைப்படங்கள், வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

இந்நிலையில், இந்திய அணியின் விக்கெட் கீப்பர் டோனி, விராட் கோலி பற்றிய வீடியோவும் வைரலாகி வருகிறது. இந்த போட்டியில் டோனி14 பந்துகளில் 27 ரன்கள் எடுத்தார். இதில் 3 பவுண்டரி 1 சிக்சர் அடங்கும். மிட்செல் ஸ்டார்க் வீசிய பந்தில்





டோனி லெக் திசையில் இமாலய சிக்ஸ் ஒன்றை அடித்தார்.

அந்த சிக்சரை பார்த்த கேப்டன் விராட் கோலி ஆச்சரியத்துடன் பார்த்து டோனியிடம் சிரித்தபடி பேசினார். இந்த வீடியோ சமூக வலை தளங்களில் வைரலாகி வருகிறது.

# விலைகொடுத்து குண்டுத் தாக்குதல் நடத்தியவரை கண்டறிந்தால் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும்

## அமீர் அலி அட்வைஸ்

(கொழும்பு)

**விலைகொடுத்து தொடர் குண்டுத் தாக்குதலை நடத்தியவர் யாரென்பதை கண்டறிந்தால், நாட்டில் எழுந்துள்ள பிரச்சினைக்கு உரிய தீர்வை முன்வைக்க முடியுமென நாடாளுமன்ற உறுப்பினர் அமீர் அலி தெரிவித்தார்.**



பயங்கரவாதத் தாக்குதலை தொடர்ந்து நாட்டில் எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்து ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள நேர்காணலிலேயே அமீர் அலி மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஏதோவொரு தேவைக்காகவே தொடர் குண்டுத் தாக்குதல் விலைக்கொடுத்து நடத்தப்பட்டது.

அதனிலும் கிறிஸ்தவ மக்களை ஏன் இலக்கு வைத்தார்கள் என்ற உண்மையான காரணத்தை கண்டறிய வேண்டும் .

அச்சுறுத்தல் குறித்து புலனாய்வு தகவல்களை பாதுகாப்பு சபையில் தெரிவிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

இதேவேளை பயங்கரவாத சம்பவம் தொடர்பாக ஆராய்ந்து வருகின்ற தெரிவுக்குழுவுக்கு வழங்கப்படுகின்ற சாட்சியங்களில் நிறைய மர்மங்கள் காணப்படுகின்றமையால் வாக்குமூலங்களினும் பலத்த சந்தேகங்கள் எழுந்துள்ளன.

மேலும் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை விலைகொடுத்து செய்யப்பட்ட வேலைத்திட்டமாகவே கருதுகின்றோம்.

ஆகவே இந்தத் தாக்குதலின் பின்னணியில் யார் இருந்தார்கள் என்பதைக் கண்டறிந்தால் பிரச்சினைக்கு இலகுவாக தீர்வைப் பெறமுடியும்" என அமீர் அலி மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஐ.எஸ்.தீவிரவாதிகளுடன் இலங்கையிலிருந்து பேசிய ஐந்து தொலைபேசி இலக்கங்கள் குறித்து தகவல் கசிவு

(டில்லி)

ஐ.எஸ்.பயங்கரவாதிகளுடன் இலங்கையிலிருந்து பேசிய ஐந்து தொலைபேசி இலக்கங்கள் குறித்த தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த தொலைபேசி இலக்கங்களை இந்தியப் புலனாய்வாளர்கள் இலங்கைக்கு வழங்கியுள்ளதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இவ்வாறு வெளியிடப்பட்டுள்ள செய்தியில், உயிர்த்த ஞாயிறு தற்கொலையாளிகள் இருவருடன் தொடர்பில் இருந்த சில இந்தியர்கள் பற்றிய தகவல்களையும், இந்தியா பகிர்ந்துள்ளது. இந்தியாவின் தேசிய புலனாய்வுநிறுவன அதிகாரிகள் இலங்கைக்கு நேரடியாக வந்து உயிர்த்த ஞாயிறு விசாரணைகளில் உதவி புரிந்தனர்.

இலங்கை ஐ.எஸ்வலையமைப்புடன் தென்னிந்தியாவை சேர்ந்தவர்களும் நெருக்கமான தொடர்பை பேணியதால், இலங்கை தாக்குதல் விபரத்தை இந்தியா ஆரம்பத்திலேயே கண்டறிந்திருந்தது.

இந்த விசாரணைகளில், இந்தியாவிலிருந்து இரண்டு ஐ.எஸ் அமைப்பின் தொடர்பிடங்களிலிருந்து இலங்கையுடன் தொடர்பு கொண்டது கண்டறியப்பட்டுள்ளது.

தொலைபேசி வழியாகவோ, சமூக ஊடகங்கள் வழியாகவோ இந்தியாவிலிருந்து தொடர்பு கொள்ளப்பட்ட 4 அல்லது 5 இலங்கை தொலைபேசி இலக்கங்களை, கண்டறிந்துள்ளது. அது குறித்த தகவல்கள் இலங்கை புலனாய்வுத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை தொடர்ந்து, இந்தியாவிலுள்ள சில சந்தேகத்திற்கிடமான ஐ.எஸ்வலையமைப்புக்களின் வெளிநாட்டு அமைப்புக்களை NIA ஆய்விற்குட்படுத்தியபோது, கோயம்புத்தூர் சந்தேக நபர் ஒருவர் அடையாளம் காணப்பட்டார்.

பின்னர் கேரளாவில் ஒருவர் அடையாளம் காணப்பட்டார். ரியாஸ் அபூபக்கர் என்ற அந்த நபர், சஹ்ரானின் பேச்சுக்களை கேட்டு, தற்கொலை தாக்குதல் நடத்த தயாராக இருந்தது விசாரணைகளில் தெரிய வந்திருந்தது.

இதேவேளை, தற்கொலைதாரிகளான இன்சாப், இல்ஹாம் சகோதரர்களுடன் நெருக்கமான தொடர்பில் இருந்த சில சந்தேக நபர்களின் விபரங்களையும் NIA அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர்.

வர்த்தகர் இப்ராஹிமின் மகன்களான அவர்களுடன், இந்த இந்தியர்கள் எப்படியான தொடர்பை வைத்திருந்தார்கள் என்பது இன்னும் உறுதியாகவில்லை.

ஏனெனில், ஹாஜியாரின் குடும்பம் இந்தியாவில் கணிசமான வர்த்தக தொடர்பையும் பேணியுள்ளது. ஹாஜியார் தற்போது விசாரணையில் உள்ளதால், அந்த தொடர்பு வர்த்தக நோக்கமுடையதா அல்லது ஐ.எஸ். தொடர்பா என்ற விசாரணைகள் நடந்து வருகிறது.

இலங்கை தற்கொலைதாரிகளுடன் நெருக்கமாக இருந்த ஆதில் அமீஸ் ஏற்கனவே இந்தியாவின் கண்காணிப்பில் இருந்தவர். Achil Ax என்ற பெயரில் ஐ.எஸ் ஆதரவு இணைய தொடர்பாடல் குழுக்களில் அங்கம் வகித்துள்ளார். இந்த குழுக்கள் "Islam Q&A" என அழைக்கப்படுகின்றன என இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

## குவைத்திலிருந்து 41 இலங்கையர்கள் நாடு திரும்பினர்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து குவைத்துக்கு பணிபுரியச் சென்ற பணியாளர்கள் 41 பேர் நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

குவைத்துக்கு பணிபுரியச் சென்ற 12 பேர், அவர்கள் பணிபுரிந்த வீட்டு எஜமானால் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உள்ளான நிலையில், இலங்கைத் தூதுவராலயத்தில் தங்கவைக்கப்பட்டு நேற்று அதிகாலை நாட்டை வந்தடைந்தனர்.

இவர்களுடன் கடந்த 10 நாள்களாக குவைத்தில் தங்கியிருந்த 29 இளைஞர்களும் நேற்று அதிகாலை 2.10 மணியளவில் கட்டார் விமான நிலையத்துக்குச் சொந்தமான கியூ. ஆர் - 668 விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர். (இ-7)

## இராசி பலன்

**மீனம்:** நட்பு வட்டம் விரிவடையும் நாள், வழிபாடு விருப்பத்தை நிறைவேற்றும், உறவினர் வழியில் மனதில் இனிய செய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மேடம்:** மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் திகைப்படலாம், செய் தொழில் மேன்மையுண்டு.

**இடபம்:** காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவமுண்டு, அடிப்படை வசதி வாய்ப்புகளைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**மிதுனம்:** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும்.

**கும்பம்:** வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், நீங்கள் நல்லவர் என நினைத்த ஒருவரே உங்களுக்கு விரோதமாகச் செயற்படலாம், பிரயாண பயமுண்டு.

**கடகம்:** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், காரிய வெற்றிக்கு கந்தனை வழிபட வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு, கூட்டு முயற்சி வெற்றி தரும்.

**மகரம்:** உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், பயணங்கள் கைகூடும்.

**சிம்மம்:** உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், புண்ணிய காரியங்களில் ஈடுபாடு செலுத்துவீர்கள்.

**தனுசு:** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், பிறர் உதவியுண்டு, கௌரவமான நாள்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, பொது வாழ்வில் புகழ் கூடும், போசன நன்மையுண்டு.

**துலாம்:** பணப்புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம்.

**கன்னி:** விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கி சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், தொழில் முயற்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர்.

**இராசி பலன்** – கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | சூரி, சுக் | செவ், புத, ராகு |
| | | | |
| | | | |
| சனி, கேது | குரு | | சந் |

சந்திராஷ்டமம் சதயம், பூரட்டாதி

11.06.2019

வைகாசி 28, செவ்வாய்க்கிழமை

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு

நவமி முன்னிரவு 9.49 மணிவரை

உத்தரம் பிற்பகல் 2.44 மணிவரை

சுபநேரம் 11.22-11.52 மணிவரை

இராகுகாலம் 2.52-4.22 மணிவரை

வளவன்

## ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

கருவி, மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையத்தின் ஆண்டு விழா நாளை 12 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.45 மணியளவில் கருவி நிறுவனத்தில் கருவி நிறுவனத் தலைவர் க.தர்மசேகரம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சுற்றுலாத்துறைத் தலைவர் பேராசிரியர் த.தேவராஜா, சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர் எஸ்.சர்வராஜா, கோண்டாவில் இராமகிருஷ்ணா வித்தியாலய ஓய்வு நிலை அதிபர் எஸ்.வாமதேவன் ஆகியோர் கலந்து கொள்வர். (5)

## பன்னாட்டு உணவகத்திற்கு எதிராக வழக்கு இன்று

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கசூரினா கடற்கரையில் ஆரம்பிக்கப்பட்ட பன்னாட்டு உணவகத்திற்கு எதிரான வழக்கு இன்று செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் இடம்பெறும்.

காரைநகர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் உள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், வறுமை நிலையிலுள்ள குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கென ஆரம்பிக்கப்பட்ட பாரம்பரிய உணவகக் கட்டடத்தில் சில மாதங்களுக்கு முன் பன்னாட்டு உணவகம் ஒன்றின் கிளை ஆரம்பிக்கப்பட்டது.

இவ் உணவகம் உரிய சுகாதார அனுமதிகளை முறைப்படி பெறவில்லை எனவும் குறித்த உணவகம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் சரிவர நிறைவேற்றப்படவில்லை எனத் தெரிவித்து காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரியால் கடந்த மாதம் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந் நிலையில் காரைநகர் பிரதேச சபைத் தலைவர் மற்றும் செயலாளர் இன்றைய தினம் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு நீதவான் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது. (5-10)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி தெற்கு மீனாட்சி அம்மன் கோவில் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நாளை (12.06.2019) புதன்கிழமை முற்பகல் 10.54 இற்கும் 11.48 இற்கும் இடைப்பட்ட சுபமுகூர்த்த வேளையில் நடைபெறும்.

கும்பாபிஷேகத்தை ஒட்டிய எண்ணெய்க்காப்பு வைபவம் இன்று (செவ்வாய்க்கிழமை) காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை இடம் பெறும். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து பன்னிரு நாட்கள் மண்டலாபிஷேகமும் நடைபெறவுள்ளது. (5)

● ● ● ● ● ● ● ●

(யாழ்ப்பாணம்)

யாழ்.தென்மராட்சி கச்சாய் தெற்கு திருவருள் மிகு பாதாள வைரவர் தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நாளை 12 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.54 மணிமுதல் 11.48 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறும். (5)

## நடமாடும் சேவையில் விண்ணப்பித்த தே.அ.அட்டைகள் இதுவரை கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் கடந்த வருடம் (2018) ஜனாதிபதி செயலகத்தால் ''நிலவெலதர'' நடமாடும் சேவையில் விண்ணப்பித்த தேசிய அடையாள அட்டைகள் இதுவரை கிடைக்கவில்லை என விண்ணப்பித்த மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வடக்கு மாகாணம் முழுவதிலும் கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட குறித்த நடமாடும் சேவையில் புதிதாகத் தேசிய அடையாள அட்டை பெறுபவர்கள், புதுப்பித்தவர்கள், தொலைத்து மீள் அடையாள அட்டைக்காக விண்ணப்பித்தவர்கள் எனச் சுமார் 4 ஆயிரம் பேருக்கு இதுவரை கிடைக்கப் பெறாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது.

உயிர்த்த ஞாயிறு தினத்தில் நாட்டில் ஏற்பட்ட தற்கொலைத் தாக்குதலின் பின் நாடு முழுவதும் பாதுகாப்புப் பிரிவினரின் சோதனை நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன.

இந் நிலையில் வடமாகாணத்தில் அதிகளவிலான வீதிச் சோதனைகள் இடம்பெற்றுவரும் நிலையில் தமக்கான அடையாள அட்டை கிடைக்கப் பெறாததால் தாம் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவித்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில் பிரதேச செயலக அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோது ஜனாதிபதி செயலகத்தால் குறித்த நடமாடும் சேவை முன்னெடுக்கப்பட்டதாகவும் அதன்பிரகாரம் சகல பிரதேச செயலகங்களிலிருந்து ஏறக்குறை 4 ஆயிரம் பேர் வரை தேசிய அடையாள அட்டைக்காக விண்ணப்பித்த நிலையில் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் நிதி விடுவிக்கப்படாத நிலையில் தேசிய அடையாள அட்டைகளைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

தேசிய அடையாள அட்டை அவசியமாகத் தேவைப்படுபவர்கள் தமது சேவைக்கான அங்கீகரிக்கப்பட்ட தொகையினை செலுத்திப் பெற்றுக் கொள்ள முடியுமென அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (5-10)




## தேசிய கலை இலக்கியப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் தேசிய கலை இலக்கியப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பாலர்பிரிவு, சிறுவர் பிரிவு, கனிஷ்ட பிரிவு, சிரேஷ்ட பிரிவு, திறந்த பிரிவு (18 வயதிற்கு மேல்) ஆகிய பிரிவுகளின் கீழ் நடத்தப்படவுள்ள இப்போட்டிகளில் கையெழுத்துப்போட்டி, கவிதைப்பாடல் போட்டி, கட்டுரைப் போட்டி, பாடல் நயத்தல் போட்டி, நாடகப் பிரதி எழுதுதல் போட்டி, பாடலாக்கப் போட்டி, நாட்டார் கலை கற்றல் போட்டி, இலக்கிய விபரணப் போட்டி, சிறுகதை போட்டி, சிறுவர் கதை போட்டி முலவான போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகள் தொடர்பான விபரங்களையும் நிபந்தனைகளையும் அலுவலக நேரத்தில் பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் ஆர்வமுடையவர்கள் 2019.06.19 ஆம் திகதிக்கு முன்னர் ஆக்கங்களை சமர்ப்பித்து மேற்படி போட்டிகளில் பங்குபற்றுமாறு பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி கேட்டுக்கொண்டுள்ளார். (5)

## தே.அ.அட்டை கிடைக்கப்பெறாதவர்கள் கிராம உத்தியோகத்தரை அணுகவும்

### பரு.பிரதேச செயலாளர்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட நடமாடும் சேவை 2018.10.14 இல் யா/வடஇந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் 422 பொதுமக்கள் தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பித்து இருந்தார்கள். 11 பேர் புதிதாக தேசிய அடையாள அட்டை பெறுவதற்கும் 72 பேர் தொலைந்த அடையாள அட்டை பெறுவதற்கும் 339 பேர் அடையாள அட்டையைத் திருத்துவதற்கும் விண்ணப்பித்திருந்தார்கள்.

அவ்வாறு விண்ணப்பித்தவர்களில் இதுவரை தேசிய அடையாள அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் உடனடியாக தங்கள் கிராமத்திற்கு உரிய கிராம உத்தியோகத்தரைத் தொடர்பு கொள்ளுமாறு பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி கேட்டுக்கொண்டுள்ளார். (5)

## விபத்தில் மாணவன் காயம்

(யாழ்ப்பாணம்)

வேகமாக வந்த மோட்டார்சைக்கிள், துவிச்சக்கர வண்டியில் சென்ற மாணவனை மோதியதில் மாணவன் காயமடைந்தான்.


இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை மீசாலை புத்தூர் சந்தியில் இடம்பெற்றது.

மீசாலை வடக்கைச் சேர்ந்த மகிந்தன் தில்லியன் (வயது-14) என்ற மாணவனே வையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டான். (இ-10)

## போதை ஒழிப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுகோள்

### அத்தியட்சகர் நியால் தல்துவ





(யாழ்ப்பாணம்)

போதை ஒழிப்பு, போதை நிவாரண வாரத்தையொட்டி வேலைத் திட்டங்கள் தொடர்பான கருத்தரங்கு கடந்த சனிக்கிழமை யாழ்.தலைமை பொலிஸ் நிலையத்தில் யாழ்.மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் நியால் தல்துவ தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் கமகே, சாவகச்சேரி கொடிகாமம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் தசநாயக, யாழ்.போதனா வைத்தியசாலை மனோதத்துவ வைத்தியர் ம.சுரேந்திரன் மற்றும் பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், விளக்கவுரையாளர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம மட்ட பிரதிநிதிகள், ஓய்வு நிலை அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இக்கருத்தரங்கு யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, வட்டுக்கோட்டை, கோப்பாய், மானிப்பாய், சாவகச்சேரி, கொடிகாமம், சுன்னாகம் ஆகிய 9 பொலிஸ் பிரிவுகளிலிருந்து இந்த வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கு தெரிவு செய்யப்பட்ட திட்ட செயற்பாட்டாளர்களுக்கான கருத்தரங்காக அமைந்தது.

யாழ்.போதனா வைத்தியசாலை மனோதத்துவ வைத்தியர் ம.சுரேந்திரன், போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் பிரச்சினையும் அதனை தடுப்பதற்கான வழிவகைகள் பற்றியும் போதைக்கு அடிமையானவர்களை எப்படி இனங்காண்பது போன்ற கருத்துக்களை வழங்கினார்.

யாழ்.மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் நியால் தல்துவ கருத்துத் தெரிவிக்கையில்,

போதைப் பொருளுக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை 7 ஆயிரத்திற்கும் மேல் அதிகரித்துள்ளதாக தெரியவந்துள்ளதுடன் அவ்வாறு போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை மீட்டெடுப்பதற்கான வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இளைஞர்களுக்கிடையில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது. ஜனாதிபதியின் அறிவித்தலின் பிரகாரம் இலங்கையிலுள்ள 483 பொலிஸ் நிலைய பிரிவிற்குட்பட்ட அனைத்து பிரதேசங்களிலும் இந்த வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 26 ஆம் திகதி போதைப்பொருளுக்கு எதிரான தேசிய தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் 09.06.2019 - 08.07.2019 வரையான ஒருமாத கால வேலைத் திட்டமாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது என வும் தெரிவித்தார்.

யாழிலுள்ள 9 பொலிஸ் நிலையங்களிலும் போதைப்பொருள் மற்றும் மதுபானம் கசிப்பு விற்பனை, கஞ்சா விற்பனை செய்கிற அனைத்து விதமான போதைப் பொருட்களையும் விற்பனை செய்கிறவர்களை கண்டறிந்து கைது செய்ய வேண்டும். அவ்வாறு கைது செய்பவர்களுக்குரிய தண்டனை வழங்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.


போதைக்கு அடிமையானவர்களை மூன்று பிரிவாக பிரித்து அவர்களுக்கான செயற்றிட்டங்களை செயற்படுத்தவுள்ளதாகவும் பாடசாலை மாணவர்கள், வயதானவர்கள், இளைஞர்கள் ஆகியோர் போதைப் பொருட்களை பாவிக்க முன்பு இவர்களுக்கு எவ்வாறான அறிவுரைகளை வழங்க முடியும். போதைக்கு அடிமையானவர்களை அதிகளவில் போதையினால் பாதிக்கப்பட்டவர்களை மனோதத்துவ வைத்தியரிடம் சிகிச்சைக்காக அனுப்பப்படுவார்கள்.

போதைக்கு அடிமையாகி மீளமுடியாமல் இருப்பவர்களை சமூகத்தில் நல்ல நிலைக்கு கொண்டு வருவதற்கான புனர்வாழ்வு அளிப்பதற்கான வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தச் செயற்றிட்டத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பதற்கு அனைத்து பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் சிவில் பாதுகாப்பு குழுத் தலைவர்கள், ஓய்வு நிலை அதிபர்கள், ஆசிரியர்கள், சமூக நலன்விரும்பிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், கிராம மட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எல்லோரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். (5-10-114)

# கதிர்வெட்டுப்புழுவும் அவற்றை இனங்காணலும்

கடந்த வருடம் சோளப் பயிர்ச் செய்கையில் ஏற்பட்ட படைப் புழுக்களின் தாக்கத்திலிருந்து விவசாயிகள் மீண்டெழுந்து வருகின்றனர். தற்போது விவசாயிகள் மிக மும்முரமாக சிறுபோக நெற்பயிர்ச்செய்கையை ஆரம்பித்துள்ள நிலையில் இவ் வேளையில் பேரிடியாக கதிர் வெட்டுப்புழுவின் தாக்கம் மிகத்





தீவிரமாக ஏற்பட்டு வருகின்றது. இது தற்போது குருநாகல் மாவட்டத்தில் அவதானிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் இதனை தவறுதலாக படைப்புழுவின் தாக்கமாக கருதி அச்சமடையத் தேவையில்லை.

மித்திம்னா செப்பரேட்டா **(Mythimna Separata)** என்ற விஞ்ஞானப்பெயரை கொண்ட இக்கதிர்வெட்டுப்புழுவானது நெற்பயிரின் நாற்றுப்பருவத்தில் பிரதான சேதத்தை ஏற்படுத்துகின்றது. இக்கதிர்வெட்டுப்புழுக்கள் கூட்டமாக ஒரு நெல்வயலில் இருந்து மற்றுமோர் வயலுக்கு இடம்பெயருகின்றது. இப்புழுக்கள் நெற்பயிரில் நாற்றுக்களின் முழு இலையையும் உண்பதுடன் இவை நெற்கதிர்களையும் உட்கொள்வதன் விளைவாக பயிர்களின் வளர்ச்சி நிறுத்தப்பட்டு விடும்.

இப்பீடையின் தாக்கம் அதிகரிப்பதற்கு பின்வரும் காரணிகள் சாதகமாக உள்ளன.

பல்வேறு மாற்று விருந்து வழங்கிகள் காணப்படல்

உதாரணம் - குதிரை வாற் புல், குரக்கன், குளவரகு

அடைமழையை தொடர்ந்து வரும் நீண்டவரட்சி

இதன் வாழ்க்கை வட்டமானது ஏறத்தாழ 30-35 நாட்கள் வரை காணப்படுகின்றது. இது நிறை அனுசேப உருமாற்றத்தை கொண்டமைந்தவை.

முட்டை, குடம்பி, கூட்டுப்புழு, நிறையுடலி ஆகிய வாழ்க்கை வட்டப்பருவங்களை உடையது. முட்டைகள் பெண் அந்துக்களினால் இரவு வேளையில் இலைகளின் கீழ் பரப்பில் வரிசையாக ஒன்றன்மீது ஒன்று இடப்படும். ஒவ்வொரு பெண்நிறையுடலி அந்தும் ஏறத்தாழ 300-500 வரையிலான முட்டைகளை இடும். முட்டைகள் 4-5 நாட்களில் பொரித்து குடம்பிகள் (மயிர்கொட்டிகள்) வெளிவரும். இக்குடம்பியானது ஆறு இடைநிலை பருவங்களைக் கொண்டது.

குடம்பியானது நீண்ட தடித்த அழுத்தமான பச்சைகலந்த கறுப்பு நிறமானது உடலில் நீளப் போக்கில் அமைந்த வரியமைப்பு காணப்படும். இவை 3-5 சென்ரிமீற்றர் நீளமானவை. பகல்வேளைகளில் குடம்பிகள் இருளான இடங்களில் மறைந்து கொள்ளும் குடம்பிப்பருவம் ஏறத்தாழ 15 நாட்களாகும். முதிர்ந்த குடம்பியானது மண்ணில் கூட்டுப் புழுவாக மாறிக்காணப்படும். இக்கூட்டுப்புழுக்கள் செங்கபில நிறமுடையவை. ஏறத்தாழ 15 நாட்களின் பின்னர் நிறையுடலியாக மாறும்.

நிறையுடலிகள் இரவு நடத்தைக்குரியவை. இவை முற்சோடி சிறகுகள் சாம்பல் கலந்த மஞ்சள் நிறமானவை. அத்துடன் கடும்சாம்பல் அல்லது சிவப்பு கலந்த மஞ்சள் சாயத்தை உடையவை. இதன் ஓரங்களில் வட்ட உருவான அல்லது சிறுநீரக வடிவான புள்ளிகள் காணப்படும். பிற்சோடி சிறகுகள் நரை நிறமானவை. வெளிப்புற எல்லைகள் கடுமையான நிறமுடையவை.

### தாக்கத்தின் அறிகுறிகள்.

இப்புழுக்களின் தாக்கமானது பயிர் வளர்ச்சிப் பருவத்தில் இலைகளின் நரம்புப்பகுதி உட்பட இலையின் பெரும்பகுதி அகற்றப்பட்ட நிலையில் காணப்படும். இவை விருத்தியடையும் நெல் மணிகளின் உள்உமி, வெளி உமி மற்றும் பூக்களில் உள்ள கேசரங்களையும் உண்ணும். நாற்று மேடைகளில் பெரிய கோணவடிவ பிளவு போன்ற தோற்றத்தில் நாற்றுக்கள் வெட்டப்பட்டு ஒழுங்கற்ற தோற்றம் ஏற்படும். சேதமானது பெரும்பாலும் வயலின் ஒரு குறித்த பகுதி வழியே ஏற்பட்டிருக்கும்.

சேதம் தீவிரமாக உள்ள நிலையில் ஒரே நேரத்தில் பல வயல்கள் பாதிப்படையும். நெல் மணிகள் நிரம்பும் பருவத்தில் முதிர்ந்த குடம்பிகள் நெற்கதிரின் அடிப்பகுதியை வெட்டுவதனால் அவை மடிந்து காணப்படுவதுடன் சில முற்றாக நிலத்தில் வெட்டி விழுத்தப்படும். இது இப் புழுவின் தனித்துவமான ஒரு இயல்பாகும்.

### பீடை முகாமைத்துவம்.

❖ சுழற்சி முறை பயிர்ச் செய்கையை மேற்கொள்ளல்.

❖ அதிக எண்ணிக் கையான மட்டங்களைத் தோற்றுவிக்கும் பயிர்வர்க்கங்களை பயிரிடல்.

❖ வயலை ஆழமாக உழுதல்

❖ பீடைத்தாக்கம் மிக குறைவாக உள்ள நிலையில் பாதிப்படைந்த நாற்றுக்களை புழுக்களுடன் சேர்த்து பிடுங்கி அழித்தல்.

❖ நெல்வயலை சூழவும் வயலினுள்ளும் காணப்படும் களைகளை அகற்றுதல்.

❖ நாற்றுமேடைகளில் நீரை தேக்கி கட்டுதல்.

❖ எருக்கலை இலைகளை சிறுதுண்டுகளாக வெட்டி வயலினுள் பரவலாக தூவுதல்.

❖ சிறிய குழிகள் அல்லது சால்களை அமைத்து இலைகளால் மூடிவிடல். பகல் வேளைகளில் பெருமளவான புழுக்கள் இவ்விடத்தில் காணப்படும். அவற்றை சேகரித்து பின்னர் அழித்தல்.

❖ வயல் நிலங்களைச் சூழ அகழிகளை வெட்டி அவற்றை மரச்சாம்பலினால் நிரப்புவதன் மூலம் வயலில் புழுக்கள் உள்நுழைவதை தடுத்தல்.

❖ வயலைச்சூழ சிறிய கிளைகளை இட்டு புழுக்கள் ஒன்று கூடுவதற்கான இடத்தை வழங்குவதன் மூலம் அவற்றை இலகுவாக சேகரித்து அழிக்கலாம்.

❖ கொக்கு, மைனா போன்ற பறவைகளுக்கு இருப்பிடத்தை வழங்கி அவற்றைக் கவர்ந்து இழுப்பதன் மூலம் இப்புழுக்களை உண்ணச் செய்தல்.


❖ சிபார்சு செய்யப்பட்ட பின்வரும் இரசாயனங்களைப் பயன்படுத்தி இவற்றை அழிக்க முடியும்.

❖ எமாமக்ரின்பென்சோவேற் 5% SG. ஒரு ஹெக்டேயருக்கு 130 கிராம்

❖ குளோரன்ரலனிப்புரோல் 20%SC ஒரு ஹெக்டேயருக்கு 100 மில்லி லீற்றர்

❖ தயோமெதொக்சாம் + குளோரன்ரலனிப்புரோல் 20% ஒரு ஹெக்டேயருக்கு 100 கிராம்

❖ ஸ்பினிரோசாட் 25g/L SP ஒரு ஹெக்டேயருக்கு 480 மில்லி லீற்றர்.



சி.இராஜேஸ் கண்ணா, உதவிப்பணிப்பாளர்,
பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும்
அபிவிருத்தி நிலையம், கிளிநொச்சி.

# மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் 150 வருட யூபிலி விழா



(மன்னார்)

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் 150 ஆவது ஆண்டு பூர்த்தி யூபிலியை முன்னிட்டு மன்னார் மாவட்டத்தை மையப்படுத்தி பல்வேறு நிகழ்வுகள் நேற்று திங்கட்கிழமை பாடசாலையின் அதிபர் அருட்சகோதரர் ரெஜினோல்ட் தலைமையில் ஆரம்ப நிகழ்வுகள் இடம்பெற்றன.

அந்த வகையில், திங்கட்கிழமை காலை மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம் மானுவல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் பாடசாலையில் விசேட திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பல்வேறு நிகழ்வுகள் பாடசாலை மைதானத்தில் இடம் பெற்றன.

குறித்த நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவல் பெர்னாண்டோ ஆண்டகை, பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், மன்னார் மாவட்ட அரச அதிபர் சி.ஏ. மோகன்றாஸ், மன்னார் வலயக்கல்வி பணிப்பாளர் ஜே.ஜே. பிரட்லி உட்பட அருட்தந்தையர்கள், திணைக்கள தலைவர்கள், இராணுவ, பொலிஸ் அதிகாரிகள் பழைய மாணவர்கள் எனப் பலர் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நேற்று திங்கட்கிழமை தொடங்கி அடுத்தவருடம் ஜூன் 10 ஆம் திகதி வரை யூபிலி ஆண்டாக பிரகடனப்படுத்தி ஒரு வருடம் பல்வேறு பட்ட கலை கலாசார பணிகளை முன்னெடுக்கவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (9-285)

# மன்னார் சமுர்த்தி பயனாளிகளில் புத்தளத்தை சேர்ந்தவர்கள் இணைப்பு



(மன்னார்)

மன்னார் சமுர்த்திப் பயனாளிகளில் புத்தளம் மாவட்டத்தை சேர்ந்த பயனாளிகள் சேர்க்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் குற்றம் சாட்டியுள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் புதிய சமுர்த்தி பயனாளிகளுக்கான உரித்துப் படிவம் வழங்கும் நிகழ்வு மன்னார் நகரசபை மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது, மன்னார் மாவட்டத்தின் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் சேர்ந்த 10,113 பேருக்கு உரித்துப் படிவங்கள் வழங்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

"மன்னார் உப்புக்குளத்தை சேர்ந்த வயோதிப தாய் ஒருவர் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட தனக்கு சமுர்த்தி உரித்து வழங்கவில்லையென்றும், ஆனால் புத்தளத்தைச் சேர்ந்த 120 பேரின் பெயர்கள் சமுர்த்தி உதவி பெறுபவர்களாகக் காட்சிப் படுத்தப் படுத்தப்பட்டிருந்ததாகவும் குறிப்பிட்டார்.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த வறுமைக் கோட்டிற்குட்பட்ட எந்த சமூகத்தினருக்காவது சமுர்த்தி உதவியை வழங்குங்கள்.

ஆனால் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களை இங்கு சமுர்த்தி பயனாளிகளாக இணைக்க வேண்டாம்.

வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இங்கு பயனாளிகளாக இணைக்கப்பட்டார்களா ? என்பதைப் பாராளுமன்ற உறுப்பினர் ரிசாட் பதியுதீன் தெளிவுபடுத்த வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (9-285)

# நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் விசாரணைகள் குறித்து சந்தேகம்

## கர்தினால் மல்கம் ரஞ்சித் வெளிப்படுத்தல்

(கொழும்பு)

**உயிர்த்த ஞாயிறு அன்று இலங்கையில் இடம் பெற்ற குண்டுத் தாக்குதல்தொடர்பான விசாரணைகள் குறித்து ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகளால், தாக்குதலுக்குப் பொறுப்புக்கூறவேண்டியவர்கள் தொடர்பில் உரிய முறையில் தகவல்கள் வெளிப் படுத்தப்படுமா? என்ற சந்தேகம் எழுவதாக பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்தார்.**




அம்மீமன பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு சந்தேகம் வெளியிட்டார்.

இந்தத் தாக்குதல் பல ஆண்டுகளாக திட்டமிடப்பட்ட ஒருவேலைத்திட்டத்தின் பிரதிபலனாகும்.

இது இலங்கையில் திட்டமிடப் பட்ட செயற்பாடா? அல்லது வெளிநாட்டில் திட்டமிடப்பட்டதா? என்பது தொடர்பில் விசாரணைகள் முடியும்வரை தெரிவிக்கமுடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# நாட்டில் சீரற்ற வானிலை காரணமாக 3 இலட்சத்திற்கும் அதிகமானோர் பாதிப்பு



(கொழும்பு)

நாட்டில் சீரற்ற வானிலை காரணமாக 3 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டனர்.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக நாட்டின் 20 மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள சீரற்ற வானிலை காரணமாக 3 இலட்சத்து 61 ஆயிரத்து 5 பேர் இதுவரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடும் காற்றுடன் கூடிய மழையால், 123 இற்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் மண்சரிவு எச்சரிக்கை காரணமாக, 75 குடும்பங்களைச் சேர்ந்த 277 பேர் பாதுகாப்பான 5 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, நாட்டின் சில பகுதிகளில் மழையுடனான காலநிலை நீடிக்க கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

காலநிலை அவதான நிலையத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இதற்கமைய மேல், தென், மத்திய, சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களில் இடைக்கிடை இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-7)

# பெற்றோல் குண்டுத் தாக்குதல்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு - மண்முனை, நாவற்காடு பகுதியிலுள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்க கட்டடத்தின் மீது நேற்று அதிகாலை பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

மோட்டார்சைக்கிளில் வந்த இனம் தெரியாத நபர்கள் பெற்றோல் குண்டை வீசி விட்டு சென்றனர்.

பலநோக்கு கூட்டுறவுச் சங்க கட்டடமானது நேற்று மூடப்பட்டிருந்தமையால் எவ்வித சேதங்களும் ஏற்படவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பில் கட்டடத்தின் காவலாளி பொலிஸாருக்கு தகவல் வழங்கிய நிலையில் அங்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். (இ-7)

# கண்டியில் வெடிபொருட்கள் மீட்பு

(கொழும்பு)

கண்டி - தவுலகல - பங்கலாவத்த பகுதியில் கற்பாறை மீதிருந்து வெடிபொருட்கள் சில மீட்கப்பட்டன.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இவை மீட்கப்பட்டன.

இதன்போது 127 டெட்டனேட்டர்கள் உள்ளிட்ட சில வெடி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் குறித்து இதுவரையில் எந்தவொரு சந்தேக நபர்களும் கைது செய்யப்படவில்லை.

இச் சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

# தேசிய அடையாள அட்டை விநியோகிக்க நடவடிக்கை

டிசெம்பர் மாதம் இடம்பெறவுள்ள கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு தேவையான தேசிய அடையாள அட்டைகள் ஓகஸ்ட் மாதத்திற்கு முன்னர் விநியோகிக்கப்படும் என ஆட்பதிவு திணைக்களத்தின் செயற்பாட்டு மற்றும் தகவல் தொழில்நுட்ப ஆணையாளர் தெரிவித்தார்.

இதுவரை ஒரு இலட்சத்து 75 ஆயிரம் விண்ணப்பங்கள் ஆட்பதிவுத் திணைக்களத்திற்குக் கிடைத்துள்ளதாகவும் இன்னும் சுமார் 25 ஆயிரம் மாணவர்களின் விண்ணப்பங்கள் கிடைக்க வேண்டியுள்ளதாகவும், இவ் விண்ணப்பங்களை விரைவாக ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்குமாறு அத் திணைக்களம் பாடசாலை அதிபர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வாகனங்களை இன்னும் கையளிக்கவில்லை

# முஸ்லிம் அமைச்சர்கள் பதவி துறப்பு வெறும் கண்துடைப்பு- பந்துல கருத்து



(கொழும்பு)

முஸ்லிம் அமைச்சர்கள் பதவி விலகியமை வெறும் கண்துடைப்பு என நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

றிசாத் பதியுதீன் மீது முன் வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்காக, அனைத்து முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சுப் பொறுப்புக்களைத் துறப்பதாக அறிவித்தனர். ஆனால் அவர்கள் தங்களது வாகனங்களை இன்னும் கையளிக்கவில்லை.

இதேவேளை, அவர்கள் அமைச்சர்களாக இருந்த போது வழங்கப்பட்ட பாதுகாப்பு இன்னும் குறைக்கப்படவில்லை. இது ஒரு கண்துடைப்பு நடவடிக்கை மாத்திரமே என்று பந்துல குணவர்த்தன தெரிவித்தார். எவ்வாறாயினும், முஸ்லிம் அமைச்சர்கள் பதவி விலகியமை தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு நேற்றுமுன்தினம் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரணைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது கவலையளிக்கிறது

## சமன் ரத்னப்பிரிய கூறுகிறார்



(கொழும்பு)

கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி நடந்த தாக்குதல் தொடர்பில் விசாரிக்க நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் விதம் தொடர்பில் கண்டறிவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சபாநாயகர் கருஜெயசூரிய ஆகியோரைச் சந்திக்கவுள்ளதாக சிவில் சங்கங்கள் மற்றும் தொழிற் சங்கள் ஒன்றியம் தெரிவித்தது.

அடுத்த வாரத்துக்குள் இச் சந்திப்பு இடம்பெறவுள்ளதாக சிவில் சங்கங்கள் மற்றும் தொழிற் சங்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சமன் ரத்னப்பிரிய கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் தகவல்கள் வெளிவந்துகொண்டிருக்கையில் சிலர் அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது தொடர்பில் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் நாம் கவலையடைவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தத் தெரிவுக்குழுவின் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவிடமும் வேண்டுகோள் விடுப்பதாகவும் சமன் ரத்னப்பிரிய மேலும் தெரிவித்தார். (இ-7)

பதவி துறந்த முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு

# மகாநாயக்க தேரர்களின் அழைப்பு அடிப்படைவாதத்துக்கு தக்க பதிலடி

## அமைச்சர் கிரியெல்ல தெரிவிப்பு

**(புஸ்ஸலாவ)**

**அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்த முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு மகாநாயக்க தேரர்கள் விடுத்துள்ள அழைப்பு அடிப்படைவாதத்துக்கு எதிரான பதிலடியாகவும் மத நல்லிணக்கத்துக்குப் பலமாகவும் அமைந்துள்ளது என அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.**



தற்போது சிலர் பௌத்த மதம் அழிந்து வருவதாக சமூகத்தில் பொய்யான நிலைப்பாட்டை உருவாக்க முயற்சிக்கின்றனர்.

பல நூற்றாண்டுகள் ஐரோப்பியரின் ஆதிக்கம் நாட்டில் காணப்பட்ட போது அழியாத பௌத்த மதத்தை தற்போது அழிக்க முடியாது.

சிலர் தமது சுயநலத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே இவ்வாறான கருத்துக்களை மக்கள் மத்தியில் தோற்றுவித்து பிரச்சினையை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

புஸ்ஸலாவை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.(இ-7)

---

எம் இனத்தவர்கள் மீதான

# குற்றச்சாட்டுக்களை நாளைக்குள் விசாரணை செய்ய வேண்டும்

## பைசல் ஹாசிம் வலியுறுத்து



நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களையடுத்து முன்னாள் முஸ்லிம் அமைச்சர் றிசாத் பதியுதீன் மற்றும் முன்னாள் ஆளுநர்கள் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, அசாத்சாலி ஆகியோர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நாளைக்குள் விசாரணை செய்ய வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் பைசல் ஹாசிம் வலியுறுத்தினார்.

ஆரம்ப சுகாதார சேவைகளை வலுப்படுத்தும் செயற்றிட்டத்திற்கமைய உலக வங்கியின் நிதியுதவியுடன் ஒலுவில் பிரதேச வைத்தியசாலை 3 கோடி 60 இலட்சம் ரூபாய் நிதியில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இதற்கான சுகாதார சேவை நிலைய புதிய கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றுபட்டு எங்களது நிலைப்பாட்டை சகல அரசியல் கட்சிகளுக்கும் தெரிவித்து வருகின்றோம். எங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நாளை 12 ஆம் திகதிக்கு முன்னர் விசாரணை செய்வதற்கு காலக்கெடு விதித்துள்ளோம்.

முஸ்லிம்கள் நிம்மதியாக இந் நாட்டில் வாழ்வதற்கு பெரும்பான்மை சமூகம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இலங்கையில் 75 சதவீதமான மக்கள் தொற்றா நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உலக வங்கியின் நிதி உதவியில் இலங்கையில் தொற்றா நோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சுகாதார அமைச்சால் முன்னெடுக்கப்படும் இவ் வேலைத் திட்டத்திற்கு இவ் வைத்தியசாலையும் தெரிவு செய்யப்பட்டது.

இச் செயற்றிட்டத்தின் ஊடாக வைத்தியசாலையில் நீண்டகாலமாக நிலவுகின்ற பௌதீக வளப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதோடு வைத்திய ஆய்வு கூடம், கதிர் இயக்கப் பிரிவு மற்றும் அதனுடன் இணைந்ததாக மேலும் பல வைத்திய வசதிகள் இவ் வைத்தியசாலைக்கு வழங்கப்படும்.

இலங்கையில் உலக வங்கியின் நிதி உதவியுடன் ஆரம்ப சுகாதார சேவைகளை வலுப்படுத்தும் செயற்றிட்டத்திற்கு நாடளாவிய ரீதியில் 50 வைத்தியசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதற்கமைய கல்முனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் ஒலுவில் பிரதேச வைத்தியசாலை மற்றும் மத்தியமுகாம் மாவட்ட வைத்தியசாலை என்பன தெரிவு செய்யப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

---

# குறை'களை' பதிகம் 39

## பண்பாட்டுச் சின்னங்கள் பத்திரம்! பத்திரம்!



கந்தையானாலும் கசக்கிக்கட்டு
என்ற சிந்தையில் வாழ்ந்த இனம்
சந்தியில் குப்பை கொட்டி
தன்வீட்டைச் சுத்தம் செய்கிறது

எனக்கென்ன எனக்கென்ன என்று
எதிலும் அசண்டை
என் வீதி, என் ஊர்
என் நாடு, என் உலகம்
எக்கேடு கெட்டால் எனக்கென்ன என்று
எம் வீட்டைச் சுத்தம் செய்து
எதிர்வீட்டு வாசலிலே
எதையெதையோ கொட்டுகிறோம்

ஆரியகுளம் எங்கள்
பண்பாட்டுச் சின்னம்
அதைக் கொஞ்சம் எட்டிப்பாரும்
ஐயையோ என்ன நாற்றம்

மந்திரி மனை எங்கள்
இறுதி மன்னனின் சொத்து
எப்படி வைத்திருக்கிறோம் அதை?

கோட்டை எங்கள் அடையாளம்
அதில் காதலர்கள் செய்யும் லீலை
முகம் சுளிக்க வைக்கிறது

வீர வரலாறு பேசிய பண்ணைக்கடலில்
பியர் ரின்கள் மிதக்கிறது

எங்கும் எதிலும் சுயநலம்
வீதிகளில் குப்பைகளைக் கொட்டி
பொதுநலத்தைக்
குழிதோண்டிப் புதைத்துவிட்டு
எங்கள் அடையாளச் சின்னங்களை
அவமதித்து அழியவிட்டு
எம் அடுத்த சந்ததியை ஏதுமில்லா
ஏதிலி இனமாக்கிக் கொண்டிருக்கிறோம்

**மாவை.நா.கஜேந்திரன்**

---

# நினைவு அடிக்கல் நீக்கம்



(யாழ்ப்பாணம்)

வரலாற்றுத் தவறாக கடந்த 11 வருடங்களுக்கு முன் பொருத்தப்பட்ட நினைவுக் கல் நேற்று நீக்கப்பட்டது. கடந்த 5 வருடங்களுக்கு முன் யாழ்ப்பாண நூலகத்தின் நினைவுநாளில் வெளியிடப்பட்ட எனது புத்தகத்தில் குறிப்பிட்டதை கடந்த 38 ஆவது வருட நினைவுதினத்தில் முதல்வருக்கும் ஆணையாளருக்கும் நினைவுபடுத்தியதுடன் அவர்கள் அக்கல்லை எடுக்காவிட்டால் அதிலிருக்கும் எனது பெயரை நானே சுத்தியல் கொண்டுவந்து அழிப்பேன் என்று கூறியிருந்தேன்.

இந்நிலையில் இந்த நினைவுக்கல் அகற்றப்பட்டதற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என யாழ்.மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் தங்க.முகுந்தன் தெரிவித்தார்.(இ-7)

# சுதந்திரபுரம் படுகொலையின் 21 ஆம் ஆண்டு நினைவு நாள்

## உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு






(பனிக்கன்குளம்)

சுதந்திரபுரம் பகுதியில் கடந்த 1998 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் திகதி இராணுவத்தின் விமான தாக்குதல் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட செல் தாக்குதல்களில் அநியாயமாக படுகொலை செய்யப்பட்ட 33 அப்பாவி பொது மக்களுடைய 21 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று உணர்வு பூர்வமாக இடம்பெற்றது

வன்னிக்குரோஸ் தாயக உறவுகள் நினைவேந்தல் அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று காலை ஒன்பது முப்பது மணிக்கு சுதந்திரபுரம் நிரோஜன் விளையாட்டுக் கழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருக்கின்ற விசேட நினைவிடத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வில் பொதுச்சுடரினை குறித்த தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேரை பறிகொடுத்த பெற்றோரான புஸ்பநாதன் இந்திராணி ஆகியோர் ஏற்றிவைத்தனர். அதனைத் தொடர்ந்து ஏனையவர்களும் திரு உருவப்படத்துக்கு சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள்.

குறித்த நிகழ்வில் முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஆண்டிஐயா புவனேஸ்வரன், புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தவிசாளர் செல்லையா பிரேமகாந்த் மற்றும் உறுப்பினர்கள் குறித்த தாக்குதலில் தங்களுடைய உறவுகளை பறிகொடுத்தவர்களின் உறவினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (9-281)

## பலத்த பாதுகாப்புடன் முஸ்லிம் பாடசாலைகள் ஆரம்பம்

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் உள்ள அனைத்து முஸ்லிம் பாடசாலைகளும் தீவிர சோதனைகள் மற்றும் பாதுகாப்பின் மத்தியில் நேற்று ஆரம்பமாகியது.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் மற்றும் நோன்பு பெருநாள் விடுமுறையைத் தொடர்ந்து இரண்டாம் தவணைக்கான கற்றல் நடவடிக்கைக்காக நேற்று முஸ்லிம் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்நிலையில் பாடசாலை சமூகத்தினருடன் பொலிஸாரும் இணைந்து வவுனியா மாவட்டத்தில் உள்ள அனைத்து முஸ்லிம் பாடசாலைகளிலும் தீவிர சோதனை நடவடிக்கையினை மேற்கொண்டதுடன், மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் பைகள் சோதனை செய்யப்பட்டு பாடசாலைக்குள் அனுமதிக்கப்பட்டனர். (9-250)

### உழவியந்திரம் தடம்புரண்டதில் இருவர் படுகாயம்

முல்லைத்தீவு வற்றாப்பளை கேப்பாபிலவு வீதியில் நேற்று முன்தினம் உழவியந்திரம் தடம்புரண்டதில் அதில் பயணித்த இருவர் படுகாயமடைந்துள்ளார்கள்.

மாமூலை முள்ளியவளையினை சேர்ந்த க.ஜெயராசாசிங்கம் (வயது-55), வற்றாப்பளை முள்ளியவளையினை சேர்ந்த பி.அகிலன் (வயது-25) என்பவரும் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுமேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (9-281)

## கசிப்பு உற்பத்தி செய்த இருவர் பொலிஸாரால் கைது


(மன்னார்)

மன்னார் அடம்பன் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஈச்சளவக்கை காட்டுப்பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்த சந்தேகத்தின் பேரில் தந்தை மகன் இருவர் அடம்பன் பொலிஸாரால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் இரவு குறித்த காட்டுப்பகுதியில் பொலிஸார் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது குறித்த காட்டுப்பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்யும் நோக்குடன் 2 பரல்களில் கோடா எனப்படும் கசிப்பு பதனியை உடைமையில் வைத்திருந்த போது குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டதுடன் அவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையையும். மேற்கொண்டுள்ளனர். (9-286)

### கிராமிய நீர்வழங்கல் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டல்



நாட்டுக்காக ஒன்றிணைவோம் என்ற தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் குடிநீர் பிரச்சினைக்கு முகம் கொடுத்து வருகின்ற திருமுறிகண்டி கிராமத்தை இலக்காகக் கொண்டு சமூக நீர்வழங்கல் திணைக்களத்தின் கிராமிய நீர்வழங்கல் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த வாரம் திருமுறிகண்டி பகுதியில் இடம்பெற்றது

இதற்கான அடிக்கல்லினை ஜனாதிபதி செயலகத்தின் உதவிச் செயலாளர் லலித் பண்டார, ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் த.அகிலன், திருமுறிகண்டி கிராம அலுவலர் ந.ஜெயசுதன் மற்றும் சமூக நீர்வழங்கல் திணைக்களத்தின் பொறியியலாளர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் கலந்து கொண்டனர். (9-281)

# புதுக்குடியிருப்பு மல்லிகைத்தீவு கள்ளியடி தனியார் காணிக்குள் அத்துமீறி அகழப்படும் கிரவல்மண்

## தடுத்து நிறுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு மல்லிகைத்தீவு கள்ளியடி பகுதியில் உள்ள தனியாருக்கு சொந்தமான காணியில் அடாத்தாக கிரவல் மண் அகழும் நடவடிக்கை தொடர்வதாக பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வனவள திணைக்களத்தின் காணி என தெரிவித்து மேற்படி கிரவல் மண் அகழும் செயற்பாடு எல்லை மீறி போவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

மல்லிகைத்தீவு கள்ளியடி பேராற்றுக் கரையோரமாக சுமார் 50 ஏக்கர் நிலப்பரப்பு தனியாருக்கு சொந்தமானதாக உள்ளது. 1990 ஆம் ஆண்டுகளில் 24 குடும்பங்கள் அப்பகுதியில் வாழ்ந்துள்ளனர். இறுதி யுத்தத்தின் போது குறித்த காணிக்குரிய உரிமைப்பத்திரங்கள் அழிந்துள்ளன. சிலர் உறுதிப்பத்திரங்களை தற்போது வைத்தும் உள்ள[illegible]

இந்த நிலையில் குறித்த [illegible] வனவளத்திணைக்களத்துக்குரியது என தெரிவித்து அங்கு கிரவல் மண் அகழும் நடவடிக்கை இடம்பெற்று பல்வேறு தேவைகளுக்காக வெளி மாவட்டங்களுக்கு இங்கிருந்து கிரவல் ஏற்றிச்செல்லப்படுகின்றது என மக்கள் தெரிவிக்கின்றனர்.

இயற்கையை, வளங்களை பாதுகாக்குமாறு நாட்டின் ஜனாதிபதி தெரிவிக்கும் அதேவேளை மறுபுறம் அதற்கு எதிரான செயற்பாடுகள் அரச திணைக்களங்களது சிபாரிசுடன் நடைபெறுகிறது என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அனுமதிப்பத்திர விதிமுறைகளை மீறி பாரியளவில் கிரவல் மண் அகழப்படுகின்றது. அதிகாரிகள் இதை கண்டு கொள்ளாது இருக்கிறார்கள். குறிப்பாக 10 அடி ஆழத்தில் பள்ளங்களை அகழ்கிறார்கள். அப்பகுதியில் இருந்த கள்ளியடி காத்து அந்தோனியார் வீதியை மேற்படி மண் அகழ்ந்தோ அதை அழித்து விட்டார்கள். மழை காலங்களில் அப்பகுதியூடாக விவசாயிகள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த காணியை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஆனால் இதை அதிகாரிகள் கண்டு கொள்ளாமல் இருக்கிறார்கள். அண்மையில் பொது அமைப்புக்கள், ஊர் மக்கள் இணைந்து எதிர்ப்பு தெரிவித்து குறித்த செயற்பாட்டை தற்காலிகமாக நிறுத்தினார்கள். ஆனால் மீண்டும் குறித்த செயற்பாடு இடம்பெறுகிறது.

குறிப்பாக கிரவல் அகழும்போது பாரிய மரங்கள் அழிக்கப்படுகின்றன. பாரிய குழிகள் தோண்டப்பட்டும் இன்றுவரை அவை மூடி மீள் மரநடுகை மேற்கொள்ளாதபோது புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் எவ்வாறு அனுமதி வழங்குகிறது என கேள்வி எழுப்பியுள்ளனர். எனவே இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை [illegible]ள்ளனர். (9)

# வீட்டுத்திட்டம் வழங்கக் கோரி வவுனியாவில் கிராம மக்கள் போராட்டம்





(குருமன்காடு)

வவுனியா தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் அலுவலகத்திற்கு முன்பாக வீட்டுத்திட்டம் கோரி பொதுமக்களால் போராட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வ்வுனியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கணேசபுரம் மற்றும் சமயபுரம் நாவலர் வீதி பகுதியைச் சேர்ந்த கிராம மக்கள் வவுனியா தேசிய வீடமைப்பு அதிகார சபயின் அலுவலகத்திற்கு முன்பாக தங்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கக் கோரி மேற்குறித்த போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

போராட்ட இடத்திற்குச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் மற்றும் வவுனியா தெற்கு பிரதேச சபையின் உபதலைவர் மகேந்திரன் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பொதுமக்களுடன் கலந்துரையாடியதுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் தொலைபேசியில் கலந்துரையாடினார்.

அதன் பின்னர் வவுனியா மாவட்ட செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. எ.கிருபாசுதன், வவுனியா தேசிய வீடமைப்பு அதிகார சபையின் உதவி மாவட்ட முகாமையாளர் மற்றும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த கிராமத்திற்கு பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரும் போராட்ட இடத்திற்கு வருகை தந்து மக்களுடன் கலந்துரையாடினார்.

விரைவில் இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடி தீர்வினை பெற்றுத்தருவதாக அதிகாரிகள் வாக்குறுதி யளித்த போதிலும் தங்களது வீடுகளை தற்போது வந்து பார்வையிட்டு தீர்வு பெற்றுத்தரவேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் தெரிவி த்து வீடமைப்பு அதிகாரசபை யின் அலுவலகத்திற்கு முன்பாக அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பெண் ஒருவரும் மயங்கி விழுந்தார்.

அதன் பின்னர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களுடன் குறித்த அதிகாரிகளும் பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானும் பொதுமக்களின் வீடுகளை பார்வையிடச் சென்றனர்.

மேற்படி போராட்டத்தில் வவுனியா சமயபுரம் நாவலர் வீதியில் வசிக்கும் 15 குடும்பத்தினரும் கணேசபுரத்தில் வசிக்கும் 25 குடும்பத்தினருமே போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (9-250)

## சிறுவர் பூங்கா திறந்து வைப்பு



"நாட்டிற்காக ஒன்றிணைவோம்" தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் துணுக்காய் பிரதேச நியூ லக்கிஸ்ரார் இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த வாரம் சிறுவர் பூங்கா திறந்து வைக்கப்பட்டது.

துணுக்காய்ப் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி சுகந்தனின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஜனாதிபதி செயலக உத்தியோகத்தர் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் திருமதி. சரோஜா மற்றும் துணுக்காய் பிரதேச செயலாளர் கு.பிரபாகரமூர்த்தி, முன்னாள் வட மாகாண பிரதி அவைத் தலைவர் வ.கமலேஸ்வரன், துணுக்காய் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள், விளையாட்டுத்துறை உத்தியோகத்தர், கழக வீரர்கள், சிறுவர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (9-281)




## வவுனியாவில் 2520 பேர் சமுர்த்தி பயனாளிகளாக இணைவு

வறுமையற்ற இலங்கையை உருவாக்குவோம் என்னும் தொனிப்பொருளில் வவுனியாவில் சமுர்த்தி நிவாரண உரித்துப் படிவம் வழங்கும் நிகழ்வு மாவட்ட அரச அதிபர் ஐ.எம். ஹனீபா தலைமையில் நேற்று முன்தினம் நகரசபை மைதானத்தில் நடைபெற்றது. ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் தயாகமகே மற்றும் முன்னாள் அமைச்சரும் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினருமான றிசாத் பதியுதீன் ஆகியோரினால் குறித்த சமுர்த்தி நிவாரண உரித்துப் பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது, வவுனியா மாவட்டத்தில் கிராம உத்தியோகத்தர் பிரிவு ஒன்றில் 60 பேர் வீதம் 42 கிராம உத்தியோகத்தர் பிரிவிலிருந்து 2520 பேருக்கு புதிய முத்திரை வழங்கப்பட்டது. அத்துடன் பயனாளிகளுக்கு மரக் கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள மாவட்டப் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், அரச அதிகாரிகள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (9-250)



## முல்லை.நீராவியடி பிள்ளையார் ஆலயத்துக்கு சென்ற அமைச்சர்

நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகப் பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற்காக நேற்று முல்லைத்தீவுக்குச் சென்ற அமைச்சர் மனோ கணேசன் நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்துக்கு சென்றிருந்தார்.

அங்கு அமைக்கப்பட்டிருக்கின்ற விகாரையினுடைய விகாராதிபதியைச் சந்தித்து கலந்துரையாடியதுடன் குறித்த பகுதியையும் பார்வையிட்டிருந்தார். (9-281)


## பிரதி பொலிஸ்மா அதிபர் மன்னாருக்கு திடீர் விஜயம்

(மன்னார்)

புதிதாக பதிவியேற்றுள்ள வடமாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் ரவி விஜய குணவர்த்தன நேற்றுத் திங்கட்கிழமை மன்னாருக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் இடம்பெற்ற அணி வகுப்பு நிகழ்விலும் கலந்து கொண்டதுடன் மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் மரக்கன்று ஒன்றை நாட்டி வைத்தார்.

மேலும் மன்னார் மாவட்டத்திலுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளையும் சந்தித்து உரையாடியிருந்தார். (9-285)



## புதுக்குடியிருப்பு-பரந்தன் வீதியில் வேகத்தை குறைக்குமாறு வேண்டுகோள்

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு-பரந்தன் வீதியில் பயணிக்கும் தனியார் பேருந்துகள் அதிவேகமாகச் செல்வதால் அதிகளவில் விபத்துகள் ஏற்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக, புதுக்குடியிருப்பு - பரந்தன் வீதியில் காலை வேளையிலும் மாலை வேளையிலும் வேலை முடிந்து தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவர்களையும் தொழில் பேட்டைகளில் பணிபுரிபவர்களையும் ஏற்றிச் செல்லும் தனியார் பேருந்துகள் அதிவேகமாகச் செல்வதால் விபத்துக்கள் பல ஏற்பட்டுள்ளன.

இதேவேளை, வீதியில் செல்லும் பாடசாலை மாணவர்கள் முதல் அனைவரும் குறித்த பேருந்துகள் செல்லும் போது அச்ச உணர்வுடனேயே செல்ல வேண்டியுள்ளதாக மக்கள் விசனம் தெரி வித்துள்ளனர். (9)

## முதியோருக்கான ஆயுள்வேத வைத்திய முகாம்

(பனிக்க்குளம்)

நாட்டுக்காக ஒன்றிணைவோம் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட திருமுறிகண்டி கிராம அலுவலர் பிரிவில் முதியோருக்கான ஆயுள்வேத வைத்திய முகாம் கடந்த வாரம் இடம்பெற்றது.

திருமுறிகண்டி கிராம உத்தியோகத்தர் ந.ஜெயசுதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அனைத்து வயோதிபர்களும் வைத்திய பரிசோதனைக்கு உட் படுத்தப்பட்டு அவர்களுக்கான ஆயுர்வேத மருந்துகளும் வழங்கப்பட்டன. (9-281)



கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் உலக சுற்றுச்சூழல் பாதுகாப்பு வார நிகழ்வு கடந்த வாரம் சுற்றாடல் முன்னோடிக் குழுவின் பொறுப்பாசிரியர் வி.நரேஸ்குமார் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கரைச்சி பிரதேச சபை செயலாளர் க.சண்முகதாசன், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி வலய சுற்றாடல் முன்னோடி ஆணையாளர் ரீ.நிகேதன், கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட சுற்றாடல் அலுவலர் பி.திவாகரன், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். சூழலை பாதுகாத்தல் மற்றும் வளிமாசடைவதை தடுக்கும் நோக்குடன் விருந்தினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து 40 இற்கும் மேற்பட்ட மரங்களை நாட்டினர்.

## வியாபார நிலையத்திலிருந்து குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக உள்ள வியாபார நிலையத்தில் முதியவர் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் வியாபார நிலைய த்தில் குறித்த நபர் உயி ரிழந்த நிலையில் இருப்பதை அவதானித்த அருகிலுள்ள வியா பாரிகள் மாங்குளம் பொலிஸாரு க்கு தகவல் வழங்கியதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த மாங்குளம் பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டு சட லத்தை மீட்டனர்.

இந்துபுரம் திருமுறிகண்டி யைச் சேர்ந்த நான்கு பிள்ளை களின் தந்தையான 58 வயது டைய ஆறுமுகம் குமாரராஜா என்பவரே சடலமாக மீட்கப்பட்டு ள்ளார். இச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (9-281)

# பாரதம்

## பள்ளத்தாக்கில் லொறி கவிழ்ந்து விபத்து 9 தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழப்பு

(காஷ்மீர்)

காஷ்மீரில் பள்ளத்தாக்கு ஒன்றில் லொறி கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 9 சிறுவர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில் இருந்து சீமெந்து மூட்டைகளை ஏற்றிக்கொண்டு கூலித் தொழிலாளர்களுடன் லே பகுதிக்கு சென்ற லொறியே நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இவ்வாறு விபத்துக்குள்ளானது.

குறித்த லொறி லமயுரு பகுதியில் சென்றுகொண்டிருந்த போது, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டுவிலகி ஆழமான பள்ளத்தாக்கில் வீழ்ந்துள்ளது.



இதன்போது, லொறி கடுமையாக உருக்குலைந்ததுடன், அதில் இருந்த சீமெந்து மூட்டைகளும் பள்ளத்தாக்கில் சிதறின.

இந்த விபத்தில், லொறியின் இடிபாடுகளுக்குள் சிக்கி 9 தொழிலாளர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இதில் பெண்கள் மற்றும் சிறுவர்களும் அடங்குவர் என்பதுடன் உயிரிழந்தவர்கள் அனைவரும் 2 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து லொறிச் சாரதி அங்கிருந்து தப்பியோடியுள்ளதுடன், இவ்விபத்து குறித்த மேலதிக விசாரணையை காஷ்மீர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (7)

## நீட் தேர்வு அடித்தட்டு மாணவர்களின் மருத்துவ கனவிற்கான தடைக்கல்

### கனிமொழி சுட்டிக்காட்டு



நீட் தேர்வு அடித்தட்டு மாணவர்களின் மருத்துவ கனவிற்கான தடைக்கல் எனவும், இந்த விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் தி.மு.க குரல் எழுப்பும் எனவும் தி.மு.க மக்களவை உறுப்பினர் கனிமொழி தெரிவித்துள்ளார்.

அத்துடன் தி.மு.க. பாடசாலை நடத்தினால் அங்கு இரு மொழிக் கொள்கையே செயற்ப டுத்தப்படும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

சென்னை ராயப்பேட்டையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர், அடித்தட்டில் இருக்கக்கூடிய பல மாணவர்களின் மருத்துவக் கனவை நீட்தேர்வின் மூலம் அரசாங்கம் அழித்துக் கொண்டிருக்கின்றது.

தனியார் நிறுவனங்கள் நடத்தக் கூடிய பாடசாலைகள் குறித்து தி.மு.க. பதில் கூற முடியாது. ஆனால் தி.மு.க. பாடசாலை நடத்துமாக இருந்தால் அதில் நிச்சயமாக இருமொழி கொள்கைதான் பின்பற்றப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (7)

## சோமாலியாவில் கடுமையான வறட்சி 20 இலட்சம் பேர் உயிரிழக்கும் அபாயம்

### ஐ.நா. அச்சம்

(ஜெனிவா)

சோமாலியாவில் நிலவிவரும் கடுமையான வறட்சி காரணமாக சுமார் 20 இலட்சம் பேர் உயிரிழக்கக்கூடும் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் அவசரகால மீட்புப் பணியகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சோமாலியாவில் அதிகரித்துள்ள வெயிலின் தாக்கத்தால் கடுமையான வறட்சி நிலவி வருகிறது. இதன்காரணமாக அங்குள்ள மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், 20 இலட்சம் மக்கள் உணவின்றி உயிரிழக்கக் கூடிய சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


கால்நடைகளும் பயிர்களும் அழிந்து வரும் சூழலில், மீட்புப் பணிகளுக்காக சுமார் 70 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் அவசர கால மீட்புப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.


தண்ணீருக்காக மாத்திரம் சோமாலியா, கென்யா மற்றும் எதியோப்பியா உள்ளிட்ட நாடுகளுக்கு ஐ.நா. சுமார் 45 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## சூடானில் நடைபெற்று வரும் உள்ந

## பேச்சுவார்த்தை மூலம் தீர்வு கா

### போப் பிரான்சிஸ் வலியுறு





(வத்திக்கான்)

**சூடானில் நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போருக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண வேண்டும் என போப் பிரான்சிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

## கைதிகள் பரிமாற்றச்

## ஹொங்கொங்கில் மக்கள்




(ஹொங்கொங்)

கைதிகளை சீனாவுக்கு நாடு கடத்த வகை செய்யும் சட்ட திருத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஹொங்கொங்கில் பல்லாயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் திரண்டு மாபெரும் போராட்டம் நடத்தினர்.

ஹொங்கொங் முதலில் இங்கிலாந்தின் காலனி நாடாக இருந்து வந்தது. 1997ஆம் ஆண்டு அது சீனாவின் சிறப்பு நிர்வாகப் பகுதிகளில் ஒன்றாக மாறியது. சீனாவின் நேரடிக் கட்டுப்பாட்டில் இந்த நாடு உள்ளது.

இங்கிலாந்து உள்ளிட்ட 20 நாடுகளுடன் கைதிகள் பரிமாற்றத்துக்கு ஹொங்கொங் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. ஆனால் சீனாவுடன் மட்டும் கைதிகள் பரிமாற்றத்துக்கு ஒப்பந்தம் எதுவும் செய்து கொள்ளவில்லை.

கடந்த 20 ஆண்டுகளாக இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

இந்த நிலையில், ஹொங்கொங்கில் குற்றவியல் வழக்குகளில் சிக்குகிற

## கத்துவா சிறுமி கொலை வழக்கு; எழுவரில் ஆறு பேர் குற்றவாளிகள்

### நீதிபதி தீர்ப்பு

(ஜம்மு)

ஜம்மு - காஷ்மீரின் கத்துவா மாவட்டத்தில் கடந்த 2018ஆம் ஆண்டு பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டு பின் கொலை செய்யப்பட்ட 8 வயது சிறுமி குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கு பஞ்சாபின் பதன்கோட் நீதிமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கு தொடர்பில் ஏழு பேர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்த நிலையில், அவர்களுள் 6 பேர் குற்றவாளிகள் என நீதிபதி தீர்ப்பிட்டுள்ளார்.

இதன்படி குறித்த வழக்கில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த கிராம தலைவர் சஞ்சி ராம், சிறப்பு பொலிஸ் அதிகாரிகளான தீபக் காஜூரியா, சுரேந்தர் வர்மா மற்றும் தலைமைப் பொலிஸ் அதிகாரியான திலக் ராஜ் உள்ளிட்டவர்கள் குற்றவாளியாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளனர்.

ஜம்மு - காஷ்மீரில் தொலைந்துபோன தனது குதிரையை தேடிச் சென்ற சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டு பின் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்த சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்ததுடன், இது தொடர்பில் ஏழு பேர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

5

(கா

ஆப்

சோதன

பயங்க

ஸாருக்

சமரில்

கள் உ

கள்.

# வெளிநாடு

## நாட்டுப்போருக்கு காணவேண்டும்!

### யுறுத்து

சூடான் நாட்டில் ஜனாதிபதிக்கு எதிரான போராட்டம் தீவிரமடைந்த நிலையில், இராணுவப் புரட்சி காரணமாக ஆட்சி கவிழ்க்கப்பட்டு ஜனாதிபதி பதவி நீக்கம் செய்யப்பட்டார். புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற இராணுவ தளபதியும், மக்களின் எதிர்ப்பு காரணமாக பதவியை ராஜினாமா செய்தார். அதன்பின்னர் சிவில் ஆட்சியை ஏற்படுத்த வலியுறுத்தி பொதுமக்கள் தீவிர போராட்டம் நடத்தி வருகின்றனர். இது தொடர்பாக போராட்டக் குழுவினருக்கும் ராணுவத்துக்கும் இடையே நடந்த பேச்சுவார்த்தையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

கார்டுமில் உள்ள இராணுவ தலைமையகத்திற்கு வெளியிலும் போராட்டம் வெடித்ததால் போராட்டக்காரர்களை ஒடுக்க ராணுவம் தீவிர நடவடிக்கை மேற்கொண்டது. அப்போது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் குழந்தைகள் உட்பட 100 பேர் கொல்லப்பட்டனர்.

இந்த துப்பாக்கி சூடு சம்பவத்திற்கு ஐக்கிய நாடுகள் சபை உட்பட உலக நாடுகளின் தலைவர்கள் கடும் கண்டனம் வெளியிட்டன.

இந்நிலையில் சூடானின் நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போரினை பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண வேண்டும் என கிறிஸ்தவ கத்தோலிக்கத் திருச்சபைகளின் தலைவர் போப் பிரான்சிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து நேற்று முன்தினம் ரோம் நகர் புனித பீற்றர் சதுக்கத்தில் பொது மக்களுடனான வார பிரார்த்தனை நிகழ்ச்சியில் பேசிய போப் பிரான்சிஸ் 'சூடான் நாட்டில் நடைபெற்று வரும் உள்நாட்டுப்போரில் போராட்டக்காரர்கள் மீது ராணுவம் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் குழந்தைகள் உட்பட 100பேர் பலியாகினர் என்ற செய்தி மிகுந்த மனவேதனை அளிக்கிறது. மேலும் இந்த பிரச்சினையினை பேச்சுவார்த்தை மூலமாக உடனடியாக முடிவுக்கு கொண்டுவர வேண்டும்' என வலியுறுத்தியுள்ளார். (7)


## உலகிலேயே முதன்முறையாக 55 அடுக்குமாடிக் கட்டட உச்சியில் புதிய தொழில்நுட்ப நீச்சல் குளம்

(லண்டன்)

லண்டனில் 55 அடுக்குக் மாடி கட்டடத்தின் உச்சியில் புதிய தொழில்நுட்பத்தில் நீச்சல் குளம் அமைக்கப்பட்டுள்ளது.

லண்டனில் பிரபல தனியார் நிறுவனத்திற்கு சொந்தமான 55 அடுக்கு மாடி கட்டடத்தின் உச்சியில் உலகிலேயே முதல் பிரமிப்பூட்டும் வகையில் 360 டிகிரி கோணத்தில் நீச்சல் குளம் அமைக்கப்பட்டுள்ளது.





இந்த மாடியின் உச்சியில் அமைக்கப்பட்டுள்ள நீச்சல் குளத்தின் நான்குபுற சுவர்களும் கண்ணாடியால் ஆன தாகும்.

அதிக உயரத்தில் இருந்தபடி லண்டனின் அழகை ரசித்துக் கொண்டே குளிப்பதற்காக இது உருவாக்கப்பட்டுள்ளது.

நீச்சல் குளத்தின் கீழே சுழலும் படிக்கட்டுகள் உள்ளன. இவை நீச்சல் குளத்தின் அடிப்பகுதியில் இருந்து மக்களை கொண்டு செல்லும் எனவும், குளத்தில் இருந்து வெளியேற நினைப்பவர்களும் ஒரு பட்டனை அழுத்தினால், அந்த படிக்கட்டுகள் மீண்டும் வந்து அழைத்துச் செல்லும் எனவும் தெரிய வருகிறது. (7)

## ச் சட்டத்தில் திருத்தம் ள் மாபெரும் போராட்டம்



வர்களை சீனாவுக்கு நாடு கடத்தி, வழக்கு விசாரணையை சந்திக்க வைக்க ஏதுவாக கைதிகள் பரிமாற்றச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வர ஹொங்கொங் நிர்வாகம் முடிவு செய்தது.

இது தொடர்பாக ஹாங்காங் சட்ட சபையில் கடந்த மாதம் விவாதம் நடந்த போது வன்முறை தாண்டவமாடியது. உறுப்பினர்கள் இடையே மோதல் ஏற்பட்டது.

இப்போது இந்த உத்தேச கைதிகள் பரிமாற்ற சட்ட திருத்தத்துக்கு எதிர்ப்பு வலுத்து வருகிறது.

இந்த நிலையில் அந்த சட்ட திருத்தத்துக்கு எதிராக ஹொங்கொங்கில் நேற்று முன்தினம் பல்லாயிரக்கணக்கானோர் திரண்டு வந்து வீதிகளில் இறங்கி மாபெரும் போராட்டம் நடத்தினர்.

வெள்ளை நிற உடை அணிந்து வர்த்தகர்கள், சட்டத்தரணிகள், மாணவர்கள், ஜனநாயக ஆர்வலர்கள், மதக்குழுவினர் எனப் பல தரப்பினரும் கலந்து கொண்டனர். (7)

## ரஷ்ய ஏவுகணை குறித்து முடிவு எடுக்க துருக்கிக்கு அமெரிக்கா திடீர் காலக்கெடு




(வோஷிங்டன்)

ரஷ்ய ஏவுகணை குறித்து முடிவு எடுக்க துருக்கிக்கு அமெரிக்கா திடீர் கெடு விதித்திருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க இராணுவ மந்திரி பொறுப்பு வகிக்கும் பேட்ரிக் ஷனகன், துருக்கி நாட்டின் இராணுவ மந்திரி ஹுலுசி அகாருக்கு திடீரென ஒரு கடிதம் எழுதி உள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர், "அமெரிக்காவின் அதிநவீன எப்-35 போர் விமானங்களையும், ரஷ்யாவின் எஸ்-400 விமான எதிர்ப்பு ஏவுகணை அமைப்புகளையும் துருக்கி ஒரு சேரப்பெற முடியாது. இந்த இரண்டில் துருக்கிக்கு எது வேண்டும் என்பதை ஜுலை மாதத்துக்குள் நீங்கள் முடிவு செய்ய வேண்டும்" என கூறியுள்ளார்.

அமெரிக்கா இப்படி காலக்கெடு விதித்திருப்பது துருக்கிக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நேட்டோ நேச நாடுகளான அமெரிக்காவும், துருக்கியும் ரஷ்யாவின் எஸ்-400 விமான எதிர்ப்பு ஏவுகணை அமைப்பு பிரச்சினையில் ஏற்கனவே சிக்கலுக்கு ஆளாகியுள்ளன.

ரஷ்யாவின் எஸ்-400 விமான எதிர்ப்பு ஏவுகணை அமைப்பு, நேட்டோ பாதுகாப்பு அமைப்பு முறைகளுக்கு எதிரானது, பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது என்று அமெரிக்கா கூறுகிறது. மேலும் ரஷ்யாவின் எஸ்-400 விமான எதிர்ப்பு ஏவுகணை அமைப்புக்கு பதிலாக தனது நாட்டின் பேட்ரியாட் போர் விமான ஏவுகணை எதிர்ப்பு அமைப்பு முறையை வாங்குமாறு துருக்கியை அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது.

அமெரிக்காவின் 100 அதிநவீன எப்-35 போர் விமானங்களை வாங்குவதற்கு துருக்கி ஏற்கனவே ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இதற்காக பெரும் முதலீடும் செய்துள்ளது.

இந்த நிலையில் ரஷ்யாவின் எஸ்-400 விமான எதிர்ப்பு ஏவுகணை அமைப்புகளை கையாள்வது தொடர்பாக பயிற்சி பெற துருக்கி தனது வீரர்களை ரஷ்யா அனுப்பியுள்ளது.

இந்த நிலையில்தான் ரஷ்யாவிடம் இருந்து எஸ்-400 விமான எதிர்ப்பு ஏவுகணை அமைப்புகளை வாங்கக்கூடாது என்று கிடுக்கிப்பிடி போட்டுத்தான் இப்போது அமெரிக்க இராணுவ மந்திரி, துருக்கி இராணுவ மந்திரிக்கு கடிதம் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## ஆப்கானிஸ்தானில் துப்பாக்கிச் சமர் 5 பொலிஸ் அதிகாரிகள் உட்பட 6 பேர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் பொலிஸ் சோதனைச்சாவடியில் தலிபான் பயங்கரவாதிகளுக்கும் பொலிஸாருக்கும் நிகழ்ந்த துப்பாக்கி சமரில் 5 பொலிஸ் அதிகாரிகள் உட்பட 6 பேர் பலியானார்கள்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் பயங்கரவாதிகள் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருவதுடன், பாதுகாப்புப் படைகளையும், பொலிஸ் சோதனைச்சாவடிகளையும் குறிவைத்து தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இந்த வகையில் அங்கு தக்கார் மாகாணத்தில் கததவ்ஜா பகாவ்தீன் மாவட்டத்தில் உள்ள பொலிஸ் சோதனைச்சாவடி ஒன்றை நேற்று அதிகாலை 3 மணிக்கு தலிபான் பயங்கரவாதிகள் சுற்றிவளைத்து சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர்.


உடனே பொலிஸாரும் சுதாரித்துக் கொண்டு தங்கள் துப்பாக்கிகளால் பதிலடி கொடுத்தனர்.

இரு தரப்பினருக்கும்இடையே 2 மணி நேரத்துக்கும் மேலாக துப்பாக்கிச்சண்டை நீடித்தது.

இந்த சண்டையின் முடிவில் 5 பொலிஸ் அதிகாரிகள், ஒரு பொலிஸார் என 6 பேர் உயிரிழந்தனர். 3 பேர் படுகாயம் அடைந்தனர். (7)

# தெரிவுக்குழு கூட்டப்பட்டால் அது நிறைவேற்றதிகாரத்தை சவாலுக்குட்படுத்தும் செயல்

## துமிந்த சுட்டிக்காட்டு



(கொழும்பு)

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் எச்சரிக்கையையும் மீறி மீண்டும் தெரிவுக்குழு கூடுமாக இருந்தால் அது அவரை அவமதிக்கும் செயல் என்பதோடு நிறைவேற்றதிகாரத்தை பலம் அற்ற ஒன்றாக ஆக்கும் செயற்பாடு என்று பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.**

தெரிவுக்குழுவின் செயற்பாடுகளை நிறுத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளமை ஜனநாயகத்துக்கு விரோதமானது எனத் தெரிவித்து தெரிவுக்குழு உறுப்பினர்கள் சபாநாயகருக்கு கடிதம் அனுப்பியுள்ளதோடு இன்று செவ்வாய்க் கிழமை தெரிவுக்குழு கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறித்து சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டை வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி இப்போது தெரிவித்துள்ள கருத்தை நாம் தெரிவுக்குழுவின் செயற்பாடுகள் ஆரம்பித்த போதே வலியுறுத்தினோம். இதன் காரணமாகவே தெரிவுக்குழுவில் பங்கேற்காது புறக்கணித்தோம். புலனாய்வுத் துறை அதிகாரிகள் கூறும் விடயங்களை உலகிலுள்ள எந்த நாடுகளும் இவ்வாறு ஊடகங்களில் நேரடி ஒளிபரப்பு செய்ததில்லை. இது தேசிய பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தலாகும் எனவும் துமிந்த சுட்டிக் காட்டினார். (இ-7)

# இரத்தினக்கல் தொழில் முற்றாகச் செயலிழப்பு




நாட்டில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலையடுத்து நாட்டின் இரத்தினக்கல் தொழில் துறை முற்றாக வீழ்ச்சியடைந்துள்ளதாக அகில இலங்கை இரத்தினக்கல் மற்றும் இரத்தினக்கல் அகழ்வு சங்கத்தின் தலைவர் புன்சிரி தென்னகோன் நேற்று தெரிவித்தார்.

குண்டு வெடிப்பு சம்பவத்தின் பின் இரத்தினக்கல் கொள்வனவுக்காக வெளிநாட்டு வர்த்தகர்கள் இலங்கைக்கு வருகை தராமையே இதற்குக் காரணம் எனவும் அவர் தெரிவித்தார்.

இரத்தினக்கற்களை ஏற்றுமதி செய்யும் மத்திய மற்றும் சிறியளவிலான இரத்தினக்கல் வர்த்தகம் செய்பவர்களுக்கு இந்நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதன்படி இரத்தினக்கல் வர்த்தகர்கள், இரத்தினக்கல் அகழும் தொழிலாளர்கள், மூலப் பொருள் உற்பத்தியாளர்கள், உபகரணங்கள் தயாரிப்போர், இரத்தினக்கல் பட்டை தீட்டுவோர், தங்க ஆபரணங்கள் உற்பத்தி செய்வோர், இரத்தினக்கல் வியாபாரம் நடைபெறும் பகுதி களில் விடுதிகளை நடத்துவோர் உட்பட இத்தொழிற்றுறை சார்ந்த ஏனையோர் அனைவரும் இந்நிலைமையால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)

## பொலிஸ் நிலையக் கூரை

# மின்விசிறி உடைந்து வீழ்ந்ததில் பெண் பொலிஸ் அதிகாரி படுகாயம்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் சிறு குற்றத்தடுப்புப் பிரிவுக் கட்டடக் கூரை மின்விசிறி உடைந்து கீழே விழுந்ததில் பெண் பொலிஸ் அதிகாரி ஒருவர் படுகாயமடைந்த சம்பவம் கடந்த சனிக்கிழமை காலை இடம் பெற்றதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பொலிஸ் நிலையத்தில் சம்பவதினமான கடந்த சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் குறித்த பிரிவில், இயங்கிக்கொண்டிருந்த கூரை மின்விசிறி திடீரென உடைந்து வீழ்ந்ததையடுத்து அங்கிருந்த பெண் பொலிஸ் அதிகாரி ஒருவர் படுகாயமடைந்த நிலையில் ஏறாவூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

குறித்த மின் விசிறியின் ஆணி கழன்றதாலேயே இந்த விபரீதம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சுற்றுலாத் தடையை நீக்கியது நெதர்லாந்து

(கொழும்பு)

இலங்கைக்கான சுற்றுலாத் தடையை நெதர்லாந்து நீக்கியது.

நெதர்லாந்தில் மேற்கொள்ளப்பட்ட பிரசார நடவடிக்கைகளையடுத்து அந்நாட்டுப் பிரஜைகள் இலங்கை வருவதற்கான தடையை நீக்கியதாக இலங்கைத் தூதரகம் தெரிவித்தது.

உயிர்த்த ஞாயிறு அனர்த்தங்களை அடுத்து வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது.

பல வெளிநாடுகள் தங்கள் பிரஜைகளை இந்தக் காலப் பகுதியில் இலங்கைக்கு வர வேண்டாம் என ஆலோசனை வழங்கியிருந்தன.

இந்நிலையில், இலங்கையில் தற்போது நிலைமை வழமைக்குத் திரும்பியிருந்தது.

நெதர்லாந்து போன்று ஏனைய நாடுகள் குறிப்பாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என இலங்கை எதிர்பார்ப்பதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வாகன வசதிகள்

ஒருவர் உடம்பு முழுவதும் கட்டுப் போட்டுக் கொண்டு வந்தார். என்ன ஆனது என்று பரபரப்போடு கேட்டேன். ஒன்றுமில்லை வருகின்ற வழியில் ஒரு சின்ன விபத்து! அதுதான் இப்படி ஆகிவிட்டது என்றார்! சும்மா ஒரு எச்சரிக்கைக்காக கட்டுப் போட்டிருக்கின்றேன் என்றார். அவர் ஒரு மாதிரியான ஆள். அப்படித்தான் பேசுவார்.

சரி என்ன நடந்தது? விபரமாகச் சொல்லுங்கள் என்றேன். ஸ்கூட்டரில் வேகமாக வந்து கொண்டிருந்தேன். எதிரில் ஒரு எருமை மாடு மெதுவாக வந்து கொண்டிருந்தது. இரண்டும் மோதிக் கொண்டது. நான் எட்டத்தில் போய் விழுந்தேன். எருமைக்கும் ஒன்றும் ஆகவில்லை. ஸ்கூட்டருக்கும் ஒன்று ஆகவில்லை. நான் தான் இப்படி ஆகிவிட்டேன்! என்றார்.

கண்ணைத் திறந்து கொண்டு வர வேண்டும் என்று அட்வைஸ் செய்தேன். கண்ணைத் திறந்து கொண்டு வந்தும் இது நடந்து போய் விட்டது என்றார். அது எப்படி நடக்கும். நீங்க ஒதுங்கிப் போயிருக்கலாமே என்றேன். கண்ணைத் திறந்து கொண்டு வந்தது நான் இல்லை சேர், எருமை மாடு என்றார்.

இப்படித்தான் அவர் பேசிக் கொண்டிருப்பார். அதனால் தான் அவரை ஒரு மாதிரியான ஆள் என்று சொன்னேன். அவர் எப்படியோ இருந்து விட்டுப் போகட்டும். ஆனால் எல்லோரும் அலட்சியமாக இருக்கக் கூடாது. விபத்தை விலை கொடுத்து வாங்கக் கூடாது.

ஆபத்துக்களை தவிர்ப்பதற்கு என்றால் விலை கொடுக்கலாம். அதற்கு எப்படி விலை கொடுப்பது என்றால், electronic speed control unit- ஐ வாங்கி வாகனங்களிலே பொருத்தலாம். நம்ம ஊரில் எல்லாம் பேருந்தும் லொறியும் வேகத்தைக் குறைத்தாலே பல விபத்துக்களை தடுத்து விடமுடியும். electronic speed control unit என்று சொல்கின்றோமே இந்த வேகக் கட்டுப்பாட்டு கருவி என்ன செய்கின்றது தெரியுமா?

அளவுக்கு மீறி ஒரு பேருந்து வேகமாக போகின்றது என்று வைத்துக் கொள்ளுங்கள். உதாரணத்திற்கு மணிக்கு 60 கிலோ மீற்றர் வேகத்திற்கு மேலே வண்டி போகின்றது என்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே அந்தக் கருவி என்ன செய்யுமென்றால் பீப் பீப் என்று சத்தம் போடும். அந்த சத்தத்தை கேட்டு வண்டி ஓட்டுகின்றவர்கள் வேகத்தைக் குறைக்க வேண்டும்.

அப்படி குறைக்காமல் இன்னும் வேகமாக போகின்றார் என்று வைத்துக் கொள்ளுங்கள். இஞ்சின் ஒட்டமெட்டிக்கா நின்று விடும். அது மட்டுமல்ல அதன் பின் ஒரு 5 நிமிடம் அதை ஸ்டார்ட் பண்ண முடியாது. அங்கேயே நிற்க வேண்டியது தான். 5 நிமிடத்தின் பின் தான் இந்த இடத்தை விட்டுப் புறப்பட வேண்டும். அதனால் ஓவர் ஸ்பீட் போவதற்கு யாரும் முயற்சி செய்ய மாட்டார்கள்.

வேகத்தைக் கட்டுப்படுத்துவதால் விலைமதிப்பில்லாத உயிர்களைக் காப்பாற்ற முடியும். அதனால் இதை ஒரு பெரிய அசௌகரியமாக யாரும் நினைக்கக் கூடாது. ஏற்கனவே கூட நம் ஊர் பேருந்துகளிலே இதை வைத்திருந்தார்களாம். ஆனால் சில பேர் மிகவும் சாமர்த்தியமாக இந்த கருவியினுடைய கனெக்சனை கட் பண்ணி விட்டு வழக்கம் போலவே படு ஸ்பீடில ஓட ஆரம்பித்து விட்டார்கள்.

காரில் போறவர்களுக்கும் குடும்பம் இருக்கின்றது. ரோட்டில் போறவர்களுக்கும் குடும்பம் இருக்கின்றது. அதை கொஞ்சம் நினைத்துப் பார்க்க வேண்டாமா சேர்! இந்த வேகக் கட்டுப்பாட்டு கருவியை யாரும் சுலபமாக எதுவும் செய்து விட முடியாத அளவுக்கு அதை பொருத்துவதற்கு வழியை பார்க்க வேண்டும் என்றார் ஒரு நேயர்.

மிகவும் தூரம் போகின்ற பேருந்துகளில் எல்லாம் எயார்கண்டிசன் செய்கின்றோம். வீடியோ வசதியெல்லாம் செய்கின்றோம். அதுகளிலே செலவு செய்கின்ற பணத்தை இது போல் ஸ்பீட் மானிட்டர். அதன்பின் VHF டிரான்சீவர் இதுகளுக்காக செலவு செய்யலாம்.

வண்டி நடுவழியிலே எங்கேயாவது நின்று போய் விட்டது என்றால் அல்லது எதிர்பாராமல் விபத்து ஏற்பட்டது என்றால் உடனே தகவல் கொடுப்பதற்கும் உயிரைக் காப்பாற்றுவதற்கும் இந்த வயர்லெஸ் வசதி உதவியாக இருக்கும்.

செலவை எல்லாம் ஒரு பொருட்டாக கருதாமல் இதையெல்லாம் செய்தால் விபத்துக்களை பெருமளவிற்கு தவிர்க்கலாம். விபத்துக்களுக்கு எவ்வளவோ காரணங்கள் இருக்கின்றன. இதை எல்லாவற்றையும் கவனித்து சரி செய்ய வேண்டும். எனக்கு மிகவும் நெருக்கமான ஒருவர் ஒரு பேருந்து சாரதியாக இருக்கின்றார். அவரிடம் ஒரு நாள் இந்த சாலை விபத்துக்களைப் பற்றி சாவகாசமாக பேசிக்கொண்டு இருந்தேன். அவர் கொஞ்சம் முரட்டு சுபாவம் உள்ளவர். அதனால் அவரிடம் சொன்னேன்,

இனி மேல் உங்கள் சுபாவத்தை நீங்கள் மாற்றிக் கொள்ள வேண்டும். ரோட்டில் போறவர்களும் மனிதர்கள் தான். பேருந்தில் வருபவர்களும் மனிதர்கள் தான். மனிதனுக்கு மனிதன் மரியாதை கொடுக்க வேண்டும் என்று அடுக்கிக் கொண்டே போனேன்.

நீங்கள் சொல்லுகின்ற மாதிரி ஒரு மனிதனுக்கு மரியாதை கொடுக்கப் போய்த்தான் ஒரு நாள் ஒரு சின்ன விபத்து நடந்தது. என்றார் அவர். அது எப்படி? என்றேன்.

ஒரு நாள் நான் ஓடிக்கொண்டு போன பேருந்தில் ஒரு வயதான தாத்தா நின்று கொண்டு வந்தார். பேருந்தில் இருக்கின்றவர்கள் யாருமே அவரில் இரக்கப்படவில்லை. நான் இரக்கப்பட்டேன் என்றார். என்ன செய்தீங்க? என்றேன். நான் எழுந்து நின்று அவரை என் இடத்தில் உட்கார வைத்தேன்! என்றார்.

# மைத்திரிக்கு கதவடைப்பு

# கோத்தபாயதான் ஜனாதிபதி வேட்பாளர்

# இனி கலந்துரையாடலுக்கு இடமில்லை

## பொதுஜன பெரமுன திட்டவட்டம்

(கொழும்பு)

**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷதான் எனவும், இனி கலந்துரையாடல்களுக்கு இடமில்லையெனவும் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா தெரிவித்தார்.**





ஸ்ரீல.பொ.பெரமுனவுக்கு பலமான வேட்பாளர் ஒருவர் உள்ளது போன்று, நிறைவான வேலைத்திட்டமும் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் ஐந்தாவது கட்டப் பேச்சுவார்த்தையும் நிறைவடைந்து, அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் ஸ்ரீல. பொதுஜன பெரமுன நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் சொய்சா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர தற்போதைய ஜனாதிபதிதான் ஜனாதிபதி வேட்பாளர் எனவும், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ பிரதமர் எனவும் கட்சியின் கருத்தைக் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வீதியின் நிரல் சட்டம் கடுமையாக நடைமுறைக்கு

நாட்டின் பிரதான நகரங்களில் நேற்றுத் திங்கட்கிழமை முதல் வீதியின் நிரல் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

பொலிஸ் தலைமையகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

வாகன நெரிசல்களை மற்றும் வீதி விபத்துக்களை தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

விசேடமாக பயணிகள் போக்குவரத்து பேருந்துகள் வீதியின் வலது பக்கத்தில் செல்ல வேண்டும்.

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதான வீதிகளில் பேருந்துகளில் பிரதான வீதி நிரல் ஒதுக்கப்பட்டது.

கொழும்பு, கல்கி ஸ்ஸை, வெலிக்கடை உள்ளிட்ட பகுதிகளில் இந்த முக்கிய வீதி நிரல் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஞானசாரர், தயாசிறி கதிர்காமத்தில் வழிபாடு



(கதிர்காமம்)

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர ஆகியோர் நேற்று முன்தினம் கதிர்காமம் சென்று விசேட வழிபாட்டில் ஈடுபட்டனர். (இ-7)

## சர்ச்சைக்குரிய வைத்தியர்

# ஷாபிக்கு எதிரான விசாரணைகள் உரிய முறையில் நடக்கவில்லை

(குருநாகல்)

குருநாகல் போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்தியர் மொஹமட் ஷாபிக்கு எதிராகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கமைய, விசாரணைகள் உரிய முறையில் இடம்பெறவில்லை என, குருநாகல் போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள் தெரிவித்ததாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை செய்ய ஜனாதிபதியால் நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென, குருநாகல் போதனா வைத்தியசாலை கிளையின் செயலாளர் வைத்தியர் இந்திக ரத்நாயக்க தெரிவித்தார்.

அவ்வாறு நிபுணர் குழு நியமிக்கப்படாவிட்டால், இந்த வாரத்துக்குள் பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை குறித்த வைத்தியருக்கு எதிராக, நேற்று முன்தினம் எம்பிலிப்பிட்டிய, களுத்துறை நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## நிதியுதவியை நேரடியாக வழங்கவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.47/21 ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் பெயரில் சிலரால் நிதி சேகரிக்கப்பட்டு வருகிறது என்றும் தாங்கள் அவ்வாறான எந்த நிதியையும் சேர்க்கவில்லை என்றும் அவ்வாறு நிதிசேர்ப்பவர்களிடம் எவ்வித நிதியுதவியும் வழங்க வேண்டாம் என்றும் நிதியுதவி வழங்க விரும்பின் நேரடியாக எமது அலுவலகத்தில் நிதியை செலுத்தலாம் என்றும் சங்க செயலாளர் க.கோபாலகிருஷ்ணன் அறிவித்துள்ளார். (இ-7)

## ஹாஸ் சிலிண்டர் வெடித்ததில் குடும்பப் பெண் உயிரிழப்பு

(பதுளை)

ஹாஸ் சிலிண்டர் வெடித்ததில் குடும்பப் பெண் ஒருவர் ஸ்தலத்திலேயே கருகி உயிரிழந்த சம்பவமொன்று நேற்றுப் பகல் இடம்பெற்றது.

பதுளை மாநகரின் புறநகர்ப் பகுதியிலுள்ள வீடொன்றிலேயே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் குறித்த வீட்டில் தனிமையில் வாழ்ந்து வந்த தம்பிக்கா ப்ரியானி ரட்நசயக்க என்ற (வயது-44) குடும்பப் பெண்ணே இவ்வாறு ஹாஸ் சிலிண்டர் வெடித்ததில் உயிரிழந்தார்.

இச்சம்பவத்தில் குறித்த வீடும் தீப்பற்றி சேதமாகியுள்ளது. பதுளை பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இறந்த பெண்ணின் கணவன் வெளிநாட்டில் தொழில் செய்து வருவதால் இப்பெண் தனிமையிலிருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## நீரிழப்பு ஏற்பட்ட பெண் சிசு மரணம்!

பிறந்து நான்கு நாட்களேயான சிசு ஒன்று நீரிழப்பு ஏற்பட்டதில் பரிதாபமாக உயிரிழந்தது. கீரிமலை பகுதியை சேர்ந்த றொபேர்ட் சாள்ஸ் நதுலா ஆகியோரின் நான்கு மாத பெண் சிசுவே உயிரிழந்தது.

கடந்த 5 ஆம்திகதி யாழ்போதனா வைத்தியசாலையில் குறித்த குழந்தை பிறந்தது. குழந்தை நலமாக இருந்தது. 6 ஆம் திகதி வீட்டுக்கு சென்றனர்.

நேற்று முன்தினம் காலை குழந்தைக்கு பால் கொடுப்பதற்கு தாய் முற்பட்டுள்ளார். அப்போது குழந்தை சோர்வாக இருந்தது. பின்னர் மயங்கிய நிலையில் இருந்த குழந்தையை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றனர். குழந்தையைப் பரிசோதித்த வைத்தியர் குழந்தை இறந்துவிட்டதாக தெரிவித்தார்.

நீரிழப்பு ஏற்பட்டதில் குழந்தை மரணித்ததாக பிரேத பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது. மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். (இ-9)

## பயணிகளுடன் பயணித்த பேருந்தில்

# ரி-56 ரக துப்பாக்கியுடன் சாரதி, நடத்துநர் கைது

(மாத்தறை)

மாத்தறையில் பயணித்துக் கொண்டிருந்த பேருந்தில் ரி-56 ரக துப்பாக்கி மற்றும் ரவைகள் சிறப்பு அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டன.

தெனியாய செல்லவகந்த வீதியில் பயணித்த தனியார் பேருந்தில் துப்பாக்கியுடன் சாரதி மற்றும் நடத்துநர் கைது செய்யப்பட்டனர்.

மேலும் ஒருதொகுதி கஞ்சா மற்றும் இதுவரை பயன்படுத்தாத வெள்ளை நிறத்திலான தூள் வகை ஒரு தொகையும் குறித்த பேருந்தில் இருந்து மீட்கப்பட்டன.

விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்ட குறித்த பேருந்தின் சாரதி, நடத்துநர் ஆகிய இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய அதிரடிப் படையினர் பயணித்துக் கொண்டிருந்த பேருந்தை நிறுத்தி பயணிகளை வெளியேற்றிவிட்டு சோதனையிட்டனர்.

இதன் போது சாரதிக்கு சொந்தமான இயந்திர துப்பாக்கி மற்றும் ரவைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அடையாளம் காணப்படாத அந்த தூளை சோதனையிடுவதற்காக அரச பகுப்பாய்வாளர்களிடம் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

குறித்த பேருந்தில் தந்தை சாரதியாகவும் மகன் நடத்துநராகவும் செயற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# பதில் கடமை புரியும் அமைச்சர்கள் நியமனம்







(கொழும்பு)

நகர திட்டமிடல், நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் லகீ ஜயவர்த்தன ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நேற்று நகர திட்டமிடல், நீர் வழங்கல், உயர்கல்வி பதில் கடமைபுரியும் அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

இதேவேளை கைத்தொழில், வர்த்தக அலுவல்கள் பிரதிய மைச்சர் புத்திக பத்திரன கைத்தொழில், வர்த்தக அலுவல்கள், நீண்டகாலம் இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்றுதல், கூட்டுறவு அபிவிருத்தி, தொழிற்பயிற்சி, திறன் விருத்தி பதில் கடமை புரியும் அமைச்சராக நியமிக்கப் பட்டார்.

பெற்றோலிய வள அபிவிருத்தி பிரதியமைச்சர் அனோமா கமகே, நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி, பெற்றோலிய வள அபிவிருத்தி பதில்கடமை புரியும் அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

இவ் அமைச்சர்கள் நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்தனர். (இ-7)

# அதலபாதாளத்திற்குள் சென்றுகொண்டிருந்த சுற்றுலாத்துறையை மீட்ட ஜேர்மன் கப்பல்

## அமைச்சர் அமரதுங்க பாராட்டு



(கொழும்பு)

உலகிலேயே அதிக இடவசதி கொண்ட அதிசொகுசு உல்லாசப் பயணக்கப்பல் எம்.எஸ்.யுரோப்பா இலங்கை வருகை தந்துள்ளது.

இந்த அதி சொகுசு உல்லாசப் பயணக்கப்பல் வந்துள்ளமை இலங்கை உல்லாசப்பயணத்திற்கு பாதுகாப்பானதும் ஏற்புடையதுமானது என்பதற்கு சான்று பகர்கின்றது என உல்லாசப் பயணத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

எம்.எஸ்.யுரோப்பா எனும் இந்த அதிசொகுசு உல்லாசக் கப்பலின் வருகை குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் இடம்பெற்ற அண்மைய பயங்கரவாதத் தாக்குதல் சம்பவங்களுக்குப் பின்னர் வருகை தந்த முதலாவது வெளிநாட்டு உல்லாசப்பயணக்கப்பல் என்ற வகையில் இது முக்கியத்துவம் பெறுகின்றது.


அழகிய இலங்கைத் தீவிற்கு வருகை தர தீர்மானித்ததற்காக உல்லாசப்பயணிகள் அனைவருக்கும் உளமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றேன். உங்கள் வருகை இலங்கை உல்லாசப்பயணத்திற்கு பாதுகாப்பானதும் ஏற்புடையதுமானது என்பதற்கு சான்று பகர்கின்றது என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஜேர்மனைச் சேர்ந்த 900 உல்லாசப்பயணிகளுடன் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் தரித்து நின்ற எம்.எஸ்.யுரோப்பா அதி சொகுசு உல்லாசப்பயண கப்பல் பின்னர் கொழும்பு துறைமுகத்திற்கு வருகை தந்தது.

கொழும்பு துறைமுகத்தில் இலங்கை உல்லாசப்பயண ஊக்குவிப்பு சபையினரால் வரவேற்கப்பட்ட ஜேர்மன் உல்லாசப்பயணிகள் பின்னர் கலாசார நிகழ்வுகளைக் கண்டு களித்தனர்.

இலங்கை வருகை தந்த ஜேர்மன் உல்லாசப்பயணிகள் கலபொட தேயிலை நிறுவனம், அக்குரெஸ்ஸ பந்த தேசிய பூங்கா, கதிர்காமம், எல்ல, சிகிரியா மற்றும் கண்டி உட்பட கொழும்பின் பிரபல வர்த்தகச் சந்தைக்கும் விஜயம் செய்தனர். (இ-7)

# உதயசூரியன், மகிழங்கேணிக்கு குடிநீர் சேவை ஆரம்பம்





(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் சிவமங்கை இராமநாதனின் வேண்டுகோளிற்கு இணங்க யாழ்.மாவட்ட பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சியின் சிபாரிசுக்கு அமைவாக சாவகச்சேரி நகர மைதானம், உதயசூரியன் கிராமம் மற்றும் மகிழங்கேணி கிராமங்களில் நேற்றுத் திங்கட்கிழமை காலை குடிநீர் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக 51 ஆவது படைத் தளபதி ரொசான் செனவிரத்ன கலந்து கொண்டு குடிநீர் சேவை வழங்கலினை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். மேலும் நிகழ்வில் 52 ஆவது படைத் தளபதி பிரிகேடியர் எஸ்.எஸ். வடுகே, 523 ஆவது படைத் தளபதி கேணல் பி.என்.ஜே. பெர்னாண்டோ, சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் சிவமங்கை இராமநாதன், தென்மராட்சிப் பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் துஸநாயக்க, கோவிற்குடியிருப்பு கிராம உத்தியோகத்தர் கார்த்திகேயன், சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்கள், சாவகச்சேரி நகரசபை உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஐந்தரை இலட்சம் ரூபாய் செலவில் இரண்டு குழாய்க் கிணறுகள் மற்றும் மூவாயிரம் லீற்றர் கொள்கலன்கள் மூலமாக குடிநீர் சேவை வழங்கப்படுகிறது.

குடிநீர் சேவை கட்டுமானப் பணிகள் உள்ளிட்ட சகல வேலைத்திட்டங்களையும் 523 ஆவது படைப்பிரிவினர் முன்னெடுத்திருந்தனர்.

அண்மையில் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி ஹெட்டியாராச்சியால் சாவகச்சேரி - உதயசூரியன் கிராமத்தில் மலசலகூடம் இல்லாத நான்கு குடும்பங்களுக்கு மலசலகூடங்கள் அமைத்துக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5-30)

# விசேட மீள் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

உயர் தொழில்நுட்பவியல் நிறுவன 1 ஆம், 2 ஆம் பருவகால மற்றும் ஆண்டிறுதி விசேட மீள் பரீட்சைக்கான (1St, 2nd Semester & Annual - Special Repeat Exam) விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

இவ் விண்ணப்பங்களை 10.06.2019 தொடக்கம் பெற்று சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதி 23.06.2019 ஆகும். எனவே விண்ணப்பங்களை நிறுவனத்தில் பெற்றுப் பூர்த்தி செய்து நிர்வாகப் பகுதியில் வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மேலதிக விபரங்களுக்கு www.sliate.ac.lk என்ற இணையத்தளத்தை பார்வையிடவும். உதவிப் பதிவாளரை தொடர்பு கொள்ளவும் என அறிவிக்கப்பட்டது. (இ)







யாழ்.இந்துக்கல்லூரியில் சுற்றுச் சூழல் தின நிகழ்வுகளை கல்லூரி சாரணர் துருப்பும் இயற்கை வலுவூட்டல் கழகமும் இணைந்து நடத்தின. இதில் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொண்டார்.

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்




யஸ்மின் குணரத்ன (Yasmine Gunaratne)

## சுதந்திரத்தின் பின் இலங்கை அரசின் அரசியல் நடவடிக்கைகளும் தமிழ்த் தேசியத்தின் எழுச்சியும் (கி.பி.1948-கி.பி.1983)

ஆனால் சுந்தரலிங்கத்தின் மனச்சாட்சி அவரை நிச்சயம் உறுத்திக்கொண்டே இருந்திருக்கவேண்டும். இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் இலங்கைக்கான தேசியக் கொடி தயாரிக்கும் விடயத்தில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டவேளை 1950களில் சுந்தரலிங்கம் தனது பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைத் துறந்து மறுபடியும் வவுனியா தொகுதிக்குப் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டு மீண்டும் பாராளுமன்றத்தில் அமர்ந்து கொண்டார்.

தமிழரின் முக்கியமான விடயமான அரசியல் அந்தஸ்து பறிபோன காலகட்டத்தில் அரசுக்குச் சாதகமாக இருந்துவிட்டு ஒரு தேசியக் கொடி தயாரிக்கும் விடயத்தில் சுந்தரலிங்கம் தனது எதிர்ப்பைக் காட்டி தான் செய்த அரசியல் தவறைச் சீர்செய்து தமிழரின் ஆதரவைப் பெறவேண்டும் என்ற நோக்கிலேயே தேசியக்கொடி விடயத்தில் அவர் அவ்வாறு நடந்து கொண்டிருந்தாரோ என்று சந்தேகிக்கத் தோன்றுகின்றது.

இலங்கைத் தமிழர் மன்னிக்கும் மனப்பான்மை கொண்டவரென்றும் அமைதியான சுபாவம் உடையவரென்றும் தீவிர முயற்சியாளர் என்றும் கல்வி கற்ற சமூகத்தினர் என்றும் பல சமூகவியல் ஆய்வாளரால் பொதுவாகக் கருதப்படுவர். ஆனால் அவர்களிடமிருந்த ஒரு பெரிய குறைபாடு என்னவெனில் அவர்கள் உள்ளூர் அரசியல் தலைவர்களைப் பெரிதாக மதிப்பதில்லை என்பதுதான்.

கொழும்புவாழ் மேல்தட்டு வர்க்கத் தமிழர் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் நன்றாகப் பேசக்கூடியவர்களாக இருந்தனர். அதிலும் தலைசிறந்த தமிழ் சிவில் குற்றவியல் வழக்கறிஞர் என்றால் அவர்களைப் போற்றுகின்ற மனப்பாங்கு கொண்டவராக ஏனைய தமிழர் இருந்தனர்.

கொழும்புவாழ் தமிழ்த் தலைவர்களான ஜி.ஜி. பொன்னம்பலமும் சி.சுந்தரலிங்கமும் தமிழரின் அரசியலில் ஆரம்ப காலத்திலிருந்து 1956கள் வரை முன்னணியில் இருந்தமைக்கும் அக்காலத் தமிழர் அவர்களை அதீதமாகப் போற்றியதே காரணமாக அமைந்திருக்க வேண்டும்.

1952, 1956 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல்களில் சி.சுந்தரலிங்கத்தை தமிழ் மக்கள் வவுனியாத் தொகுதியில் தெரிவு செய்து பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெற வைத்தமைக்கும் 1952களில் அவரைப் பெரும்பாலான தமிழர் அடங்காத் தமிழன் என ஆராதிக்கும் வகையில் அழைத்தமைக்கும் மேற்குறிப்பிட்ட மனப்பாங்கே காரணமாக இருந்திருக்க வேண்டும்.

பல வருடங்களாக தமிழரின் அரசியல் முன்னணி வகித்திருந்தும் அவர்களது அரசியல் விடிவுக்கு உருப்படியாக எதுவுமே செய்யாதிருந்துவிட்டுத் தனது இறுதிக் காலகட்டத்தில் அவர் 1954 இல் Motion for Restored Ceylon Free State என்னும் மசோதாவைப் பாராளுமன்றத்தில் முன்மொழிந்தார். இது இலங்கை அரசியலில் எதுவித பாரிய தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

மேலும் 1954 இல் சிங்களம் மட்டும் எனப் பேசப்பட்ட சிங்கள மொழியே இலங்கையின் ஒரே உத்தியோகபூர்வ மொழியாக சட்டமூலம் அந்தஸ்து வழங்கப்பட்ட விடயத்தில் அவர் தனது பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை இராஜினாமா செய்தார். இவைகள் காலங்கடந்த அரசியல் நடவடிக்கைகளாகவே காணப்படுகின்றன.

ஆனால் தமிழ்மக்கள் தமது அரசியல் நிலைமை பற்றி மிகத் தீவிரமாகச் சிந்திக்க ஆரம்பித்த போது சுந்தரலிங்கம், பொன்னம்பலம் போன்ற அரசியல் தலைவர்கள் அரசியலில் இருந்து நிரந்தரமாக விலக்கி வைத்துள்ளனர். 1960களில் சுந்தரலிங்கம் கடுமையாக முயன்றும் அவரால் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை தேர்தல்கள் மூலம் மீண்டும் பெறவே முடியாமல் போய்விட்டது.

இதுவே தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கும் ஜி.ஜி.பொன்னம்பலத்திற்கும் நிகழ்ந்துள்ளது. இந்த வரலாற்று அனுபவங்களும் அறிவும் அரசியலைத் தமது சொந்த நலன்களுக்காகப் பயன்படுத்தும் அரசியல் தலைவர்களுக்கு நல்ல பாடமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

இந்தியத் தமிழர் பிரஜாவுரிமை மசோதா விவாதத்தில் பாராளுமன்றத்தில் அதை எதிர்த்துக் குரலெழுப்பிய இரண்டு முக்கியமான தலைவர்களுள் ஒருவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம், மற்றையவர் சி. தொண்டமான்.

இந்தியத் தமிழர் பிரஜாவுரிமைச் சட்டம் மூலம் பறிக்கப்படுவதால் எதிர்காலத்தில் ஏற்படப்போகும் நிரந்தரமான பாதிப்புக்களை நன்கு உணர்ந்திருந்த இரு தலைவர்களும் மூன்று மாதங்களுக்கு மேலாகத் தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது பாராளுமன்றத் தொடர் கூட்டத்தில் மணித்தியாலக் கணக்கில் தமது வாதப்பிரதிவாதங்களை ஏற்கனவே குறிப்பிட்ட தமிழ்ப் பிரதிநிதிகளின் உதவியுடன் உரிய முறையில் முன்வைத்த போதிலும் இறுதியில் அம்மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு இந்தியத் தமிழரின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டது.

இதன் உடனடியான தாக்கம் 1948 ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கையின் இரண்டாவது பாராளுமன்றத் தேர்தலில் தெளிவாகப் பெறப்பட்டது. 1948 ஆம் ஆண்டின் இறுதியில் இந்தியத் தமிழரின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டதன் எதிர்விளைவாக செல்வ நாயகம், வன்னியசிங்கம், நாகநாதன் போன்ற அரசியல் தலைவர்களும் தமிழர் காங்கிரஸிலிருந்து விலகி இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (Ilankai Thamil Arasu Kadchi- ITAK or Tamil Federal Party-FP) என்ற அரசியல் கட்சியை டிசெம்பர் 1949 இல் ஆரம்பித்தார்கள்.

1952 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் மேற்படி கட்சி 2 பிரதிநிதித்துவத்தையும் தமிழ்க் காங்கிரஸ் 4 பிரதிநிதித்துவத்தையும் பெற்றன. 1947 ஆம் ஆண்டுத் தேர்தலில் 13 பிரதிநிதித்துவத்தைப் பெற்ற இலங்கைத் தமிழரின் அரசியல் கட்சிகள் தற்போது 6 பிரதிநிதித்துவத்தை மட்டுமே பெற்றிருந்தன.

(தொடரும்)

# முகமது ஆசாத் தற்கொலைதாரியென மரபணு பரிசோதனையில் நிரூபணம்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு சீயோன் தேவா லயத்தில் இடம்பெற்ற தற்கொலை குண்டுதாக்குதலில் கண்டெடுக் கப்பட்ட தலை மற்றும் சிதறுண்ட உடல் பாகங்கள் தற்கொலை குண்டுதாரி முகமது நாசார் முக மது ஆசாத் என்பவருடையது என மரபணு பரிசோதனையில் தெரியவந்தது.

கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற தற்கொலை குண்டுத்தாக்குதலில் பக்கத்து வீட்டின் கூரையின் மேல் இருந்து மீட்கப் பட்ட தலை மற்றும் இரண்டு கால்கள் கொண்ட உடல் பாகங்கள் மீட்கப்பட்டன. இந்த நிலை யில் உயிரிழந்தவர்களின் சட லங்கள் அடையாளம் காண ப்பட்டு உறவினர்களிடம் ஒப்ப டைக்கப்பட்டன.

இந் நிலையில் அடையாளம் காணாத நிலையில் மீட்கப்பட்ட தலை மற்றும் உடற் பாகங்கள் தொடர்ந்தும் மட்டு. போதனா வைத்தியசாலை பிரேத அறை யில் வைக்கப்பட்டிருந்த நிலை யில் இந்தத் தற்கொலை தாக்கு தலை மேற்கொண்ட காத்தான் குடியைச் சேர்ந்த தற்கொலை யாளியான 34 வயதுடைய முகமது நாசார் முகமது ஆசாத் என தெரிய வந்தது.

இதனையடுத்து இவரின் தாயாரான 54 வயதுடைய அலி யார் லதீபர் பிவி கைது செய் யப்பட்ட நிலையில் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவானுக்கு முன்னால் குறித்த சடலத்தை தனது மகன் என அடையாளம் காட்டியதையடுத்து இது குண்டுத் தாக்குதலால் ஏற்பட்ட மரணம் எனவும் உயிரிழந்தவரின் தாயா ரின் மாதிரி இரத்தத்தைப் பெற்று மரபணு பரிசோதனைக்கு உட்ப டுத்துமாறு நீதவான் உத்தரவிட்டி ருந்தார்

அரச இரசாயனவியல் பகுப் பாய்வு திணைக்களம் நீதிமன் றத்திற்கு இந்த உடற் கூறுகள் ஆசாத்தின் உடைய உடற் கூறு கள் என அறிவித்தது. இந்த வழக்கு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் எடுத்துக் கொண் டபோது சி.ஐ.டி.யினர் ஆஜராகி இரசாயனவியல் பகுப்பாய்வு திணைக்களம் அனுப்பிய மர பணு பரிசோதனை அறிக் கைகளை நீதவானிடம் ஒப்ப டைத்தனர்.

இந்த உடற் கூறின் தலையை பிரேத பரிசோதனை க்கு உட்படுத்தி சடலத்தை அரச செலவில் அடக்கம் செய்யுமாறு அரசாங்க அதிபருக்கு நீதவான் கட்டளை பிறப்பித்தார். (இ-7)

# தமிழை யார் பேசினாலும் சந்தேக கண்ணோட்டத்துடன் பார்க்கின்றனர்

## கருணாகரம் கவலை



(களுதாவளை)

தமிழ் பேசும் முஸ்லிம் மக் களை மாத்திரமல்ல தமிழை யார் பேசினாலும் அவர்களைச் சந்தேகக் கண்ணோட்டத்தில் பெரும்பான்மையினர் பார்க்கும் நிலைமை மீண்டும் உருவாகி யுள்ளதாக தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பின் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கோவிந் தன் கருணாகரம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, களுதாவளை பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே கருணாகரம் மேற்க ண்டவாறு தெரிவித்தார்.

"மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த காத்தான்குடியில் பயங் கரவாதம் உரு வெடுத்தமையி னாலேயே பெரும்பான் மையினர் தமிழ் பேசும் அனைவரையும் சந்தேகக் கண்ணோட்டத்தில் பார்க்கும் நிலைமை உருவாகி யுள்ளது.

மேலும் இந்தப் பயங்கரவா தம் உடனடியாகத் தோற்றம் பெற்றிருக்காது. 5 அல்லது 6 ஆண்டுகளுக்கு முன்னரே தோற் றம் பெற்றிருக்க வேண்டும்.

அந்த வகையில் காத்தான் குடியில் 28 வருடங்கள் அரசியல் அதிகாரத்திலிருந்த கிழக்கு மாகாண ஆளுநருக்கு இவ் விட யம் குறித்து எந்தவொரு தகவலும் தெரியாதென்பது வேடிக்கையாக உள்ளது.

அதாவது ஊரில் நிகழும் சம்பவங்கள் ஏதும் அறியாமல் அரசியலில் ஈடுபட்டிருப்பார் என் பதை ஏற்றுக்கொள்ள முடியாது. இவர் பொய் உரைக்கின்றார்.

இதேவேளை முஸ்லிம் பயங் கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 250 பேர் உயிரிழந்ததுடன் 500 இற்கும் மேற்பட் டோர் காயம டைந்தனர்.

இந்தச் சம்பவத்தில் 2 ஆளு நர்களும் ஒரு அமைச்சரும் மக்களால் குற்றம் சாட்டப்பட்டுள் ளார்கள். ஆகையால் இவர்கள் மூவரும் விசாரணைக்கு உட் படுத்தப்பட வேண்டும்.

குறித்த மூவரின் மீதும் குற் றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் தண்டிக்கப்பட வேண்டுமென மக்கள் வலியுறுத்துகின் றனர். அதனையே நாமும் விரும்பு கின்றோம்" என கருணாகரம் மேலும் தெரிவித்தார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1745

### வாசன்

பெண்கள் புராட்டி எடுத்து
செலக்ட் பண்ணினால் புடைவை...
செலக்ட் பண்ணிட்டு
புராட்டி எடுத்தால் புருசன்



### பத்மா

கணவர்: கூட்டு பிரமாதம் அடடே பொறியல் அற்புதம்! சாம்பார் சுவையோ சுவை!
மனைவி: போதும் தற்பெருமையை நிறுத்திட்டு சாப்பிடுங்க



### புவனேஸ்

எதுக்கு சேர் செல்போன் சுவிட்ச் ஓப் பண்ணி வைக்கிறீங்க? இன்னைக்கு என் மகளுக்கு கல்யாண நாள்... என் மருமகன் எனக்கு கோல் பண்ணி அசிங் அசிங்கமாக திட்டுவார் அதுதான்



### சுவேந்தினி

ஆயிரக்கணக்கான புத்தகங்களை
கொண்ட நூலகத்திற்கு சமம்
தாத்தா பாட்டிகள் உள்ள வீடு



### ராமராஜன்

பெண்ணின் பிரசவ அறையில் கணவன் இருப்பது கட்டாயமாக்கப்பட்டுவிட்டால் விவாகரத்தும் பலாத்காரமும் குறையும்



### ஜெரோம்

நம்முடைய மிகப்பெரிய பலவீனம் முயற்சியைக் கைவிடுவது... மிகப்பெரிய பலம் ஒருமுறை முயற்சி செய்வது



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கணவனைப் பயமுறுத்த தீ வைத்த மனைவி தடுக்க முற்பட்ட மாமியாருடன் மரணம்

(புத்தளம்)

கணவனைப் பயமுறுத்துவதற்காக தன் மீது மண்ணெண்ணெயை ஊற்றி தீமூட்டிக் கொள்ள முற்பட்ட இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவரும் அவரைக் காப்பாற்ற முயன்ற மாமியாரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக புத்தளம் மற்றும் கற்பிட்டி பிரிவுக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி பீ.எம்.ஹிசாம் தெரிவித்தார்.

இச்சம்பவத்தில் தீக்காயங்களுக்குள்ளான உயிரிழந்த பெண்ணின் கணவரும் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலாவி, செவ்வமடு பிரதேசத்தைச் சேர்ந்த நிபால் நிலாரா (வயது-35) மற்றும் செல்வநாயகி (வயது-58) ஆகியோரே இவ்வாறு உயிரிழந்தவர்களாவர். உயிரிழந்த பெண்ணின் மாமியார் பலத்த தீக்காயங்களுடன் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை இரவு உயிரிழந்தார்.

உயிரிழந்த பெண்ணின் கணவன் மனைவியுடன் தினமும் சண்டையிட்டுக் கொள்வதாகவும் நோன்புப் பெருநாள் தினத்துக்கு முதல்நாள் இரவும் குறித்த கணவர் தனது மனைவியை அடித்து துன்புறுத்தியுள்ளதாகவும் அன்றைய தினம் நோன்பு திறந்து விட்டு இப்பெண் தனது கணவரின் துன்புறுத்தல்களைத் தாங்கிக்கொள்ள முடியாது வீட்டுக்கு வெளியில் சென்றிருந்த நிலையில் இரவு பிள்ளைகள் தாயை வீட்டுக்கு அழைத்துள்ளதாகவும் அதன் பின்னர் வீட்டுக்கு வந்த அப்பெண் தனது கணவரைப் பயமுறுத்துவதற்காக தன் மீது மண்ணெண்ணெயை ஊற்றிக் கொண்டு தீப்பெட்டியைப் பற்ற வைத்தபோது பயந்து போன அப்பெண்ணின் கணவரும் கணவரின் தாயும் விரைந்து தீப்பெட்டியைப் பறிக்க முற்பட்ட போதே எதிர்பாராத விதமாக அவர்கள் மூவர் மீதும் தீப்பற்றிக் கொண்டுள்ளமை மேற்கொள்ளப்பட்ட மரண விசாரணைகளின் போது தெரிவிக்கப்பட்டதாக திடீர் மரண விசாரணை அதிகாரி ஹிசாம் தெரிவித்தார். பின்னர் அவர்கள் மூவரும் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் கணவரின் தாய் கடந்த வியாழக்கிழமையும் மனைவி கடந்த சனிக்கிழமை காலையும் உயிரிழந்துள்ளதுடன் கணவர் பலத்த தீக்காயங்களுடன் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பதுளை அல்- முஸ்தபா பல்கலைக்கழகத்தில் அடிப்படைவாதக் கல்வி போதிக்கப்படுவதில்லை

## ஈரான் தூதுவர் அமீரானி நீண்ட விளக்கம்

(கொழும்பு)

அல்-முஸ்தபா பல்கலைக் கழகத்தில் அடிப்படைவாதக் கல்வி போதிக்கப்படுவதில்லை. அது ஒரு இனத்தை, மதத்தை மையப்படுத்திய பல்கலைக்கழகமாகவும் இயங்கவில்லை. பதுளையில் அந்த பல்கலைக்கழகத்துக்கு விதிக்கப்பட்டிருக்கும் தடையால் பாதிக்கப்படுபவர்கள் இலங்கையைச் சேர்ந்த மாணவர்களே ஆவர் என்று கொழும்பிலுள்ள ஈரானியத் தூதுவர் மொஹமட் சாயிரி அமீரானி தெரிவித்தார்.

தனது உத்தியோகபூர்வ வாசஸ் தலத்தில் மலையக கல்விமான்களுடன் நடத்திய கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அல்-முஸ்தபா சர்வதேச பல்கலைக்கழகம், ஈரான் இஸ்லாமிய குடியரசு மற்றும் பல நாடுகளின் அங்கீகாரம் பெற்ற கல்வி நிலையமாகும்.

அதன் 20 கிளைகள் ஈரானிலும் 60 இற்கு மேற்பட்ட கிளைகள் இங்கிலாந்து, ரஷ்யா, ஜப்பான், இந்தியா, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், கனடா, மடகஸ்கர், கொங்கோ உள்ளிட்ட பல நாடுகளில் இயங்கி வருகின்றன.

இந்தப் பல்கலைக்கழகமானது பல்கலைக்கழகங்களின் சர்வதேச சங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சங்கத்தின் கையேட்டில் பதிவு செய்யப்பட்டு, இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் 2012 இல் அங்கீகரிக்கப்பட்டது.

அதற்கமைய சட்டம், அரசியல், விஞ்ஞானம் மற்றும் இஸ்லாமிய ஆய்வுகள் என்பன தற்போது ஈரானில் அமைந்துள்ள தலைமை பல்கலைக்கழகத்தின் தரத்துக்கு இணங்க, இலங்கையில் உள்ள கிளைக் கல்லூரியில் கற்பிக்கப்படுகின்றது. சான்றிதழ்கள் தாய்ப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படும்.

அத்துடன், ஈரானிய இஸ்லாமிய குடியரசும் அல்-முஸ்தபா பல்கலைக்கழகம் உள்ளிட்ட ஈரானின் அனைத்துப் பல்கலைக் கழகங்களும் தீவிரவாத கருத்துக்கள், மத அடிப்படைவாதத்திற்கு எதிரானவையாகும். இருப்பினும் அந்தப் பல்கலைக்கழகம் சர்வதேச ரீதியில் இயங்குவதனால், இஸ்லாத்துக்கான அறிமுகமாக சில அடிப்படை பாடநெறிகள் பாடத் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

அடிப்படைவாதத்திலிருந்து விலகி வாழ்வதற்கான கொள்கைகளை உள்ளடக்கியதாகவே இந்த கற்கை நெறிகள் அமையப் பெற்றுள்ளன. அந்தப் பாடநெறி தற்போது விருப்பத்துக்குரிய கற்கை நெறியாகவே கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் கற்கை நெறியை தொடர்ந்தமையின் காரணமாக மதமாற்றத்தை மேற்கொண்டதாக எத்தகைய சான்றுகளும் இதுவரையில் வெளியாகவில்லை.

அத்துடன், 2017 நவம்பர் மாதம் சபாநாயகர் கருஜெயசூரிய தலைமையில் கூடிய இலங்கை - ஈரான் பாராளுமன்ற நட்புக் குழு கூட்டத்தில் இந்த பல்கலைக்கழகம் ஈரானிய அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகமாக அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கமைய இந்தக் கற்கை நெறியை கற்பதன் ஊடாக இளமாணிப் பட்டத்தை பெறுவதற்கான வாய்ப்புக்களை வழங்கவும் பரீட்சைக்கட்டணமாக 1000 ரூபா மாத்திரம் அறவிட இணக்கம் காணப்பட்டது.

அதற்கமைய ஊவா மாகாணத்தில் 200 மாணவர்களுக்கு இலவசமாக தமிழ் மொழியிலும் கொழும்பு கிளையில் கற்கும் மாணவர்களுக்கு ஆங்கில மொழியிலும் இந்தக் கற்கை நெறியைத் தொடர்வதற்கான வாய்ப்புக்களும் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டன.

அதற்கும் மேலதிகமாக ஊவா மாகாணத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு பரீட்சை மற்றும் கற்கை நெறியைத் தொடர்வதில் அவர்கள் எதிர்நோக்கும் சிரமத்தை கருத்தில் கொண்டு சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பதுளையில் நடத்துவதற்கான நடவடிக்கைகளை பாராளுமன்ற உறுப்பினர் அரவிந்த குமாரினால் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டன.

இதுபற்றி பாராளுமன்ற உறுப்பினர் அரவிந்தகுமாரினால் உத்தியோகபூர்வமாக பதுளை-பண்டாரவளை பிரதேச செயலகங்களுக்கு தெரிவிக்கப்பட்டதோடு அந்தக் கடிதத்தின் பிரதி பட்டப்படிப்புக்கு முன் ஊவா மாகாணத்தின் அனைத்துப் பாடசாலை அதிபர்களிடமும் விநியோகிக்கப்பட்டது.

இலங்கையில் இயங்கும் அல்-முஸ்தபா பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் முஸ்லிம் அல்லாத மாணவர்களுக்கு இஸ்லாமிய பாடநெறிகளை கற்பிப்பதற்கு விரும்பவில்லை என்ற கருத்தை ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி அல்-முஸ்தபா பல்கலைக்கழக அரசியல் அறிவியல் விரிவுரையாளர்கள் மற்றும் அரவிந்தகுமார் ஆகியோர் ஈரானிய விஜயத்தின்போது தெரியப்படுத்தியிருந்தனர்.

இந்த நிலையில் துர்திர்ஷ்டவசமாக ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற மிலேச்சத்தனமான குண்டுத்தாக்குதல் சம்பவங்களை அடுத்து இந்த விடயம் அரசியல் பின்னணியில் ஏற்படுத்தப்படும் குழப்ப நிலையாக தோற்றம் பெற்றுள்ளது. தற்போது நாடு எதிர்நோக்கியிருக்கும் பாதுகாப்பு நெருக்கடி நிலையில் ஊவா மாகாணத்தின் தமிழ் கல்வி அமைச்சர் செந்தில் தொண்டமானால் முன்வைக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் மக்கள் மத்தியில் தவறான அபிப்பிராயம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

அதனால் குழப்ப நிலையை தவிர்ப்பதற்காகவே நாம் எத்தகைய கருத்துக்களையும் அவரிடம் முன்வைக்கவில்லை. ஆயினும் அதிகாரிகள் மட்டத்துக்கு மாத்திரம் இது தொடர்பில் எடுத்துரைக்கப்பட்டுள்ளதுடன், இத்தகைய குழப்பத்தை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். (இ-7)

# கருணா ஆயுதக் குழுவால் கொலை செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரின் சடலம் தோண்டியெடுப்பு

(கொக்கட்டிச்சோலை)

கடந்த 2008 ஆம் ஆண்டு ஆயுதக் குழுவொன்றினால் கொலை செய்யப்பட்டு, புதைக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரின் சடலம், உடற்கூற்று பரிசோதனைக்காக இன்று செவ்வாய்க்கிழமை தோண்டி எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதேவேளை இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் மூன்று பேர் கைது செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பில் கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் தொடர்புடைய கருணா ஆயுதக் குழுவின் முன்னாள் உறுப்பினர்கள் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை மயானத்தில் புதைக்கப்பட்ட சடலத்தை இன்று தோண்டி எடுத்து இரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பவுள்ளதாக குற்ற விசாரணைப் பிரிவினர் தெரிவித்தனர். கடந்த 2008 ஆம் ஆண்டு கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த கிரான்குளத்தைச் சேர்ந்த பிரசன்னா என்ற பொலிஸ் உத்தியோகத்தர் கடமை முடிந்து பொலிஸ் நிலையத்திலிருந்து வீடு திரும்பிய நிலையில் காணாமல் போயிருந்தார்.

காணாமல் போன பொலிஸ் உத்தியோகத்தர் தொடர்பாக, குற்ற விசாரணைப் பிரிவினர் விசாரணை மேற்கொண்டு வந்த நிலையில் குறித்த பொலிஸ் உத்தியோகத்தரைக் கடத்தி கொலை செய்த குற்றச்சாட்டில் கருணா ஆயுதக் குழுவின் முன்னாள் உறுப்பினர்களான மகிளன் என்றழைக்கப்படும் மேரி அன்ரனி போல் அஜதீபன், மதன் என்றழைக்கப்படும் தம்பிமுத்து செல்வராசா, லிங்கன் என்றழைக்கப்படும் சந்திரன் சுப்பிரமணியம் ஆகிய மூவரையும் சந்தேகத்தின் பேரில் ஓட்டமாவடி, களுவாஞ்சிக்குடி, கல்லடி போன்ற இடங்களில் வைத்து கடந்த மார்ச் மாதம் குற்ற விசாரணைப் பிரிவினர் கைது செய்தனர்.

இவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில் காணாமல் போன பொலிஸ் உத்தியோகத்தர், கடத்தப்பட்டு பின்னர் சுட்டு கொல்லப்பட்டு கொக்கட்டிச்சோலை முனைக்காடு மயானத்தில் புதைக்கப்பட்டதாக குற்ற விசாரணைப் பிரிவினரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரிய வந்தது.

இதனையடுத்து குறித்த சடலத்தை தோண்டி எடுப்பதற்கு குற்றவிசாரணைப் பிரிவின் உபபரிசோதகர், என்.நவரெட்ண மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் கடந்த மாதம் 23 ஆம் திகதி அனுமதி கோரியிருந்தார்.

இதனையடுத்து சடலத்தை இன்று நீதவான் முன்னிலையில் தோண்டி எடுத்து பகுப்பாய்வுக்கு அனுப்ப நீதவான் அனுமதி வழங்கினார். (இ-7)

# செப்புத்தொழிற்சாலை ஊழியருக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்

(கொழும்பு)

வெல்லம்பிட்டிய செப்புத் தொழிற்சாலை சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 10 ஆவது சந்தேக நபரை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

க.ராஜேந்திரன் எனும் சந்தேகநபரையே இவ்வாறு விளக்க மறியலில் வைக்க கொழும்பு மேலதிக நீதவான் பிரியந்த லியனகே உத்தரவிட்டார்.

குறித்த சம்பவம் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பயங்கரவாத விசாரணை பிரிவு தெரிவித்தது. அதேவேளை ஏனைய சந்தேகநபர்கள் தொடர்பில் விசாரணைகள் மற்றும் வாக்கு மூலங்கள் பெறப்பட்டு வருவதாகவும் பயங்கரவாத விசாரணை பிரிவு மேலும் தெரிவித்தது. (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 80 | 60 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 110 | 95 | 120 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 240 | 230 | 400 |
| தக்காளி | 100 | 80 | 80 | 70 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 160 | 150 | 120 | 100 |
| கோவா | 100 | 80 | 100 | 50 | 120 |
| கரட் | 150 | 100 | 200 | 80 | 200 |
| பூசணி | 60 | 50 | 70 | 50 | 80 |
| புடோல் | 80 | 70 | 70 | 70 | 100 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 150 | 200 | 130 | 200 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 100 | 75 | 120 |
| பாகற்காய் | 200 | 160 | 180 | 150 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 60 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 60 | 50 | 60 |
| பயற்றங்காய் | 120 | 140 | 100 | 70 | 120 |
| லீக்ஸ் | 150 | 80 | 100 | 70 | 120 |
| பீற்றூட் | 120 | 80 | 80 | 70 | 120 |
| கறிமிளகாய் | 180 | 220 | 200 | 80 | 240 |
| முருங்கைக்காய் | 200 | 180 | 140 | 140 | 200 |
| போஞ்சி | 250 | 220 | 240 | 200 | 240 |
| கத்தரிதம்புள்ள | 80 | 70 | – | 50 | 80 |
| கீரை - 1பிடி | 40 | 30 | 30 | 20 | 20 |
| தேசிக்காய் | 300 | 350 | 400 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 30 | 30 | 20-40 |
| இராசவள்ளி | 150 | 140 | 150 | 110 | 120 |
| வெங்காயப்பூ | 240 | 180 | 200 | 220 | 240 |
| முள்ளங்கி | 80 | 50 | 80 | 40 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 100 | 60 | 120 | 120 |




# அமைச்சரின் தந்திரம்



இளவரசி அழைத்தார் என்று வெளியே காத்திருந்த அமைச்சர் சிறிது சலிப்புடன் அங்கும் இங்கும் நடந்து கொண்டிருந்தார். இளவரசி வீட்டு வாயில் காப்போன் அமைச்சரின் சலிப்பான நடையைக் கண்டு ஒரு வித பயத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

இந்த நாட்டுக்காக என்ன என்னவெல்லாம் செய்ய வேண்டி உள்ளது என்று ஒரு கணம், சிந்தித்த அமைச்சர், தன்னுடைய எண்ணத்தை உடனே மாற்றிக் கொண்டார். இளவரசி அழைக்கிறார் என்று ஒரு பெண் பணியாள் வந்து சொல்லவும் உள்ளே சென்றார்.

மன்னிக்கவேண்டும் அமைச்சரே, தாங்களை அழைப்பதற்கு நேரமாகிவிட்டதால் தாங்கள் தயவு கூர்ந்து என்னை தவறாக கருதக்கூடாது.

ஒரு புன்னகையுடன் தந்தை தன் மகளிடம் ஒருபோதும் கோபம் கொள்வதில்லை.

நீங்கள் காட்டும் பாசத்திற்கு ஒன்றும் குறைவில்லை, ஆனால் நாடு என்று வரும்போது நீங்களும் என் தந்தையும் ஒன்றாகி விடுகிறீர்கள்.

இளவரசி தங்களை என் மகளாக நான் கருதினாலும் நான் நம் நாட்டு அரசனுக்கு சேவகன் என்பதை மறந்து விட வேண்டாம்.

ஒரு இளம்பெண்ணின் மனத்தை புரிந்துகொள்ளாத ஒரு நாடு இருந்தென்ன? போயென்ன? இதற்கு ஒரு மன்னர், அமைச்சர். வெறுப்புடன் வார்த்தைகளைக் கொட்டினாள் இளவரசி.

அமைச்சர் சிரித்துக்கொண்டு, உங்கள் மனநிலை புரிகிறது. ஆனால் நம் நாடு இப்பொழுது இருக்கும் சூழ்நிலையில் இது ஒன்றுதான் வழி, அதைத்தான் நானும் மன்னனும் செய்து கொண்டிருக்கிறோம்.

என்ன செய்தீர்கள்? படையெடுத்து வந்து விடுவேன் என்று பயமுறுத்திக்கொண்டிருக்கும் ஒரு காமுகந்த அரசனுக்கு என்னை மணம் முடிக்க பேசிக்கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கு வெட்கமாயில்லை.

கொஞ்சம் புரிந்து கொள்ளுங்கள், அவன் நம் நாட்டை விட பல மடங்கு பெரியவன், அது மட்டுமல்ல நம் நாட்டு வீரர்களைப் போல் இரு மடங்கு வீரர்களை வைத்துள்ளான். இந்த சூழ்நிலையில், நம் நாட்டில் பஞ்சம் வேறு வந்து விட்டது. இப்பொழுதுதான் கொஞ்சம் மழை பெய்து ஓரளவு நிமிர்ந்துள்ளோம். இந்தக் கால கட்டத்தில் நம்மால் ஒரு போர் புரிய முடியுமா?

அப்படியே இருக்கட்டும் இந்த போர் எனக்காகவா?

இல்லை, அவன் கப்பமாக ஏராளமான பொன்னும் பொருளும் கேட்கிறான், அதை கொடுத்தால் போர் புரிய வரமாட்டானாம். அதற்கு பதிலாகத்தான் உங்களை மணம் முடித்து உறவுகளாக்கிக்கொள்ள நினைக்கிறோம்.

அமைச்சரே! இதற்கு எதிர்காலம் உங்களை கோழைகள் என்று அழைக்காதா? கேவலம் வீரத்துக்கு ஒரு பெண்ணை விலை பேசி சமாதானமாகிக் கொண்டவர்கள் என்று என் தந்தைக்கும், உங்களுக்கும் அவப்பெயர் வராதா?

உங்களது கோபம் புரிகிறது. உங்களை சமாதானப்படுத்தத்தான் மன்னர் என்னை இங்கு அனுப்பி இருக்கிறார். அந்த மன்னனைப்பற்றி எனக்கும் தெரியும். அவன் பெண் பித்து பிடித்தவன், ஏராளமான மனைவிகள் உண்டு.

தெரிந்தும், அந்த பாவப்பட்ட பெண்கள் கூட்டத்துக்குள் என்னையும் கொண்டு போய் சேர்த்து விட்டால், உங்களுக்கும் உங்கள் மன்னனுக்கும் பொறுப்பு தீர்ந்து விடும் அல்லவா?

இல்லை, எனக்குப் பொறுப்பு தீராது! நான் என்ன நடந்தாலும் இந்த நாட்டை காக்கும் பொறுப்பில் உள்ளவன், இருந்தாலும் மன்னனுக்கு துரோகம் செய்ய முடியாது. ஆனால் இதே மன நிலையில் நீங்கள் இருப்பீர்கள் என்றால் ஒரு உபாயம் செய்ய முடியும். ஆனால் நான் குற்றவாளி ஆகிவிடுவேன், மன்னனுக்கு எதிரானவன் என்று சொல்வார்கள். என்ன சொல்கிறீர்கள்?

திகைத்து நின்ற இளவரசி, அமைச்சரே உண்மையாகத்தான் சொல்கிறீர்களா? நான் இதிலிருந்து வெளியே வந்து விட முடியுமா? உங்களால் உபாயம் சொல்ல முடியுமா?

முடியும். உங்களுக்கு தைரியமும் துணிச்சலும் மட்டும்தான் தேவை.

அமைச்சரே, ஆண்களுக்கு குறைந்ததல்ல என் வீரம். இதை பலமுறை நிரூபித்துள்ளேன் என்பது உங்களுக்குத் தெரியும்.

அதனால்தான் இந்தத் திட்டத்தையே உங்களுக்கு சொல்கிறேன். நன்றி, தன் பணிப்பெண்களிடம் இங்கிருந்து செல்லும்படி கட்டளையிடுகிறாள். அனைவரும் சென்ற பின் அமைச்சர் இளவரசியின் காதில் ஏதோ சொல்கிறார்.

அமைச்சரே! ஆச்சரியமும் அதிர்ச்சியும் அடைகிறாள் இளவரசி. இது நடக்குமா? நடக்கும். நடக்க வேண்டும். அதுவும் இரண்டே நாட்களில். அதற்குள் நான் நம் நாட்டில் உள்ள தலை சிறந்த கள்வர் கூட்டத்தை கூட்டப்போகிறேன். கள்வர் கூட்டமா? அமைச்சர் சிரித்துக்கொண்டே, ஏன் திகைக்கிறீர்கள், தனக்காக திருடும்போது அவனுக்கு சட்டத்தின் பயம் இருக்கும். நாட்டுக்காக திருடச் சொன்னால் அவனால் சிறப்பாகச் செயற்பட முடியும். அடுத்ததாக நாம் எடுக்கப் போகும் நடவடிக்கைக்கு ஆதரவாக நமது நாட்டின் கிழக்கில் இருக்கும் கோசல நாட்டின் உதவி நமக்கு கிடைக்க வேண்டும். அந்த நாட்டின் தளபதி உங்கள் மனம் கவர்ந்தவன் அல்லவா?

அமைச்சரே! வெட்கத்தால் அவள் முகம் சிவக்க இது எப்படி தங்களுக்கு தெரிந்தது.

நீங்கள் சந்தித்துக் கொள்வது, சில நேரங்களில் ஆண் வேடமிட்டு அந்த நாட்டுக்குச் சென்று அவனுடன் அளவளாவி வருவது, அவனும் மாறு வேடத்தில் இங்கு வந்து செல்வது, எல்லாம் எனக்குத் தெரியும்.

மன்னித்துக்கொள்ளுங்கள் அமைச்சரே, உங்களைத் தவறாக எடை போட்டு விட்டேன். பரவாயில்லை, இந்த நாட்டில் என்ன நடக்கிறது என்பதை கண்காணித்துக் கொண்டிருப்பது ஒரு அமைச்சரின் கடமைதானே.

இரண்டு நாட்கள் எந்தவிதமான சம்பவங்களும் நடைபெறவில்லை. மூன்றாம் நாள் காலையில் அந்த செய்தி நாட்டை உலுக்கியது. மன்னரும் ராணியும் சிறை பிடிக்கப்பட்டனர். சிறை பிடித்தது, அந்த நாட்டின் இளவரசி.

மக்கள், அதிர்ச்சியும் குழப்பமும் அடைந்தனர். இது எப்படி? என்றாலும் பெரிய அளவில் எதிர்ப்பு எழவில்லை, காரணம் அந்த நாட்டின் இளவரசியின் மீது மக்கள் கொண்டிருந்த நன்மதிப்பு. அவளின் வீரம் பலமுறை நாட்டு மக்களுக்கு தெரிந்திருந்தது.

அன்று பகலிலேயே தன்னை மகாராணி என்று முடிசூட்டிக் கொண்டாள் அந்த இளவரசி. அது மட்டுமல்ல, அந்த பட்டாபிசேகத்துக்கு கோசல நாட்டு மன்னனே தலைமை வகித்தான். அப்பொழுதே ஒரு அறிவிப்பைச் செய்தான்.

தன்னுடைய மகனைப் போல வளர்த்த தங்கள் நாட்டு தளபதியை மகாராணிக்கு மணம் முடித்து வைப்பதாகவும் அறிவித்தான்.

அப்பொழுது அவர்கள் நாட்டின் மீது படையெடுத்து வருவதாக இருந்த மன்னன், பெரும் குழப்பத்தில் இருந்தான். அவன் நாட்டில் இருந்த கஜானா முழுவதுமாக கொள்ளையடிக்கப்பட்டிருந்தது.

யார் செய்தது? அத்தனை காவல் இருந்தும் எப்படி கள்வர்களால் கொள்ளையடிக்கப்பட்டது.

அந்த நாட்டு சபையில் இவர்கள் நாடு செய்த சதியாய் இருக்குமோ என்று சந்தேகம் எழுப்பப்பட்டது. மன்னன் அதை ஒத்துக் கொள்ளவில்லை.

இப்பொழுது அந்த நாட்டிலேயே பெரும் குழப்பம் உள்ளது. மன்னனையே அவர் மகள் சிறை பிடித்திருக்கிறாள்.

அந்த சூழ்நிலையில், அங்கிருந்து கள்வர்களோ, வீரர்களோ, இந்தச் செயலை செய்ய வாய்ப்பில்லை.

நாம் அவர்கள் மீது படையெடுக்கும் திட்டம் இப்பொழுது கொஞ்சம் ஆறப் போடலாம், காரணம் கோசல நாடு அவர்களுடன் உறவு கொண்டாடுகிறது.

அது போக நம்மிடமும் இருந்த சேமிப்பு களவாடப்பட்டிருக்கிறது காத்திருப்போம்.

அங்கு இளவரசியாய் இருந்து மகாராணியாய் முடிசூட்டிக் கொண்டவள், கள்வர்கள் தலைவனுக்கு பரிசுகளும் பாராட்டுக்களும் வழங்கி, கௌரவித்துக் கொண்டிருந்தாள்.

தன் வீரர்களிடையே அவள் உரையாற்றினாள், இனிமேல் போர் என்றால் போர்தான்.

எந்த பெண்ணின் விருப்பம் அறியாமல் பெண் கொடுத்து சமாதானம் செய்யும் பேச்சு என்பது இனி இந்த நாட்டில் இல்லை.

அரண்மனையின் உப்பரிகையில் ஒரு அறையில் மகாராஜாவும் மகாராணியும் அமைச்சருடன் உட்கார்ந்து அவரை பாராட்டிக்கொண்டிருந்தார்கள்.

எப்படி இந்த பிரச்சினையில் இருந்து மீளப்போகிறேன் என்ற கவலையில் இருந்தேன். முடித்து கொடுத்துவிட்டீர்கள். நன்றி அமைச்சரே.

## வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்



சிவப்பு பைக்குள் சில்லறைகள் - அது என்ன?

மிளகாய்

## பொது அறிவுத்துணுக்குகள்

- 2004 - ஆயிரம் மெகாபைட் கொள்ளளவு கொண்ட ஈ-மெயில் என்ற இலவச மின்னஞ்சல் சேவையை அறிமுகப்படுத்தியது, கூகுள்.
- 24 மணி நேரத்தில் (ஒருநாள்) சுமார் 3 அடி உயரம் வளரும் திறன் மூங்கிலுக்கு உண்டு.
- பெரும்பாலான உதட்டுச்சாயங்களில் (லிப்ஸ்டிக்) மீனின் செதில்கள் பயன்படுத்தப்படுகின்றன.
- கால் நகங்களைவிட, கை நகங்கள் 4 மடங்கு வேகத்தில் வளர்கின்றன.
- மனிதனின் தொடை எலும்புகள், கொங்கிறீட் கலவையை விட வலிமை வாய்ந்தவை.

> பின்னாலிருந்து நீ விமர்சிக்கப்பட்டால்; நினைத்துக் கொள்; நீ அவர்களுக்கு முன்னால் இருக்கிறாய் என்று.
> – ஹிட்லர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பிரதமர் மோடிக்கு புத்தர் சிலையை அன்பளிப்பாகக் கொடுத்தது ஏன்?

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் கலந்துரையாடியதுடன் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவுடனும் கலந்துரையாடத் தவறவில்லை.

அதேநேரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் எட்டு நிமிடங்கள் மாத்திரமே சந்தித்துக் கதைத்தார் எனும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் போக்கை அவர் அறிந்து வைத்துள்ளார் என்பதைப் புரியமுடியும்.

அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நேர்மைத்தன்மை தொடர்பில் இந்தியப் புலனாய்வுத்துறை நிச்சயம் பிரதமர் நரேந்திர மோடிக்கு எடுத்துக்கூறியிருக்கும்.

ஆக, தன் இனத்துக்கு கெடுதி இழைக்கக் கூடிய ஓர் அரசியல் தலைமையுடன் பேசுவதற்குப் பிரதமர் மோடி விரும்பியிருக்க மாட்டார் என்பதே நிதர்சனமானது.

இவ்வாறு நாம் கூறுவதை யாரேனும் நிராகரிப்பார்களாக இருந்தால்,

நாம் அவர்களிடம் கேட்பதெல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் இப்போதும் எதிர்க்கட்சித் தலைவராக இருந்திருந்தால், மகிந்த ராஜபக்ஷவுக்குக் கொடுத்த அதே முன்னுரிமையை பிரதமர் நரேந்திர மோடி இரா.சம்பந்தருக்கும் கொடுத்திருப்பாரா? என்பதுதான்.

உண்மையில் இப்போதும் எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தர் இருந்திருப்பாராயின் சிலவேளை அவரைப் பிரதமர் மோடி சந்திக்காமல் கூட இருந்திருக்கலாம்.

அதேநேரம் பிரதமர் மோடியுடன் வடக்கின் முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் சந்திப்பதாக இருந்திருந்தால் எட்டு நிமிடங்கள் மட்டும் அந்தச் சந்திப்பு நடந்திருக்காது.

மாறாக அரை மணித்தியாலமேனும் அச்சந்திப்பு நீண்டு சென்றிருக்கும்.

இங்குதான்; சந்திப்பவர்கள் யார், அவர்களின் நேர்மைத்தன்மை, அரசியல் புலமை எனப் பல விடயங்கள் சந்திப்புக்கான நேரத்தில் செல்வாக்குச் செலுத்தும்.

இந்தச் செல்வாக்கு ஒதுக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல்களைக் கூடக் கடந்தும் செல்லலாம்.

இவை ஒருபுறமிருக்க, இலங்கைக்கு வந்த பிரதமர் மோடிக்கு ஜனாதிபதி மைத்திரி குடைபிடித்தார் என்பது பற்றி விமர்சிக்கின்றோம்.

அது ஓர் விமர்சனத்துக்குரிய விடயமன்று. மாறாக இலங்கைக்கு வந்த பிரதமர் மோடிக்கு ஜனாதிபதி மைத்திரி புத்தர் சிலையை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இதுதான் விமர்சிக்கப்பட வேண்டிய விடயமாகும். இந்தியப் பிரதமர் மோடிக்கு ஜனாதிபதி மைத்திரி புத்தர் சிலையை வழங்கியதனூடாக இலங்கை பௌத்த நாடு. ஆகையால் நாங்கள் புத்தர் சிலையைத்தான் தங்களுக்கு அன்பளிப்பாகத் தருவோம்.

இலங்கை பௌத்த நாடு என்பதை இந்தியாவோ பிரதமர் மோடியோ எதுவும் செய்ய முடியாது என்பதை நாசூக்காக உணர்த்தவே பிரதமர் மோடிக்கு ஜனாதிபதி மைத்திரி புத்தர் சிலையை வழங்கினார் என்பதே உண்மைப் பொருளாகும்.

# அராஜக நிலைக்குள் நாடு

## ஜனாதிபதி மீது ஜே.வி.பி. விசனம்

(கொழும்பு)

ஜனாதிபதி நாட்டை நிர்வகிப்பதைத் தவிர ஏனைய விடயங்களையே செய்து வருகிறார். இதனால், நாடு அராஜக நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக, மக்கள் விடுதலை முன்னணி குற்றம் சாட்டியது.

கொழும்பில் அமைந்துள்ள கட்சித் தலைமையகத்தில், நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே, கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டை நிர்வகிப்பதன் பிரதான விடயம், தேசிய பாதுகாப்பு உள்ளிட்ட நாட்டு மக்களுக்கு அத்தியாவசிய வேலைத் திட்டங்களை மேற்கொள்வதே ஆகும்.

ஜனாதிபதியும் பிரதமரும் கடந்த நான்கரை வருடத்தில் தனித் தனியே பயணித்ததனால், அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை எனத் தெரிவித்தார். (இ-7)

## சிலோன் தௌஹீத் ஜமாத் அமைப்பின் உறுப்பினர்கள் பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

சிலோன் தௌஹீத் ஜமாத் அமைப்பின் பதுளைக்கிளை தலைவர், செயலாளர் மற்றும் விரிவுரையாளர் ஆகிய மூவரும் 15 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

சிலோன் தௌஹீத் ஜமாத் அமைப்பின் பதுளைக்கிளை தலைவர், செயலாளர் மற்றும் விரிவுரையாளர் ஆகிய மூவரையும் பிணையில் விடுவிக்குமாறு பதுளை நீதவான் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் அதை ஏற்றுக் கொண்ட நீதவான் குறித்த மூவரையும் பிணையில் விடுவித்தார்.

அத்துடன் மூவரையும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார். பதுளை நீதவான் சமிந்த கருணாதாஸ முன்னிலையில் நேற்று பகல் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சிலோன் தௌஹீத் ஜமாத் அமைப்பின் பதுளைக் கிளையின் தலைவர் மொகமது உசேயின் அக்கலாம், அமைப்பின் செயலாளர் சாகுல் ஹமீட் மொகமத் நிசாம், அமைப்பின் விரிவுரையாளர் சுலைமான் சிராஜ் ஹலியெகியா ஆகிய மூவரையும் தலா ஐந்து இலட்ச சரீரப் பிணை என்ற அடிப்படையில் 15 இலட்ச ரூபா சரீரப் பிணையில் விடுவித்தார்.

சந்தேக நபர்கள் மூவரும் சிலோன் தௌஹீத் ஜமாத் அமைப்பைச் சேர்ந்தவர்களென்றும், இவ் அமைப்பு தடை செய்யப்பட்ட அமைப்பல்ல. ஆனால், தேசிய தௌஹீத் அமைப்பே தடை செய்யப்பட்டிருப்பதாகும். இம் மூவரும் இவ்வமைப்பைச் சார்ந்தவர்களல்ல. அத்துடன் இம்மூவரும் கைது செய்யப்பட்டதிலிருந்து இதுவரைக்கும் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வு விசாரணைகளில் இவர்கள் பயங்கரவாதக் குற்றச்செயல்களில் சம்பந்தப்பட்டவர்களாகக் காணப்படவில்லையென்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

எனவே இவர்களுக்குப் பிணை வழங்கும்படி சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் நீதவானிடம் கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர்.

இக் கோரிக்கைகளை நீதிமன்றத்தில் ஆஜரான பொலிஸாரும் ஆட்சேபிக்கவில்லை. சந்தேக நபர்களிடமிருந்து மீட்கப்பட்ட பொருட்கள் அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன் அறிக்கைகளும் இதுவரை எமக்குக் கிடைக்கவில்லை. எது எப்படியிருந்த போதிலும் சந்தேக நபர்களைப் பிணையில் விடுவதற்கு எமக்கு எந்த ஆட்சேபனையும் இல்லையென்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து மூவரையும் சரீரப் பிணையில் விடுவித்ததுடன் ஓகஸ்ட் மாதம் 9ஆம் திகதி மீளவும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்தார். (இ-7)

## மணவாளக்கோல உற்சவம் நாளை

(யாழ்ப்பாணம்)

ஆசிமட அரசடி விநாயகர் ஆலய மணவாளக்கோல உற்சவ விஞ்ஞாபனம் நாளை 12 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறும்.

இதில் காலை 7 மணியளவில் விநாயகப் பெருமானுக்கு 1008 சங்காபிஷேகமும் பரிவாரமூர்த்திகளுக்கு ஸ்நபன அபிஷேகமும் நடைபெற்று பெருமான் திருவீதி உலா வருதலும் இடம்பெறும். (இ-7)

## கும்பாபிஷேகம்

(கரணவாய்)

நாகர்கோவில் சுடலைப்பிட்டி பிள்ளையார் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10.22 இற்கும் நண்பகல் 12.22 இற்கும் இடைப்பட்ட சுப முகூர்த்த வேளையில் நடைபெறும்.

எண்ணெய்க்காப்பு சாத்துதல் நிகழ்வு நாளை மறுதினம் அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெறும். (5-60)

## விபத்தில் முதியவர் காயம்

(சாவகச்சேரி)

துவிச்சக்கர வண்டியுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த முதியவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு மீசாலை வடக்கு வேம்பிராய் வீதியில் இடம்பெற்றது.

துவிச்சக்கர வண்டியில் வாழைக் குலையை ஏற்றிச் சென்ற போது மோட்டார் சைக்கிள் மோதியதில் காயமடைந்தார் .

நீர்வேலி அச்செழுவைச் சேர்ந்த 67 வயது முதியவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (இ-5-114)

### தெரிவுக்குழு விசாரணை

## பாதுகாப்புத் துறையை காட்டிக் கொடுக்கும்

பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் விசாரணைகளின் காரணமாக பாதுகாப்புத்துறை காட்டிக்கொடுக்கப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாதுகாப்புத்துறை மற்றும் புலனாய்வு துறைசார் தகவல்களையும் அதிகாரிகளையும் பாதுகாப்பது அவசியமானதாகும். புலனாய்வுத் தகவல்களையோ அல்லது சம்பந்தப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகளின் தகவல்களையோ கசியவிடப்பட்டால் அது நாட்டின் தேசிய பாதுகாப்புக்கும் மக்களுக்கும் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (ம-5)

## தீக்காயத்திற்குள்ளான பெண் உயிரிழப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கு உட்பட்ட ஓதியமலைப் பகுதியில் குடும்பப் பெண் ஒருவர் தீயில் எரிந்தநிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

ஓதியமலைப்பகுதியில் வசித்துவரும் திலீபன்வட்சலா (வயது 36) என்ற குடும்ப பெண் அவரது வீட்டில் நேற்று முன்தினம் தனக்குத் தானே மண்ணெண்ணெய் ஊற்றி எரிந்த நிலையில் உறவுகளால் மீட்கப்பட்டு நெடுங்கேணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் ஒட்டுசுட்டான் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (9-281)

## இளைஞன் கொலை சந்தேகநபர்கள் கைது

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பு - துன்கல்பிடிய பகுதியில் சந்தேக நபர்கள் சிலரால் தாக்கப்பட்டு இளைஞர் ஒருவர் கொலைச் செய்யப்பட்டார்.

துன்கல்பிடிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட செத்தப்பாடுவ பகுதியின் வீதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை படுகாயமடைந்தநிலையில் இளைஞர் ஒருவர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின் உயிரிழந்தார் என பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்றதகவலுக்கமைய விசாரணைகளை ஆரம்பித்தனர்.

பமுனுகம பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார் என பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

உயிரிழந்த இளைஞனும் சிலரும் குறித்த பகுதியில் மதுபான நிலையமொன்றில் மதுபானம் அருந்தியுள்ளதுடன், இதன்போது இவர்களுக்கு இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

இதனை தொடர்ந்தே சந்தேக நபர்களால் இளைஞன் கொலை செய்யப்பட்டதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்தது.

பொலிஸார் இச்சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்கள் நால்வரை கைது செய்ததுடன் இவர்கள் கொலை செய்வதற்கு பயன்படுத்திய ஆயுதங்களையும் கைப்பற்றினர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை துன்கல்பிடிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# 18,20 வயது ஆண்களுக்கான கரப்பந்தாட்டம் புத்தூர் சோமஸ்கந்தா அணி சம்பியன்







வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 18,20 வயதிற்குட்பட்ட ஆண்களிற்கான கரப்பந்தாட்டப் போட்டிகளில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 18 வயதிற்குட்பட்ட ஆண்களிற்கான கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணியை எதிர்த்து மன்னார் புதுக்குடியிருப்பு ஜி.எம்.எம்.பாடசாலை அணி மோதியது.


இதில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது. 3 ஆம் இடத்தை ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணி பெற்றது.

20 வயதிற்குட்பட்ட ஆண்களிற்கான கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணியை எதிர்த்து தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய அணி மோதியது.

இதில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணி ஏக ஆதிக்கம் செலுத்தி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது. 3 ஆம் இடத்தை கிளிநொச்சி மத்திய கல்லூரி அணி பெற்றது. (க-60)

# தர்சிகன் சிறப்பான அரைச்சதம்

## புற்தரையில் முதலாவது வெற்றியைப் பதித்தது திருநெல்வேலி கிரிக்கெட் அணி



யாழ்ப்பாணம் கிரிக்கெட் சங்கத்தின் அனுசரணையுடன், ஞானம்ஸ் பெயின்ட் நிறுவனம், அழைக்கப்பட்ட 8 அணிகளுக்கிடையில் விஜயரட்ணம் ஞாபகார்த்த இருபது - 20 சுற்றுப் போட்டியை நடத்தி வருகின்றது.

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இந்தச் சுற்றுப்போட்டியில், அணிகள் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு முதற்சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் இடம்பெறுகின்றன.

கடந்த 8 ஆம் திகதி நடைபெற்ற முதலாவது லீக் ஆட்டமொன்றில் திருநெல்வேலி கிரிக்கெட் அணியை எதிர்த்து ஏபி விளையாட்டுக்கழக அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வென்ற திருநெல்வேலி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. ஏபி அணி, 20 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து, 109 ஓட்டங்களை எடுத்தது. துடுப்பாட்டத்தில் ஆதித்தன் 30, பார்த்தீபன் 24 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் திருநெல்வேலி கிரிக்கெட் அணி சார்பாக, சுரேஸ் 24 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும் பிரபவன் 33 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

110 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய திருநெல்வேலி கிரிக்கெட் அணி, தர்சிகனின் அரைச்சதத்தின் உதவியுடன் 19.1 ஓவர்களில் 3 விக்கெட்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் தர்சிகன் 52 ஓட்டங்களையும் பிரபவன் ஆட்டமிழக்காமல் 28 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஏபி அணி சார்பாக குமரன் 2 விக்கெட்களைக் கைப்பற்றினார். (க-26)

## தூய ஒளி வெற்றிக்கிண்ணம்

# அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் அரையிறுதிக்குத் தெரிவானது



மண்டைதீவில் கொலையுண்ட 31 மீனவர்களின் 33 ஆவது ஆண்டு ஞாபகார்த்த நினைவாக குருநகர் பாடுமீன் விளையாட்டு மைதானத்தில் 5ஆவது நாளாக தூய ஒளி வெற்றிக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட போட்டியில் சென் றோக்ஸ் விளையாட்டு கழகத்தை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் மோதியது.

இப்போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு நுழைந்தது. (க-26-106)

அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும்
Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

# வயாவிளான் வீராங்கனைகள் பளுதூக்கலிலும் சாதிப்பு



வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை திணைக்களத்தின் ஏற்பாட்டில், பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்படும் பெரு விளையாட்டுப் போட்டிகள் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதில் 20 வயதுப்பிரிவு பெண்களுக்கான பளுதூக்கல் போட்டிகள் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதில் 55 கிலோகிராம் எடைப்பிரிவில் கலந்துகொண்ட வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.நிதுர்சனா 130 கிலோ கிராம் எடையை தூக்கி தங்கப் பதக்கத்தை வென்றார்.

49 கிலோ கிராம் எடைப்பிரிவில் கலந்துகொண்ட அதே பாடசாலையின் ரி.அபிசாக் 105 கிலோ கிராம் எடையை தூக்கி தங்கப் பதக்கம் வென்றார்.


76 கிலோ கிராம் எடைப்பிரிவில் கலந்துகொண்ட அதே பாடசாலையின் எஸ்.தனுசியா 100 கிலோகிராம் எடையைத் தூக்கி தங்கப்பதக்கம் வென்றார். (க-26)

உ
சிவார்ப்பணம்

அன்னை எனும் ஆலயத்தில் ஆண்டவனாய் அமைந்து

# நான்காம் ஆண்டு நினைவுதனில்

அன்னை மடியில்
25 - 02 - 1950



ஆண்டவன் அடியில்
26 - 05 - 2015

## அமரர் நாகலிங்கம் தெட்சணாமூர்த்தி

**(ஜெகதா ஹாட்வெயர்ஸ் ஸ்தாபகரும் உரிமையாளரும் - கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்)**

திதி: வளர்பிறை நவமி (11.06.2019)

தாயுமானவரே!

தஞ்சம் அடைந்தவரை தவிக்கவிடா தட்சகரே!
தட்டிக் கவி பலர் பாட தபனனாக திகழ்ந்தீரே!

தாய் வேராய் வளர்ந்துதான் தாபித்தீர் உம் கொடி வழியை!
தான சீலம் கொண்டுயர்ந்து தாயாதிகளையும் தயாபரித்தீர்!

திகழ்ந்து ஒளி பெற்று தியாகேசர் திருவடி காண!
திடசித்தம் கொண்டு தான் திவ்வியம் பெற்றீரோ!

தீட்சண்யம் கொண்டவரே தீரத்துவம் உடையவரே!
தீவலம் வந்த துணை எங்கே? தேடி நீரும் ஏகினீரோ!

துணரி கொண்டு பணிந்திட்டோம் துய்யவரே உம்மை நாம்!
துதி பாடி வழிபட்டோம் துயர் துடைக்க வாரும் ஐயா!

தூலதேகம் விட்டு நீ கி தூல சித்து சென்றதேனோ!
தூலிகைகள் துடிக்குதையா தூயவரே உம் கதை எழுத!

தெய்வகாரியம் யாவும் தெண்மையுடன் ஆற்றுவீரே!
தெய்வத்துவம் கொண்டுயர தென் திசையோனுடன் சென்றீரோ!

தேட்டாளர் இருவரும் தேடுகின்றோம் உம் முகத்தை!
தேறுதலைத் தாருமையா! தேவநிலை பெற்றவரே!

தைரியம் இழந்து நின்றால் தைவருதல் செய்வீரே!
தையலாள் மனைவியுடன் தைவம் தான் கொண்டீரோ!

தொட்டிலிட்டுச் சீராட்டி தொட்டிமை பயிற்றினீரே!
தொப்பாரம் இறக்கிவிட்டு தொலைதூரம் சென்றீரோ!

தோள் கொடுத்த துணைவியுடன் தோன்றாத் துணையாய் நிற்கின்றீர்!
தோற்றுதலுக்காய் ஏங்குகின்றோம் தோன்றுகைதான் கிடைத்திடுமோ!

தௌரிதம் கொண்டுதான் தாயவள் தாள் சேர்ந்தீர்!
தௌதிகமாம் அன்னையவள் தண் நிழல் தான் தந்தாளோ!

அஃது நிச்சயம் தந்திருப்பாள் திகம்பரி உங்களுக்கு!
அன்புத் தாயவள் தான் தயாபரி ஆயிற்றே!

ஐயனே! கொடி வழி பெருகும் போது
தங்கள் நல் அறங்களும் தொடரும் என
அக்கினிப் பிளம்பெனக் கொதித்து வழியும்
விழிநீரை சாட்சியாக்கி வாக்களிக்கின்றோம்.

ஈர விழிகளுடன் **குடும்பத்தினர்**

## கடையொன்று...

நள்ளிரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வெற்றிலை வியாபாரம் இடம்பெறும் பெட்டிக் கடையே இவ்வாறு எரிந்து நாசமாகியுள்ளது.

குறித்த தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை.

மின்னிணைப்பு இல்லாத கடைக்கு விசமிகளால் தீ வைக்கப்பட்டதா? அல்லது கடைக்குள் தீ விபத்து இடம்பெற்றதா? என்ற கோணத்தில் வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## 26 வயது இளம்...

சின்னத்தம்பி ரதீஸ்குமார் (வயது 26) என்ற இளம் குடும்பஸ்தரே மேற்படி உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில், 5 பேர் கொண்ட குழுவினர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கு சற்று தொலைவில் உள்ள பகுதியில் கடந்த 3 ஆம் திகதி குறித்த குடும்பஸ்தரை தாக்கியுள்ளனர்

படுகாயத்துக்குள்ளான குடும்பஸ்தர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். கடந்த 5 ஆம் திகதி அவரிடம் பெறப்பட்ட வாக்கு மூலத்தின் அடிப்படையில் 19, 21, 22 வயதுடைய 3 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்

மேலும் படுகாயங்களுக்குள்ளான குறித்த நபர் நேற்று மாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ம-9)

## மீண்டும் மீண்டும்...

"முல்லைத்தீவு மக்களிடத்தில் மீண்டும் மீண்டும் பிரிவினையை தூண்டும் விதமாக செயற்பட வேண்டாம். அதற்கு ஏற்ற வகையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்" என்றும் அமைச்சர் மனோ கணேசன், பொலிஸாரிடம் வலியுறுத்தினார்.

முல்லைத்தீவு பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய விவகாரம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் இடம் பெற்றது.

இந்து சமய அலுவல்கள், அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன் , சிவசக்தி ஆனந்தன், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், நீராவியடிப் பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினர், நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் விகாரை அமைத்துள்ள பௌத்த பிக்கு, முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்தனர்.

"முல்லைத்தீவு நீதிமன்றத்தால் ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கின்ற கட்டளையை இரண்டு தரப்பும் மதித்து செயற்பட வேண்டும். அங்கே நீதிமன்றக் கட்டளைக்கு அமைவாக வேலை செய்பவர்களை பொலிஸார் இடையூறு செய்யக்கூடாது.

அதேபோன்று நீதிமன்றக் கட்டளையை மதிக்காது அனுமதிகள் எதுவும் பெற்றுக் கொள்ளாது அபிவிருத்திவேலை செய்கின்ற பிக்கு தரப்பினரோ அல்லது பிள்ளையார் ஆலய தரப்பினரோ இருந்தால் அவர்கள் மீது பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும். பொலிஸார் பக்கச்சார்பாக இந்த விடயத்திலே செயற்படாது, நீதியை நிலை நாட்ட வேண்டும்" என்று அமைச்சர் மனோ கணேசனால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

"முல்லைத்தீவு மாவட்ட செயலாளர், பொலிஸார், பிரதேச சபை மற்றும் பிரதேச செயலகம் இணைந்து தற்போது வரை அந்த சர்ச்சைக்குரிய நீராவியடிப் பிள்ளையார் ஆலயப் பகுதியில் நடைபெற்று வருகின்ற வேலைகள் தொடர்பாகவும் தற்போது வரை எவ்வாறான கட்டட நிர்மாணப் பணிகள் இடம்பெற்றிருக்கின்றன என்பது தொடர்பாக காணொலிப் பதிவு ஒன்றை பதிந்து ஆவணமாக வைத்துக் கொள்ள வேண்டும். அதுதொடர்பான அறிக்கை ஒன்றை தயார் படுத்தி வைத்துக் கொள்ள வேண்டும்" என்றும் அமைச்சரால் பணிக்கப்பட்டது.

தற்போது இந்த ஆலய விவகாரம் தொடர்பாக முல்லைத்தீவு நீதிமன்றால் வழங்கப்பட்டுள்ள கட்டளைக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டால், அங்கே நீராவியடிப் பிள்ளையார் ஆலயம் தொடர்பான ஆவணங்கள் ஆராயப்பட்டு அதில் உள்ள உண்மை நிலைமைகளை ஆலயம் சார்பாக இந்து கலாசார அலுவல்கள் அமைச்சு நீதிமன்றத்தில் தமது நியாயத்தையும் முன்வைக்கும் என்றும் அமைச்சர் மனோ கணேசன் சுட்டிக் காட்டினார்.

மேலும் பிள்ளையார் ஆலய தரப்பினர் உரிய திணைக்களங்களின் அனுமதிகளோடு இந்த பிள்ளையார் ஆலய பகுதியில் கட்டுமானங்களை மேற்கொள்ளும்போது, இந்து கலாசார அலுவல்கள் அமைச்சும் அதற்கான நிதி உதவிகளை வழங்கும்" என்று அமைச்சர் மனோ கணேசன் குறிப்பிட்டார்.

இந்த சந்திப்புக்கு முன்னதாக நீராவியடிப் பிள்ளையார் ஆலய பகுதிக்கு சென்ற அமைச்சர் மனோ கணேசன் தலைமையிலான குழுவினர் பௌத்த பிக்குவுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டதோடு அங்கே இருக்கின்ற பௌத்த ஆலயம் மற்றும் பிள்ளையார் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்டிருந்தனர். (ம-3, 281)

## பாராளுமன்ற...

இடம்பெறவுள்ளது.

இதன்போது அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா மற்றும் காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் சாட்சியமளிக்கவுள்ளனர்.

அத்தோடு தனது பதவியை இராஜினாமா செய்துள்ள மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலியும் இன்று சாட்சியமளிப்பதற்காக அழைக்கப்பட்டுள்ளார்.

இதுவரை பாதுகாப்பு செயலாளர் சாந்த கோட்டேகொட தேசிய புலனாய்வு பிரிவின் தலைமை அதிகாரி டி.ஐ.ஜி. சிசிர மெண்டிஸ் மற்றும் நாலக டி சில்வா, பூஜித் ஜயசுந்தர ஆகியோரிடம் சாட்சியம் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## வீதியில்...

வசிக்கும் சதாசிவம் சிவகுமார் (வயது 45) என்பவர் கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் கோண்டாவில் குட்செட் வீதியில் உள்ள தனது தாயாரை பார்க்க யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை வீட்டில் இருந்து வீதியை கடக்க முற்பட்டபோது வீதியில் போடப்பட்டிருந்த சல்லி கற்களில் சறுக்கி கீழே விழுந்துள்ளார். நெற்றியில் கல் குற்றி படுகாயமடைந்து அந்த இடத்திலேயே மயக்கமடைந்துள்ளார்.

வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது அவரை பரிசோதித்த வைத்தியர்கள் அவர் உயிரிழந்துவிட்டதாக தெரிவித்துள்ளனர்

இது தொடர்பான மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

## தொடரும் தமிழர்...

அபிவிருத்திக் குழுக்கூட்டத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர், "நாட்டில் ஸ்திரத்தன்மையை வலுப்படுத்த அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதை நான் வலியுறுத்துகின்றேன்.

கடந்த 30 ஆண்டுகால ஆயுத போராட்டத்தில் தமிழ் மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகினர். அப்படி ஒரு நிலை மீண்டும் ஏற்படக்கூடாது.

எனவே தற்போது மக்களின் முக்கியமான பிரச்சினைகளுக்கு இன்னமும் தீர்வு ஒன்று எட்டப்படவில்லை. அதற்கு உரிய தீர்வு வழங்கப்பட வேண்டும்.

எனவே அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என இங்கு கோரிக்கை விடுக்கின்றேன்.

அத்தோடு இப்பகுதியில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளவும் அனைவரது ஒத்துழைப்பும் அவசியம்" என இரா.சம்பந்தன் கூறினார். (ம-3)

## அமைச்சரவைக்...

கடிகளை ஏற்படுத்தும் என பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்ற தெரிவு குழுவின் செயற்பாடுகள் பாராளுமன்றத்தில் பாரம்பரிய கோட்பாடுகளுக்கு அப்பாற்பட்டு எல்லை மீறி செல்கின்றது. தேசிய பாதுகாப்பு தொடர்பிலான இரகசியங்களை பொதுமக்கள் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டிய அவசியம் கிடையாது. இராணுவ மற்றும் தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய இரகசிய தகவல்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

தகவலறியும் சட்ட மூலத்தை அடிப்படையாகக் கொண்டு பாராளுமன்ற தெரிவு குழு வரப்பு மீறி செயற்படுவதை ஜனாதிபதி சுட்டிக்காட்டியும் அதனை பொருட்படுத்தாமல் செயற்படும் நிறைவேற்று அதிகாரத்தை அவமதிப்பதாக அமையும்.

மீண்டும் சட்டத்துறைக்கும், நிர்வாகத் துறைக்கும் இடையில் அரசியல் நெருக்கடியினை ஏற்படுத்தும் நடவடிக்கைகளே முன்னெடுக்கப்படுகின்றன என அவர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## மு.க.ஸ்டாலின்...

ந்து கொள்ள சென்றுள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம், தி.மு.க.தலைவர் மு.க.ஸ்டாலினை நேற்று சந்தித்துப் பேசினார்.

சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பாக இருவரும் கலந்துரையாடியதாக தெரிவிக்கப்பட்டது. (ம-3)


**வலம்புரி**
**விளம்பரத் தொடர்புகளுக்கு**
**021 221 7603**
**021 567 1532**

**விசேட இறுதிக் கருத்தரங்கு**
சிறைக்காவலர்
ஜெலர் - II
புனர்வாழ்வு
உத்தியோகத்தர்
செவ், புதன், வியாழன்
பி.ப 3.30 - 6.30
வட மாகாண
முகாமைத்துவ
உதவியாளர்
செவ்வாய், வியாழன்
பி.ப 4.00 - 6.30
0766883394
யாழ்.ஆஸ்பத்திரி வீதியில்
பஸ் நிலையத்திலிருந்து
100M தூரத்தில்

**கார், வான் வாடகைக்கு தேவை**
கார்கள், வான்கள் மாதாந்த குத்தகை அடிப்படையில் சாரதி அல்லாமல் நீண்ட கால குத்தகைக்கு தேவை (9002)
**071 093 8967**

**வேலையாட்கள் தேவை**
ஓவ் செற் பிறிண்டஸ் ஒன்றுக்கு கணனி எழுத்தமைப்பு தெரிந்த பெண் வேலையாட்கள் தேவை. (9089)
தொடர்புகளுக்கு
**0773068982, 0212226722**

**பகிரங்க ஏல விற்பனை**
வருடாந்த பொருள் கணக்கெடுப்பில் விற்பனைக்கு தீர்மானிக்கப்பட்ட பொருட்கள் 25.06.2019 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 10.00 மணிக்கு பாடசாலையில் ஏலவிற்பனை நடைபெறவுள்ளது. பொருட்களின் விபரம் பாடசாலை நேரத்தில் அதிபர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
அதிபர்,
யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்,
திருநெல்வேலி. (C-6651)

**வேலைவாய்ப்பு**
இலங்கையின் பிரதான நிதி நிறுவனத்தில் நெல்லியடிக் கிளையில் உடனடி வேலைவாய்ப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. க.பொ.த (சாதாரண) தரத்தில் கணிதம் மற்றும் தமிழ் மொழி உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். (9091)
தொடர்புக்கு: 076 408 9435
077 803 9320, 075 269 0188

**ஜப்பான் - மலேசியா - கட்டார்**
வீட்டுப் பணிப்பெண்கள் | சம்பளம் (ரூபா) 52,800 - 122,250
உணவு, மருத்துவம், காப்புறுதி, விமானச்சீட்டுக்கள் இலவசம்
0777 324 004 ☎ 021 221 9 221
**எமரல்ட் ஐல்** License No. 2268
முற்றிலும் இலவச பயணம்
221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
(ஷாரா புடவையகம், The Lovers/Teen Girlsக்கு அருகே)
www.emeraldisle.lk email jaffna@emeraldisle.lk

**விரைவு பொதிகள் சேவை**
**விசேட விலை குறைப்பு**

DELIVERY IN 3-5 DAYS
UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
0768226240
●மானிப்பாய் ●யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ●சாவகச்சேரி ●நெல்லியடி ●பருத்தித்துறை ●வல்வெட்டித்துறை
V2 TRAVELS

**வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை**
இப்பொழுது!!!
மிகக்குறைந்த கட்டணத்தில்
UK - 350/=
France, Germany, Italy, Denmark - 500/=
**திருமுருகன் கொம்நெற்**
321, K.K.S.Road, Jaffna. (C-6656) **0777 554 528**

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
**ராஜ் நகை மாடம்**
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: ராஜ் - 077 679 6623 (9098)

**நெல்லியடியில்...**
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை.
UK - 525.00, Germany - 675.00, France - 830.00
நிபந்தனைகள் எதுவும் இல்லை
**அருள்** இல.1, பெற்றோல் செற் லேன், நெல்லியடி.
076 443 1576

FLC FRENCH LANGUAGE CENTRE

**பிரெஞ்ச்**
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 22.06.2019 சனி காலை 10 மணி
181, பிரதான வீதி, நெல்லியடி 0779 789 456 / 0762 669 614 ஆரம்பம் : 24.06.19 3.30 pm
திருமணமாகி U.K. செல்வோருக்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.